விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

உலகெங்குமுள்ள உறவு
களுக்கு உடனுக்குடன்
கடிதங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
உடு புடைவைகள்
CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-2842)

# வலம்புரி

*Valampurii*

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 16 புதன்கிழமை (02.12.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 348

# யுத்தத்தில் வென்றாலும் சமாதானம் தோல்வியே!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சுட்டிக்காட்டு

(கொழும்பு) இராணுவ ரீதியில் யுத்தத்தை வெற்றி கொண்டுள்ள போதிலும் இயல்பான சமாதானம் இன்னமும் தோல்வியையே சந்தித்து வருவதாக தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, யுத்தக் குற்றம் தொடர்பிலான அனைத்து விசாரணைகளையும் உள்ளக ரீதியிலேயே முன்னெடுக்க இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியை குழப்புவதற்கு திட்டமிட்டு பல சதிகள்

### விழிப்படைந்திருக்குமாறு விக்னேஸ்வரன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

எமது வடபகுதியின் மூலதன மாக விளங்கக்கூடிய கல்வியைக் குழப்புவதற்கு திட்டமிட்ட பல சதிகள் நடைபெற்று வருவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் முருங்கன் மகா வித்தியாலயத்தின் தொழில்நுட்பப் கட்டடத் தொகுதி திறப்பு விழா நேற்றையதினம் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பாடசாலை மாணவர்களிடையே தற்போது துர்ப்பழக்கங்கள் சில

23ஆம் பக்கம் பார்க்க....

## விக்னேஸ்வரன் ஒரு வரப்பிரசாதம் தலைமையைக் கொடுக்க நான் தயார்

### ஆனந்தசங்கரி அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒருவரப்பிரசாதம். அவர் சம்மதித்தால் அடுத்த நிமிடமே தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியை கொடுப்பதற்கு தான் தயாராக இருப்பதாக அக் கட்சியின் செயலாளர்நாயகம்வீஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அத்துடன் முதலமைச்சர் கை காட்டுபவருக்கு தன்னுடைய செயலாளர் பதவியையும் வழங்கத் தயார் எனவும் அறிவித்துள்ளார்.

இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழாங்

23ஆம் பக்கம் பார்க்க...

## விழிப்படைந்திருக்குமாறு விக்னேஸ்வரன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

எமது வடபகுதியின் மூலதன மாக விளங்கக்கூடிய கல்வியைக் குழப்புவதற்கு திட்டமிட்ட பல சதி கள் நடைபெற்று வருவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் முருங்கன் மகா வித்தியாலயத்தின் தொழில்நுட்பப் கட்டடத் தொகுதி திறப்பு விழா நேற்றையதினம் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற் றுகையில், பாடசாலை மாணவர் களிடையே தற்போது துர்ப்பழக்கங் கள் சில 23ஆம் பக்கம் பார்க்க....

## ஆனந்தசங்கரி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒருவரப்பிரசாதம். அவர் சம்மதித் தால் அடுத்த நிமிடமே தமிழர் விடு தலைக் கூட்டணியின் தலைமைப் பதவியை கொடுப்பதற்கு தான் தயா ராக இருப்பதாக அக் கட்சியின் செயலாளர்நாயகம்வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அத்துடன் முதலமைச்சர் கை காட்டுபவருக்கு தன்னுடைய செய லாளர் பதவியையும் வழங்கத் தயார் எனவும் அறிவித்துள்ளார்.

இணையத்தள ஊடகம் ஒன் றுக்கு வழங் 23ஆம் பக்கம் பார்க்க....



## கனமழை நீடிக்கும்

(கொழும்பு)

இலங்கையில் வடக்கு மற் றும் தமிழகத்தின் பகுதிகளில் 2 முதல் 3 நாட்களுக்கு கனமழை நீடிக்கும்எனசென்னை வானிலை ஆய்வுமையம் அறிவித்துள் ளது.

சென்னையில் நேற்று (செவ் வாய்க்கிழமை) செய்தியாளர் களை சந் 23ஆம் பக்கம் பார்க்க....

## உலக எயிட்ஸ் தினத்தில் கைதிகள் விழிப்புணர்வு பேரணி



(யாழ்ப்பாணம்)

உலக எயிட்ஸ் தினத்தை (டிசம் பர் முலாம் திகதி) முன்னிட்டு யாழ் மாவட்டசிறைச்சாலையில் உள்ள கைதிகளால் விழிப்புணர்வு பேரணி ஒன்று நேற் 24ஆம் பக்கம் பார்க்க....

## இந்திய இராணுவ தளபதியின் வடக்குக்கான விஜயம் ரத்து

### சீரற்ற காலநிலை காரணமாக

(கொழும்பு)

இலங்கைக்கு பயணம் மேற் கொண்டுள்ள இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் தல்பீர் சிங் சுஹக் நேற்று யாழ்ப்பாணம் செல்லத் திட்டமிட்டிருந்த போதிலும், அந்தப் பயணம் கடைசி நேரத்தில் கைவிடப் பட்டுள்ளதாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதர கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்தில் கொட்டி வரும் கன மழையினாலேயே இந்திய இராணு வத் தளபதி 23ஆம் பக்கம் பார்க்க....

## மந்திரிமனைக்குள் ஆணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் மந்திரிமனைக் குள் இருந்து நேற்றையதினம் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

சின்னத்துரை குணரட்ணம் (வயது 65) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார், குறித்த நபர் பல வருடங்களாக தனது குடும் பத்தை பிரிந்து இருப்பதுடன் நல் லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்னால்யாசகம்பெற்றுவந்துள்ள தாக தெரியவருகின்றது.

பிரஸ்தாப நபர் உயிரிழந்த சம்பவம் 23ஆம் பக்கம் பார்க்க....

## சித்திரவதை

### வரணியில் நடந்ததாக சுரேஸ் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வரணி பகுதி யில் இராணுவத்தின் 526 ஆவது படையணி நிலைகொண்டிருந்த வரணி படைமுகாமில் தமிழ் இளைஞர்களை தடுத்து வைத்து சித்திரவதைகள் இடம்பெற்றுள்ள தாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ். பிரேமச்சந் திரன் தனது முகப்புத்தகத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவக் 23ஆம் பக்கம் பார்க்க....

## மோல்டா, பிரான்ஸ் பயணத்தை முடித்து நேற்று நாடு திரும்பினார் ஜனாதிபதி




(கொழும்பு)

மோல்டாவில் இடம்பெற்ற பொது நலவாய அரச தலைவர்களது மாநாடு-2015 மற்றும் பிரான்ஸில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் கால நிலை உச்சிமாநாடு-2015 ஆகிய மாநாடுகளில் கலந்துகொண்ட ஜனாதிபதி 23ஆம் பக்கம் பார்க்க....

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## செல்வி மரியாம்பிள்ளை ஷர்மிலி
## (இலங்கை நிர்வாக சேவை தரம் III)



2013/2014 நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை தரம் IIIஇல் சித்தியடைந்த இவர் தற்போது முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரை அப்பா, அம்மா, தம்பி, தங்கை, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சாதனைகள் புரிந்து பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

இவர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மரியாம்பிள்ளை-தவராசமணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாவார்.

வாழ்த்துவோர்:-சி.நடராசா (மாமா)
ஓய்வுநிலை அதிபர்
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(2623)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அணிகளுக்கான புகைப்படம்-2015

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அணிகள் மற்றும் விளையாட்டு அவைக்கான 2015ஆம் ஆண்டுக்கான புகைப்படங்கள் 05.12.2015 (சனிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விளையாட்டு அணிகள் மற்றும் விளையாட்டு அவை அங்கத்தவர்களை தவறாது சமுகமளிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பதிவாளர்
01.12.2015

(சி-2845)

# கஞ்சாவுடன் கைதான நபரின் பிணை விண்ணப்பம் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பாரியதொகை கஞ்சாவை உடமையில் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் பிணை விண்ணப்பம் யாழ்.மேல் நீதி மன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கச்சேரி வீதியை சேர்ந்த நபர் ஒருவர் 81 கிலோ 485 கிராம் பெறு மதியுடைய கஞ்சாவை தனது உடமையில் வைத்திருந்ததாக கடந்த 2014ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 16ஆம் திகதி இளவாலைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வந்தது.

குறித்த சந்தேக நபருக்கான பிணை விண்ணப்பம் யாழ்.மேல் நீதிமன்ற நீதி பதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்றையதினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது கருத்து தெரிவித்த நீதிபதி. வழமையாக போதைவஸ்து கட்டளைச் சட்டத்தின்படி விதிவிலக்கான க்ாரணங்களுக்கு மட்டுமே பிணை வழங்க மேல் நீதிமன்றுக்கு சட்டம் பரிந்துரை வழங்கியுள்ளது.

குறித்த வழக்கை எடுத்துக் கொள்ளும் போது மனுவில் விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் நீதிமன்றை திருப்திப்படுத்தும் வகையில் முன்வைக்கப்படவில்லை.

அத்துடன் பாரியதொகை கஞ்சாவை உடன் வைத்திருந்ததாக பொலிஸாரின் குற்ற விசாரணை அறிக்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ளமையால் சமூகநலன் கருதிகுறித்த மனுதாரரின் பிணை விண்ணப்பம் மன்றினால் நிராகரிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

(செ-9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# 64ஆவது அகவையில்....

## எம் தந்தை
## திரு.வாமதேவா தியாகேந்திரன்



மார்கழி மாதத்திலே மலர்களுள் ஒரு மலராய் மலர்ந்த எம் தந்தையே!
துன்பத்தில் உள்ளவர்களுக்கு துணையாகவும்,
துயரத்தில் உள்ளவர்களுக்கு ஆறுதலாகவும்
உதித்தீரே, இம் மண்ணில்! வாழ்த்துகின்றோம் சிறுவர் நாம்.

ஏழ்மையில் பிறந்த எம் போல் பல குழந்தைகளுக்கு
அன்பாய் ஓர் இல்லம் அமைத்த எம் தந்தையே!
எம் கண்கள் உமைத் தேடுதே எம் கால்கள் உமை நாடுதே!
தந்தையே உங்கள் இல்லம் வந்தால் சுகம் கூடுதே!

தனக்கென வாழும் இவ்வுலகில்
பிறருக்காக வாழ்ந்து கொண்டிருக்கும் எம் தந்தையே!
செந்தாமரை போன்ற சிவந்த முகமும்,
வெண்டாமரை போன்ற வெள்ளை உள்ளமும்
கொண்ட எம் தந்தைக்கு பல கோடி வாழ்த்துக்கள்!

பிள்ளைகள் நாம் பிஞ்சு உள்ளங்களால் வாழ்த்துகின்றோம்....

வாழ்த்துவோர்:-முகாமையாளர், பணியாளர்கள், சிறுவர்கள்
ரிசிரி சிறுவர் இல்லம்.
595, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-2846)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




(C-2849)

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1013 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781

No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 05.12.15 சனி 8 மணி
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 07.12 @ 4pm.
கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 09.12 @ 4pm

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

கல்வியில் புதிய சகாப்தம் படைப்போம்
றோயல் அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம். நாவலர் வீதி, நல்லூர்.

தரம் 6 முதல் O/L வரை

தமிழ் & ஆங்கில மொழிமூல வகுப்புகள்

ஆரம்பம்
06.12.2015
ஞாயிற்றுக்கிழமை

→ புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு விசேட ஊக்குவிப்புக்கள் உண்டு

தொடர்புகளுக்கு : 0776649134

யாழ்நகர் 07.30 a.m | நல்லூர் 10.30 a.m

# வடக்கில் வன விஸ்தரிப்புப் போர்வையில் நில அபகரிப்பு சத்தமில்லாமல் ஆரம்பம்

## சுற்றாடல் அமைச்சர் சுட்டிக்காட்டு

வடக்கில் வனவிஸ்தரிப்பு எனும் பெயரில் எமது நிலங்களை அபகரிக்கும் நடவடிக்கைகள் சத்தமில்லாமல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

மாற்றம் நிறுவனத்தின் நிலமும் நாங்களும் எனும் தொனிப்பொருளில் நிலம் பற்றிய ஆய்வறிக்கை வெளியீடு நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு மாகாணத்தில் மொத்த நிலப்பரப்பில் 50 வீதமான பகுதிகள் காடுகளாக இருக்கின்றன. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 20 தொடக்கம் 22 வீதமான பகுதிகள் காடுகளாக இருக்கின்ற நிலையில் வடக்கில் இருக்கும் 50 வீதமான காடுகளை காப்பாற்ற இலங்கை அரசாங்கம், முயற்சிக்கிறது. இது ஒரு வகையான சூழலியல் ஏகாபத்தியம் ஆகும்.

எமது மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் அவர்களுடைய இருப்பிடங்கள் அனைத்தும் இரண்டாம் தரக் காடுகளாக உருவாக்கியுள்ளன. ஆனால் அவர்களுக்கு அக்காணிக்கான உறுதிகள் இருக்கின்றன.

ஆனால் அவற்றையெல்லாம் காடுகளாக்கி கையகப்படுத்தும் நிகழ்வு நடைபெறுகின்றது. வடக்கில் உள்ள 5 மாவட்டங்களிலும் அதாவது மன்னாரில் வங்கால பறவைகள் சரணாலயம் ஒன்றும் யாழ்.மாவட்டத்தில் சுண்டிக்குளம் சரணாலயம் ஒன்றும் இவ்வாறு வடக்கில் ஏராளமான நிலப்பரப்புக்கள் மக்களிடம் இருந்து அவர்களுடைய உறுதிக் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

ஒரு புறம் நாங்கள் இராணுவத்தை வெளியேறுமாறு குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் தருணத்தில் மறுபுறம் எமது நிலங்கள் பலவந்தமாக அபகரிக்கப்படுகின்றன.

உலக நாடுகளும் இது தொடர்பாக கண்டு கொள்ளாத நிலை காணப்படுகின்றது. ஏனெனில் காடுகளை பாதுகாப்பது நன்மை என்ற கருத்து அனைவரிடமும் காணப்படுகிறது. எமது நில மீட்புக்களை போராட்டத்தில் வனம் எனும் பெயரில் சரணாலயம் எனும் பெயரில் எமது நிலங்கள் கையகப்படுத்தப் படுகின்றன என்பது தொடர்பாக விழிப்புடன் நாம் இருக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# வடமராட்சி பகுதியில் நேற்று இரவு திருட்டு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பகுதியில் நேற்று இரவு சில திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் இரு இடங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய அல்வாய் கிழக்கு கண்டாவத்தை கிழக்கு வைரவர் ஆலயத்தின் முன் தகவு உடைக்கப்பட்டு 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெறுமதியுடைய கோவில் பித்தளைப் பொருட்கள் திருடிச் செல்லப்பட்டன.

இதேவேளை துன்னாலை தாமரைக் குளத்தடிக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 9 சீமெந்து பைக்கற்றுக்கள், சீமெந்து கல் அரியும் அச்சு, மண்வெட்டி ஒன்றும், 50 தேங்காய் என்பன திருடிச் செல்லப்பட்டன.

இத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-60)

# பரமேஸ்வராவின் பரிசளிப்பு இன்று

யாழ்.பரமேஸ்வரா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணியளவில் ஆடியபாதம் வீதியிலுள்ள சிவகாமி மஹாலில் பாடசாலை அதிபர் ந.விஜயசுநதரம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக சிவகாமி மஹால் இயக்குநர் த.பகீரதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-10)

# தகவல் அறியும் சட்டமூலம் 2016இல் நிறைவேற்றப்படும்

## பிரமதர் ரணில் திட்டவட்டம்



(கொழும்பு)

**தகவல் அறிந்துகொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான சட்டமூலம் அடுத்த வருடம் நிறைவேற்றப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.**

அரச ஊடகங்களை அரச நடவடிக்கைகளுக்காக நாம் பயன்படுத்தவில்லை. கடந்த காலங்களில் எமது காரியாலயங்களில் சேவையாற்றிய அதிகாரிகளுக்குக் கூட ஊடகங்களின் கதவுகள் மூடப்பட்டிருந்தன. தனியார் ஊடகங்கள் பாரிய அழுத்தங்களுக்குள்ளாகின.

ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். காணாமலாக்கப்பட்டனர். கைகால் உடைக்கப்பட்டனர். அதனால் பலர் நாட்டை விட்டு வெளியேறினர். சிலர் அமைதியாக ஒதுங்கிக்கொண்டனர்.

இன்னும் சிலர் அடங்கிப் போயினர். ஆனால் இன்று சுதந்திரத்தை நாம் உருவாக்கிக் கொடுத்துள்ளோம் என்று பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மாகாணக் கண்காட்சி

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் நடத்தும் செய்வோம் செய்விப்போம் என்ற தொனிப்பொருளில் அமைந்த மாகாண கண்காட்சி 3,4 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுகள் வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ள ஆரம்பநாள் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வட மாகாண போக்குவரத்து மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் மற்றும் வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார். நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள இரண்டாம் நாள் நிகழ்வு பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண போக்குவரத்து மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக வடமாகாண போக்குவரத்து மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# கடற்படையின் டோறா படகு மோதி குடும்பஸ்தர் உயிரிழந்த வழக்கு 15 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கடலில் மீன்பிடித்து கொண்டிருந்த குடும்பஸ்தரை கடற்படையின் டோறா படகு மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழந்தமை தொடர்பான வழக்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி காரை நகரில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்றொழிலாளி மீது கடற்படையின் டோறா படகு மோதியதில் கொல்லப்பட்டார்.

இதில் எழுவைதீவு நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த 4 பெண்பிள்ளைகளின் தந்தையான அலெக்ஸ்சாண்டர் அன்ரனி ஜேசுதாசன் (வயது 61) என்பவரே கொல்லப்பட்டிருந்தார்.

இச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் மீண்டும் ஊர்காவற்றுறை நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன் போதும் அரச பகுப்பாய்வு திணைக்களத்தின் அறிக்கை கிடைக்கப்பெறாமையால் வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி தவணையிடப்பட்டுள்ளது.

குறித்த குடும்பஸ்தருக்கு 4 பிள்ளைகள் உள்ள போதிலும் தாயும் ஏற்கனவே உயிரிழந்துள்ளார்.

இதனால் தாய்,தந்தையர் அற்ற நிலையில் வாழும் 4 பெண்பிள்ளைகள் தரப்பில் தந்தையின் இழப்பிற்கு நட்டஈடாக ரூபா 10 இலட்சம் கோரப்பட்டுள்ளது.

எனினும் ஒரு கப்பலும் இஞ்சினும் ஒரு இலட்சம் ரூபா பணமுமே தருவதாக கடற்படை கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா கொலை வழக்கின் சந்தேக நபர்களின் இரத்த மாதிரி நுணுக்கமாக ஆராய்வு

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகள் நுணுக்கமாக ஆராய வேண்டியிருப்பதனால் மரபணு பரிசோதனைகள் தாமதமடைவதாக ஊர்காவற்றுறை நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா கொலை வழக்கு நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ் வழக்கின் போது மேற்படி வழக்கின் சந்தேக நபர்களது மரபணு பரிசோதனை முடிவுகள் சமர்ப்பிக்கப்படாத நிலையிலேயே நீதவான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனினும் முடிந்த வரையில் விரைவாக சமர்ப்பிக்கப்படும் என குறித்த வழக்கின் புலனாய்வு பிரிவினர் கூறியுள்ளனர்.

நேற்றையதினம் குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி தரப்பில் மரபணு பரிசோதனைகள் முடிவுகள் சமர்ப்பிக்கப்படாமை குறித்து கேள்விக்குப்படுத்தப்பட்டது. குற்றத்தில் பலர் சம்பந்தப்பட்டுள்ளதனால் மரபணு பரிசோதனைகள் நுணுக்கமாக ஆராயப்பட வேண்டியிருப் பதனால் பரிசோதனை முடிபுகள் கிடைக்கப் பெறவில்லை.

இது தவிர சந்தேக நபர்கள் பயன்படுத்திய கைத்தொலைபேசியினை மடிக்கணனிகள் தொடர்பான அறிக்கையும் கிடைக்கப்பெறவில்லை என நீதவானால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்படி இரு அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டதனையடுத்தே சட்டமா அதிபர மேலதிக அறிக்கையினை தாக்கல் செய்ய முடியும் என சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி குமார் குணரட்ணம் தெரிவித்தார்.

கடந்த வழக்குத் தவணையின் பின்னர் அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்திடம் தொடர்பு கொண்டதாகவும் குற்றத்தில் சம்பந் தப்பட்டுள்ளதனால் நுணுக்கமாக ஆராயபட வேண்டியுள்ளதனாலேயே மரபணு பரிசோதனை முடிபுகள் தாம தமடைவதாக பகுப்பாய்வு திணைக்களம் பதிலளித்ததாக நீதவான் கூறினார்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் ஒன்பது பேருக்குமான விளக்கமறியல் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விதிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532


## மரண அறிவித்தல்



### திருமதி
### இலட்சுமி நடராஜா

8ம் வட்டாரம் வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது வளசர வாக்கம் சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி நடராஜா 29.11.2015 அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா (துரைசாமி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சொக்கலிங்கம்-தங்கம்மாவின் அன்பு மகளும், பாலச்சந்திரன், நந்தன் (யாழ்ப்பாண கோணந் தோட்டம்), காலஞ்சென்ற சண்முகரட்ணம், சற்குணம் (டென்மார்க்), அருட்செல்வம் (டென்மார்க்), அருட்சோதி (இந்தியா), நாகேஸ்வரி (ஜேர்மனி), திருச்செல்வம் (லண்டன்) ஆகியோரின அன்பு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வளசர வாக்கத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி:-
00919952946016
சென்னை

தகவல்:-
குடும்பத்தினர்.

(2626)

## Job opportunity

**Association for health and counseling 'shanthiham"**

Association for health and counseling 'shanthiham" is a non Governmental organization committed to support the wellbeing and positive mental health persons, families and communities through providing Psychosocial and community based psychosocial services including trainings, public systems building and Capacity building. Shanthiham is seeking applications from potential candidates for the following positions.

**1. Manager-Programs**

Specific Responsibilities:-Disseminate the MH policy among partners and monitor practices, regarding children in all activities related to the project

Period : For a period of one year, with three months probationary period.

**Person Specification:-**

**Essential**

- *Post graduate/Graduate Degree in Social Sciences or equivalent.
- *About 5 years experience in development organizations.
- *Analytical skills and experience in project planning and filed experience in programme management.
- *Experience in fund raising, advocacy initiaves.
- *Skills related to participatory research methods, computer literacy, financial management and report writing
- *Command of written and spoken English with fluency in one or more of the local languages.
- *Ability and willingness to travel to all parts of the country
- *Strong interpersonal skills with special emphasis on managing teams.

**ii. Finance manager**

Educational/Professional Qualification and experience:-

University Degree in B.com/BBA(Accounting) or H.N.Dip in Accy(ATI) or passed CA, ACCA or other equivalent professional bodies intermediate level or more With minimum five years experience as an Accountant finance manager in GO/NGO or other reputed firms?

**Retired Government officials also encourage to apply.**

**iii. Counsellors on call basis**

All the above positions are filed on self motivated, committed applicants will be given priority. only sort listed candidates will be invited for an interview. You will be notified by 15th December 2015 if you are sort listed.

Applicants are requested to send their updated CV s with a covering note, with a range of your salary expectations, with contact details of three non related referees to the following address:-

No email or telephone conversations please.

The Executive Director
Association for health and Counselling "Shanthiham"
8,8/1 katpakavinayakar lane,
Off kachcheri nallur Road, Jaffna.

(C-2843)

**Deadline for the submission of the CVS not later than 11th December 2015 12.00 Noon**

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கரவெட்டி மீள் கேள்வி அறிவித்தல்-2016

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள் இறைச்சிக்கடைகளுக்கான மீள்கேள்விகள் 13/11/2015ம் திகதிய தினக்குரல், வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதி திகதி :-14/12/2015 பி.ப 3.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி :-15/12/2015. காலை 10.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி :-15/12/2015 காலை 10.30 மணி

### மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1. | நெல்லியடி மரக்கறிச் சந்தை - துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட (அங்காடி நீங்கலாக) | 674975.00 | 67500.00 | 1000.00 | - |
| 2. | கொட்டடிச்சந்தை | 5225.00 | 500.00 | 500.00 | - |
| 3. | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 747650.00 | 7500.00 | 500.00 | 100.00 |
| 4. | கோயிற்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 427500.00 | 4300.00 | 500.00 | 100.00 |
| 5. | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 63650.00 | 650.00 | 500.00 | 100.00 |
| 6. | கோயிற் சந்தை கோழியிறைச்சிக் கடை | 237975.00 | 2400.00 | 500.00 | 100.00 |
| 7. | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 504450.00 | 5100.00 | 500.00 | 100.00 |
| 8. | நெல்லியடி மீன் சந்தை | 678300.00 | 6800.00 | 500.00 | 100.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 9. | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 769500.00 | 7700.00 | 500.00 | 100.00 |
| 10. | சாண்டா சந்தை கோழிக்கடை | 62700.00 | 650.00 | 500.00 | 100.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 11. | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 44650.00 | 500.00 | 500.00 | 100.00 |

க.கனகதுரை
செயலாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.
01/12/2015.

(சி-2848)

## வாழ்வின் முக்கிய விடயத்தை கிரிக்கெட் கற்றுக்கொடுத்தது

### மஹேல உருக்கம்

கிரிக்கெட் விளையாட்டு தனது வாழ்க்கையில் சில முக்கிய பாடங்களை கற்றுக் கொடுத்ததாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் ஜெயவர்த்தன கூறியுள்ளார். இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் ஜெய வர்த்தன இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் இடைக்கால துடுப்பாட்ட பயிற்சியாளராக உள்ளார்.

இந்நிலையில் கிரிக்கெட் தொடர்பாக பேசிய அவர், நான் கிரிக்கெட்டை ரசித்து ஆடுகிறேன். வெற்றி, தோல்வி, உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவது, ஏமாற்றம், மகிழ்ச்சி என பலவற்றை அதில் இருந்து கற்றுக் கொண்டேன். அதேசமயம் எனது தனிப்பட்ட வாழ்க்கையுடன் கிரிக்கெட்டை இணைக்க கூடாது என்பதையும் அறிந்து கொண்டேன். கிரிக்கெட் எனது இதயத்துடிப்பை போன்றது. பலதரப்பு மக்களும் கிரிக்கெட்டை ஆர்வமாக பார்த்து ரசிக்கின்றனர்.

நான் இலங்கை அணிக்காக விளையாடியதை பெருமையாக நினைக்கிறேன். அந்த நாட்கள் மறக்க முடியாத ஒன்று என்று கூறியுள்ளார். மேலும், பல முக்கியமான போட்டிகளில் இறுதிப் போட்டியில் வந்து தோல்வி பெற்றது எப்போதும் ஏமாற்றம் தந்ததாகவும், 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை இறுதிப் போட்டியில் தவறவிட்டது அதிக ஏமா ற்றம் அளித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அதே போல் 2014ஆம் ஆண்டு இருபது-20 உலகக்கிண்ணத்தை வென்றது தனது கிரிக்கெட் வாழ்க்கையில் சிறந்த தருணம் என்று குறிப்பிட்ட ஜெயவர்த்தன, அது ஒட்டுமொத்த அணியின் உழைப்பு என்றும் கூறியுள்ளார். (க)

## கொட்டகைக்குள் குடை பிடித்து பரீட்சை எழுதும் மாணவர்கள்



முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரணைப்பாலை ரோமன் கத்தோலிக்க மகாவித்தியாலய மாணவர்கள் குடை பிடித்தவாறு பரீட்சை எழுதும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள ஓலைக் கொட்டகைக்குள் வகுப்புக்கள் நடைபெற்று வந்த நிலையில், அக் கொட்டகைக்குள்ளேயே தற்போது மாணவர்களுக்கு மூன்றாம் தவணை பரீட்சை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தற்போது வடக்கில் பெய்து வரும் கடும் மழைக்கு ஓலைக் கொட்டகைகள் ஈடு கொடுக்க முடியாது அதனுள் மழை நீர் ஒழுக ஆரம்பித்து உள்ளது. அதனால் கொட்டகைக்குள் இருந்து பரீட்சை எழுதும் மாணவர்கள் குடை பிடித்த வாறே பரீட்சை எழுதும் இடரினை எதிர்நோக்கியுள்ளனர். (செ-12)

# லொறி விற்பனைக்கு

226-xxxx Swaraj Mazda 350 கெண்டர் (லொறி) விற்பனைக்கு உண்டு. நீளம் 18 அடி

தொடர்புகளுக்கு:-0773048648, 0212280006

(சி-2837)



# PHARMACISTS (EXTERNAL) EXAM-March 2016

மேற்படி பரீட்சை 12.03.2016ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.பரீட்சைக்கான விண்ணப்ப இறுதித்திகதி 21.12.2015 ஆகும்.மருந்தாளர் வெளிவாரி பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் தற்போது யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்று வருகிறது.மீட்டல் வகுப்புக்கள் தை,மாசி மாதங்களில் நடத்தப்படவுள்ளது.பரீட்சை சம்பந்தமான தகவல்கள்,விண்ணப்பப்படிவங்கள் நேரடியாகவோ,தபால் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.தொடர்பு: மருந்தியலாளர் கற்கை நெறி, இணைப்பாளர்,யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரிப்பட்டப்படிப்பு) 464,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

(2620) T.P.0776256292


## கருணாநிதி கோரிக்கை

இந்திய இராணுவத் தளபதியின் விஜயத்தை பயன்படுத்தி, தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்என்று, முன்னாள் தமிழக முதல்வர் எம்.கருணாநிதி கோரியுள்ளார்.

இலங்கையில் 37 தமிழக மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்பில் உரையாற்றும் போது இந்த விடயத்தை கருணாநிதி கூறியுள்ளார். (இ-7)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## செல்வி கார்த்திகா மாயன்

[Bsc in Molecular Biology & Biochemistry, Msc in Bio informatic(Merit)]

கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம், கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவியும் கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞானமாணி மாணவியும் ஆகிய கார்த்திகா மாயன் அவர்கள் தற்போது IBMBB, கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது முதுமாணி பட்டத்தை (Msc in Bio informatics (Merit) நிறைவு செய்ததற்கான பட்டமளிப்பு இன்று BMICH இல் நடைபெறவிருப்பதால் அவரை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மென்மேலும் தனது ஆய்வுகள் மூலம் கிளிநொச்சி மாவட்டத்துக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.



நண்பர்கள்

(2584)



# மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.இராமநாதன் குணநாதன்

(தீவக கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

இன்று மணிவிழா காணும் எமதருமை நண்பா பல்லாண்டு பல்லாண்டு காலம் இன்றுபோல் என்றென்றும் இனிமையுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

செ.சேதுராஜா
பொ.அருணகிரிநாதன்
எஸ். சிவனேஸ்வரன்
அ.அகிலதாஸ்
க.அருந்தவபாலன்

(சி-2840) -நண்பர்கள்-



# கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா:12<br>உயரம்: 5’11"<br>தகைமை/தொழில்:பொறியியல் / தனியார் தொழில்<br>தொ.இ: B/5282 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 51<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்:IT/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/3199 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 53 செவ் 8 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:BSC/ஆசிரியர்<br>தொ.இ: B/5284 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 81சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:BSC/அரசதொழில்<br>தொ.இ: G/3200 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 22<br>உயரம்: 5’7’’<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/5291 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 67செவ் 12 இல்<br>உயரம்: 152cm<br>தகைமை/தொழில்:BSC/அரசதொழில்<br>தொ.இ: G/3207 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 25சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்:BBA/ ஆசிரியர்<br>தொ.இ: B/5292 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 19செவ் 8இல்<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/3224 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


# ராசி பலன்

02.12.2015
(கார்த்திகை 16, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.08மணிக்கு,
சப்தமி பின்னிரவு 3.14மணிவரை
ஆயிலியம் முற்பகல் 7.45மணிவரை
இராகுகாலம் 12.15-1.45மணிவரை
சுபநேரம் 4.45-6.15மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தராடம்<br>காலை 7.40இற்கு<br>சிம்-சந் | | |
| | | | குரு<br>சந் |
| புத | சூரி<br>சனி | சுக் | ராகு<br>செவ் |

**மேடம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்,பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசங்கள் கிடைக்கும் நாள்.

**இடபம்** வீட்டில் விருந்தினர் வருகையுண்டு, பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வாகனசுகமுண்டு.

**மிதுனம்** வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்,புதிய திட்டங்கள் கைகூடும்,புதிய பொருட் சேர்க்கையுண்டு,பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், குடும்பச்சுமை கூடும்,கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி** சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள், ஒரு வேலையை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், மனச் சஞ்சலங்கள் கூடும் நாள்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், தொழில் முன்னேற்றப்பாதையை நோக்கிச் செல்லும்,பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்,கௌரவமான நாள்.

**விருச்சிகம்** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்,தேகநலனில் முன்னேற்றமுண்டு,சேமிப்புக்கள் உயரும்.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்,தடைப்பட்ட காரியங்களை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள்,புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணத்தின்போது பொருட்களில் கவனம் தேவை.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்,இனிய அனுபவங்கள் ஏற்படலாம்,புதிய பொருட் சேர்க்கையுண்டு,குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**மீனம்** கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள், தேகநலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும்,பகைவர்கள் விலகுவர்,செய்தொழில் மேன்மையுண்டு,போசன சுகமுண்டு.

# யாழ்.மாவட்டத்தில் கலாசாரச் சீரழிவுகளைத் தடுக்க மதுபானசாலை உரிமையாளர்கள் முன்வரவேண்டும்

## மதுவரி திணைக்கள ஆணையர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் கலாசார சீரழிவுகளை கட்டுப்படுத்துவதற்கு மதுபானசாலை உரிமையாளர்கள் முன்வர வேண்டும் என மதுவரி திணைக்கள ஆணையாளர் ஏ.போதரகம வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் மதுபான பாவனையைக் குறைக்கும் நோக்குடன் வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க மதுவரித் திணைக்கள உயர் அதிகாரிகளால் யாழ்.மாவட்டத்தில் உள்ள மதுபானசாலை உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வு கருத்தமர்வு நேற்று முன்தினம் யாழ்.மதுவரித்திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒரு சமூகத்தின் கலாசார சீரழிவுகளுக்கு மதுபான பாவனையின் அதிகரிப்பும் காரணமாக அமைகிறது.

அதைத் தடுப்பதற்கு அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டியது அவசியமாகும்.

அந்தவகையில் மதுபான சாலை உரிமையாளர்களின் ஒத்துழைப்பும் மிக அவசியம் ஆகிறது. அதாவது இலாப நோக்கத்தோடு மட்டும் செயற்படாமல் சமூக விழுமியங்களுக்கு கட்டுப்பட்டும் நடக்க வேண்டும்.

அத்துடன் மதுவரி சட்ட திட்டங்களை கருத்தில்கொண்டு அதன்படி முறையாகநடக்கவேண்டியது அவசியமாகும். மதுபானசாலைகளுக்கு முன்னின்று கூட்டத்துடன் குடிப்பவர்களை அப்புறப்படுத்த வேண்டியது ஒவ்வொரு மதுபானசாலை உரிமையாளர்களினதும் பொறுப்பாகும். இதன்மூலம் பல சட்டவிரோத செயற்பாடுகளை மதுபானசாலை உரிமையாளர்களால் தடுக்க முடியும். கலாசார சீர்கேட்டினை கட்டுப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விழிப்புணர்வு கருத்தமர்வில் யாழ். மாவட்ட உதவி அரச அதிபர் ப.செந்தில்நந்தனன், மதுவரி ஆணையாளர்(குற்றம்) டபிள்யூ.டீ. மல்லவ மற்றும் 50க்கும் மேற்பட்ட மதுபானசாலை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர். (இ-9)

## மணிவிழா இன்று



தீவக உதவிக் கல்விப் பணிப்பாளர் இராமநாதன் குணநாதனின் மணிவிழா இன்று புதன்கிழமை நீர்வேலி திருமுருகன் திருமண மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறும். (இ-5)

# அரசாங்கங்களும் ராணுவமும் இணைந்தே மக்களின் வாழ்க்கையை பாழ்படுத்தி வந்தன

## வடக்கு மாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு




படங்கள்:- பொ.சோபிகா

அரசாங்கங்களும் இராணுவத்தினரும் மக்களின் ஒரு முக்கயமான தனியுரித்தைப் பறித்து வைதது்ப் பங்கம் ஏற்படுத்தி அவர்கள் வாழ்க்கைகளைப் பாழ்படுத்தி வந்துள்ளார்கள் என்பதை எல்லோரும் கேட்டறியுமாறு உரத்துக் கூற வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன தெரிவித்துள்ளார்.

மாற்றம் நிறுவனத்தின் "நிலமும நாங்களும்" எனும் தொனிப் பொருளில போருக்கு பின்னரான காலப் பகுதியில் வட பகுதியில் நிலம் பற்றிய ஆய்வறிக்கை வெளியீடு நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடை பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எமது பாரம்பரிய சமூகத்தைப் புகலிடம் அற்றவர்கள் ஆக்கவே பல நடவடிக்கைகள் அண்மைக்காலங்களில் எடுக்கப்பட்டு வருகின்றன

அதாவது 2009ம்ஆண்டு மே மாதம், யுத்தமானது முடிவுக்கு வந்தது. வடகிழக்கு மாகாணங்களுக்குப் படையெடுத்து வந்தவர்கள் யுத்தம் முடிந்ததென்று தங்கள் இடங்களுக்குத் திரும்பிச் செல்லவில்லை. எமது பாரம்பரிய நிலங்களில் பாரிய பகுதியைப் படைகள் தம் வசம் பற்றிவைத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள்.

அந் நிலங்களில் உரிமையுடன் வாழ வேண்டியவர்கள் நிராதரவாக, நிர்க்கதியினராக பிறர் நிலங்களில் அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் இருபது வருடங்களுக்கு மேலாக இவ்வாறான இடர் வாழ்க்கையில் இருந்து வருகின்றார்கள்.

இங்கு மட்டுமல்ல இந்தியாவிலும் இதர நாடுகளிலும் வாழும் இப்பேர்ப்பட்ட மக்கள் தமது பாரம்பரிய இடங்களைப் பறி கொடுத்து விட்டே அங்கு வாழ்ந்து வந்து கொண்டிருக்கின்றார்கள்.

தொடர்ந்து வந்த மத்திய அரசாங்கங்கள் துயருற்ற எமது அகதிகளுக்கு அண்மைக் காலமாகப் பல்வித உறுதிமொழிகளை அளித்து வந்திருந்தாலும் அவர்களைத் தத்தமது பாரம்பரியக் காணிகளில் மீள்குடியமர்த்துவதில் சிக்கல்களும் தாமதங்களுமே மிஞ்சி இருக்கின்றன.

இடம்பெயர்ந்த எம் மக்களைக் குடியமர்த்த வேண்டும் என்பதில் அதிகாரத்தில் உள்ளோருக்குப் போதிய கரிசனை இருக்கின்றதோ என்பதில் எமக்குச் சந்தேகமாக இருக்கின்றது. காணிகளை விடுவிப்போம் என்றார்கள். அதில் தாமதம். அரசியல் கைதிகளை விடுவிப்போம் என்றார்கள். இப்பொழுது விசேட நீதிமன்றம் அமைக்கப் போவதாகக் கூறுகின்றார்கள். ஆகவே எங்கள் சந்தேகங்கள் நியாயமானவை.

காணிகளை இராணுவம் கையேற்று வைத்திருப்பதை நான் காலத்தின் கோலமாகக் கருதவில்லை. காலாதிகாலமாகக் கரவாகக் கடையப்பட்ட கருத்துக்களின் கடை நிலையாகவே நான் அவர்களின் நடவடிக்கைகளைக் காண்கின்றேன்.

நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்க முன்னரே அரசகுடியேற்றங்கள் ஆரம்பமாகிவிட்டன. அதன் அர்த்தம என்ன என்று ஆராய்ந்தோமானால் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இடங்களில் இன அமைப்பில் மாற்றங்களை இழைக்க வேண்டும் என்ற இழிவான கரவெண்ணமே அக் குடியேற்றங்களின் காரணம் என்பது தெரிய வரும்.

இன அழிப்பு பற்றி நாங்கள் கொண்டுவந்த பிரேரணையை எதிர்ப்பவர்கள் இவை பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ் இளைஞர்கள் வன் முறையில் இறங்கியதைக் காரணமாகக் காட்டி இவ்வாறான இன விரட்டல் காரியங்கள் மேலும் உக்கிரப் படுத்தப்பட்டன.

பாதுகாப்பு நிலையங்களைச் சுற்றிய பிரதேசங்களை அண்டிய பல சதுர கிலோ மீற்றர் காணிகள் பாரம்பரிய மக்களை அங்கு குடியிருக்க விடாமல் தடுத்து வைக்கும் இடங்களாக மாற்றப்பட்டன. அது மட்டுமல்லாமல் இடைநிலைப் பாதுகாப்பு வலயங்கள் அல்லது Buffer Zones என்று கூறி மக்களை விரட்டிப் படையினர் கைவசம் அவர்களின் காணிகளைக் கையேற்கும் இன்னொரு கைங்கரியமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இராணுவ முகாம்கள் இருந்த இடத்தில் இருந்து ஆயிரம் மீற்றர் தூரத்திற்கு ஆட்கள் எவரும் இருக்கப்படாது என்று பிரகடனம் செய்ததால் பலாலி போன்ற இடங்களில் சுற்றுவட்டார மக்கள் யாவரும் குடிபெயர்ந்து செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இது உள்நாட்டில் காணிகளுக்கு ஏற்பட்ட விபத்து. மக்களுக்கு ஏற்பட்ட விரட்டு.

அதேபோல் கடற்படை கண்காணிப்பு வலயங்கள் வடக்கு, கிழக்கு, வடகிழக்குக் கரையோரப் பகுதிகளில் 1985ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்பட்டு கரையோரத் தமிழ்ப் பேசும் மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி இந்தியா போன்ற நாடுகளில் தஞ்சம் புக வேண்டி வந்தது.

ஒரு முக்கிய உண்மையை சிங்கள அரசியல்வாதிகள் என்றென்றும் மறந்து விடுகின்றார்கள். இரண்டாயிரம் ஆண்டுகாலம் வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் தான் பெரும்பான்மையினராக இருந்து வந்துள்ளனர. வேறெவரும் அங்கு அவ்வாறு பெரும்பான்மையினராக இருந்ததில்லை.

அவர்களுக்கென்று இராச்சியங்களும் இருந்தன. அப்படியிருந்தும் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களை மதிக்காது மேற்படி தீர்மானமானது ஜே.ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டது.

அதன் காரணமாக யுத்தம் நீடிக்கத் தொடங்கியதும் அரசாங்கம் தமிழ் மக்களின் காணிகளைச் சுவீகரிப்பதில் கண்ணாய் இருந்து வந்துள்ளார்கள்.

இராணுவ செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் இதில் புலம் பெயர்ந்த மக்களுள் முஸ்லிம் மக்களும் அடங்குவர். ஆண் துணைகளை இழந்த பெண்களும் அவர்தம் குடும்பங்களும் அடங்குவர்.

முககியமாக அரசியல், இராணுவ, இனரீதியான சிந்தனைகள் காரணமாக பாரம்பரிய வாழ்விடங்களைத் தொலைத்துவிட்ட நிலையில் எமது மக்களுள் பலர் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் மட்டுமல்லாமல் அவர்களைத் தற்காலிகமாக வாழ இடமளித்த நிலங்களின் சொந்தக்காரரர்கள் கூட எதுவும் செய்ய முடியாத ஒரு நிலையில் உள்ளார்கள்.

மக்களின் பரிதவிப்பை நாங்கள் புரிந்துள்ளோம். ஆனால் அவர்களின் மீள்குடியேறும் உரித்தை உணர்ந்துள்ளோமா என்றால் பெருவாரியாக இல்லையென்றே கூற வேண்டும்.

இவ்வுரித்தின் தாற்பரியம் ஜனாதிபதி முதல் சகல மத்திய அமைச்சரவை அமைச்சர்களுக்கும் இராணுவத் தளபதிகளுக்கும் மிகத் திடமாகத் தெரியவர வேண்டும். மக்களை அகதிகளாக்கி, தம் நாட்டிலேயே அந்நியர்களாக்கி வருடக்கணக்காக அவர்களை ஏதிலி வாழ்வு வாழவிட சட்டம் இடம் கொடுக்கவில்லை என்ற கருத்தை நாங்கள் இன்று முன் வைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பாரீஸ் காலநிலை மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரி









(பாரீஸ்)

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் கலந்து கொண்டார்.

மாநாட்டு மண்டபத்திற்கு சென்ற ஜனாதிபதிக்கு அரச தலைவர்களினால் வரவேற்பளிக்கப்பட்டது.

இந்த மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் பாரீஸ் தாக்குதலில் உயிர் நீத்த மக்களுக்காக ஒரு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடந்து நடைபெற்ற மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார்.

மாநாட்டின் போது, ஏனைய நாட்டு அரச தலைவர்களுடனும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துரையாடல்களை நடத்தினார். (இ)

## காரில் குண்டு வெடித்து ரஷ்ய பெண் எம்.பி.பலி!



ரஷ்யாவைச் சேர்ந்த பெண் எம்.பி. ஓகாசனா போப்ரோவ்ஸ்கயா (வயது-30). இவர் ஜனாதிபதி விளாடிமிர் புடினின் ஐக்கிய ரஷ்யா கட்சியைச் சேர்ந்தவர். இவரது கணவர் நிகிதா போப்ரோஸ்கி. இவர் முன்னாள் இராணுவ சிறப்பு சேவை அதிகாரி. இவர்கள் சேர்பியாவில் உள்ள நொவோசி பிர்ஸ்க் என்ற இடத்தில் தங்கியிருந்தனர்.

நேற்று முன்தினம் நொவா சீஸ்க் நகரில் இவர்கள் இருவரும் சென்ற காரில் திடீரென குண்டு வெடித்தது. அதில் ஓகாசனா எம்.பியும் அவரது கணவர் நிகிதாவும் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

தகவல் அறிந்ததும் பொலிஸார் அங்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினார்கள். பின்னர் அவர்களது பிணங்கள் மீட்கப்பட்டன. ஓகாசனா எம்.பியின் முகம் கருகி சிதைந்த நிலையில் இருந்தது. (இ-7)

## கைதிகளுக்குள் வன்முறை
### 6 பேர் உயிரிழப்பு

(கவுதமாலா நகர்)

கவுதமாலா சிறைச்சாலையில் 600 கைதிகள் மட்டுமே இருக்க வேண்டிய நிலையில் தற்போது 3 ஆயிரத்து 92 கைதிகள் அங்கேயுள்ளனர்.

கைதிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அங்கு அவர்களுக்கிடையே அடிக்கடி மோதல் சம்பவங்கள் நடப்பது வாடிக்கையாக உள்ளது.

நேற்று முன்தினம் திடீரென கைதிகளுக்கிடையே வன்முறை வெடித்தது. சிலர் ஏகே-47 ரக துப்பாக்கிகளால் ஒருவரைஒருவர் சுட்டுக் கொண்டனர். இந்த மோதலில் 6 கைதிகள் உயிரிழந்தனர்.

இதையடுத்து இராணுவத்தினரும், பொலிஸாரும் விரைவாக செயற்பட்டு நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். (இ-7-10)

## இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துகிறது ரஷ்யா

( மொஸ்கோ )

ஐ.எஸ்.தீவிரவாத அமைப்புக்கு எதிராக போரிட்டு வரும் ரஷ்ய படையினர் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சிரியாவில் ஐ.எஸ்.அமைப்பினருக்கு எதிராக போரிட்டு வரும் ரஷ்ய படையினர் தாக்குதலின் போது வெள்ளை பொஸ்பரஸ் பயன்படுத்தி வருவதாக பரவலாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஜெனிவா ஒப்பந்தங்களுக்கு மாறாக ரஷ்யா இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவது சமூக ஆர்வலர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பெரும்பாலும் வெள்ளை பொஸ்பரஸ் எதிரணியினரின் தளங்களை தெளிவாக காட்டுவதற்காகவே விமானிகள் பயன்படுத்துவதாக கூறப்படுகிறது. பகலில் எதிரிகளின் தாக்குதலில் இருந்து தப்ப இது புகைமூட்டத்தை உருவாக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

ஐ.எஸ்.அமைப்பினரின் முக்கிய பகுதியான ரக்காவில் ரஷ்யா படைகள் வெள்ளை பொஸ்பரஸ் வீசும் புகைப்படங்கள் வெளியாகி தற்போது புது நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

## முகாமில் பாதுகாப்பு இல்லை கண்ணீர்விடும் ஈழ அகதிகள்

எங்கள் முகாமுக்கு வந்து ரவுடிகள் தாக்குகின்றனர் என மதுரை அகதிகள் முகாமில் தங்கியுள்ள ஈழத் தமிழர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் நடந்த கலவரத்தால் தப்பி, தமிழகத்தில் தஞ்சமடைந்த ஈழத்தமிழர்களுக்கு தமிழகத்தின் பல மாவட்டங்களில் முகாம்கள் அமைத்து கொடுத்தது அரசு.

தொப்புள் கொடி உறவென்றும், கடல் பிரித்தாலும் மொழியால் இணைந்தவர்கள் என்றும் தமிழகதற்கு அகதிகளாக வந்த ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள், கட்டுத்தட்ட சிறையில் வாழ்வது போலவே வாழ்கிறார்கள் என தமிழக ஊடகமான விகடன் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மதுரை மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்க, மதுரை ஆனையூர் முகாமைச்சேர்ந்த ஈழத் தமிழர்கள் கண்ணீருடன் வந்தனர் என அந்த செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறித்த அகதிகள் தெரிவித்துள்ளதாவது,

"எங்க தலைவிதியால இப்படியொரு நிலையை கடவுள் எங்களுக்கு கொடுத்துட்டான். எங்களுடைய உறவென்றுதான் இங்குள்ள மக்களை நினைக்கிறோம். கடந்த சில மாதமாக எங்கள் முகாமுக்குள் சில ரவுடிகள் புகுந்து எல்லோரையும் அடிக்கிறார்கள், உதைக்கிறார்கள்.

பொலிஸில் புகார் கொடுத்தால் அவர்களும் ரவுடிகளுக்கு ஆதரவாக இருக்கின்றார்கள். எங்களால் நிம்மதியாக வாழ முடியவில்லை. கடந்த வாரம் எங்க பசங்க ஐந்து பேரை கத்தி, அரிவாளால் கடுமையாக தாக்கி காயப்படுத்தி விட்டார்கள். இப்போது அவர்கள் வைத்தியசாலையில் இருக்கிறார்கள். இதுவரை பொலிஸ் நடவடிக்கை எடுக்கவில்லை, நாங்கள் நிம்மதியாக வாழ வழி செய்யுங்கள்" என்றார்கள்.

மாவட்ட ஆட்சியர் அலுவலக அதிகாரிகள், மனுவுக்கு நடவடிக்கை எடுப்பதாக அவர்களிடம் உறுதி கூறி அனுப்பி வைத்திருக்கிறார்கள். (இ-7-10)




## ஒபாமா, நவாஸுடன் மோடி சந்திப்பு





(பாரீஸ்)

பாரீஸ் நகரில், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆகியோரை பிரதமர் மோடி சந்தித்துப் பேசியுள்ளார்.

பருவநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா. உச்சி மாநாடு, பிரான்ஸ தலைநகர் பாரீஸ் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது. அதில், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட 150 நாட்டு தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மாநாட்டின் இடையே, ஒபாமாவை பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார். ஒபாமாவுடன், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரியும், மோடியுடன் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகரும் கலந்து கொண்டனர்.

மாநாடு நடைபெறும் பகுதியில், பிரதமர் மோடியும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் நேற்று முன்தினம் திடீரென சந்தித்துக் கொண்டனர். அப்போது இருவரும் மகிழ்ச்சியுடன் கைகுலுக்கிக் கொண்டதுடன், ஒரு சோபாவில் அமர்ந்து சிறிது நேரம் உற்சாகமாக பேசிக்கொண்டு இருந்தனர்.

இந்த பேச்சுவார்த்தையின் விபரம் குறித்த தகவல், எதுவும் வெளியிடப்படவில்லை. எனினும் இரு நாட்டு கிரிக்கெட் அணிகளுக்கு இடையே இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போட்டிகள், இஸ்லாமாபாத்தில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள ஆசிய மாநாட்டில் இந்தியாவின் பங்கேற்பு போன்ற நிகழ்வுகளுக்கு இந்த சந்திப்பு உதவும் என செய்திகள் வெளியாகி யுள்ளன. (இ-7)

# வைத்தியசாலை வளாகத்தினுள் தேங்கி நிற்கும் கழிவுநீரினால் துர்நாற்றம்

## நடவடிக்கை எடுக்குமாறு நோயாளர்கள் கோரிக்கை





(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளிப்புறச் சூழலிலும் உட்புற சூழலிலும் கழிவு நீர் நீண்டநாட்களாக தேங்கி நிற்கின்றது. இதனால் கழிவு நீரில் இருந்து துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்புகள் பெருகுவதற்கும் சந்தர்ப்பம் இருப்பதாக நோயாளர்கள், பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

மேற்படி வைத்தியசாலையின் உட்புற வளாகத்தில் அமைந்துள்ள உணவகத்தின் கழிவு நீர் தேங்கி நிற்கும் பாதுகாப்பான தொட்டி நீண்ட நாட்களாக கழிவு நீர் வெளியேற்றப் படாமையால் அந்நீர் வெளியேறி உணவகத்தைச் சூழ்ந்து பாசி படிந்து காணப்படுகின்றது. மழை நீருடன் பாசி படிந்த நீர் கலந்து வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவிற்கு முன்பாக தேங்கி நிற்கின்றது.

இதனால் நோயின் நிமிர்த்தம் சிகிச்சை பெற வருவோர் பல்வேறு அசௌகரியங்களை சந்திப்பதாக தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலையின் பிரதான நுழைவு வாயில் பகுதியில் இரு மருங்கிலும் குப்பை கூழங்களுடன் நீர் தேங்கிக் காணப்படுவதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் குடிநீர் எடுக்கும் இடமும் சுகாதாரமற்று காணப்படுகின்றது.

எனவேவைத்தியசாலைநிர்வாகத்தினர் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள், நோயாளர்கள் கோரிக்கைவிடுக்கின்றனர். (2-277)

# எலிக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இளைஞன் சிகிச்சை பலனின்றி மரணம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புத்துவெட்டுவான் கிராமத்தில் எலிக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட இளைஞன் ஒருவன் சிகிச்சை பலனின்றி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் உள்ள புத்துவெட்டுவான் கிராமத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளை பிருந்தாகரன் (வயது-22) என்ற இளைஞனே மரணமடைந்தவராவர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பிரஸ்தாப இளைஞன் தொடர்ச்சியாக காய்ச்சலினால் அவதியுற்ற நிலையில் சிகிச்சை பெறாது இருந்துள்ளான்.

நோயின் தாக்கம் அதிகரிக்கவே வீட்டார் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இளைஞனை அனுமதித்தனர்.

சிகிச்சை இளைஞனுக்கு வழங்கப்பட்ட நிலையில் அன்றைய தினமே இளைஞன் மரணமடைந்துள்ளான்.

இளைஞனின் மரணம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்தியர் கூறுகையில்,

எலிக்காய்ச்சல் நோயினால் இளைஞன் பீடிக்கப்பட்டிருந்ததாகவும் இதற்கு உரிய நேரத்தில் சிகிச்சை பெறத் தவறியமையால் மரணம் சம்பவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (2-15)




# அதிபர்களுக்கான செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு துணுக்காய் வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் ,

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு நடைபெறவுள்ள செயலமர்வில் பிரதேச செயலாளர்கள், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், சமூக சேவை அலுவலர்கள் உட்பட கல்வி அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆதலால் பாடசாலை அதிபர்கள் செயலமர்விற்கு வருகை தரும் போது மாகாண கல்வித் திணைக்கள அட்டவணைப்படி மூன்றாம் தவணைக்கான மாணவர் வரவு வீதம், இடைவிலகிய மாணவர்களின் விபரம் தரவு ரீதியாக கடந்த 2014 இல் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிய உயர் கல்வி வாய்ப்பு பெறாமல் தங்கள் பாடசாலைப் பிரிவில் இருக்கும் மாணவர்களின் பெயர் விபரங்கள், தொலைபேசி இலக்கம் ஆகிய தரவுகளையும் தம்முடன் எடுத்து வருமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

# மன்னாரில் 40 ஏக்கர் பரப்பளவில் பழமரத்தோட்டம் உருவாக்கும் திட்டம்

## ஆரம்பித்து வைத்தார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர்





வடக்கு மாகாண மரநடுகை மாதத்தின் செயற்பாடுகளில் ஒன்றாக மன்னார் மாவட்டத்தில் பழமரத் தோட்டங்களை உருவாக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்ச்சி மன்னார் தாமரைக் குளப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. விவசாயத்திணைக் களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொண்டு பழமரக் கன்றுகளை வழங்கி வைத்ததோடு, அப்பகுதியில் புதிய முறையில் மாந்தோப்பு ஒன்றை உருவாக்குவதற்கு மாங்கன்றுகளை நடுகை செய்யும் பணியையும் தொடக்கி வைத்துள்ளார்.

குறைந்த இடைவெளிகளில் மாமரக்கன்றுகளை நாட்டி, குறைந்த உயரமுள்ள மரங்களாக அவற்றைப பராமரித்துக் கைகளாலேயே பழங்களைப் பறிக்கும் அடர் மாமரச் செய்கை என்னும் புதியமுறை பல்வேறு நாடுகளிலும் அறிமுகமாகியுள்ளது. அதனை வடக்கில் அறிமுகம் செய்யும் நோக்குடன், மன்னாரில் 40 ஏக்கர் பரப்பளவில் நடுகை செய்வதற்கென 100 விவசாயிகளுக்கு 2 ஆயிரத்து 478 மாமரக்கன்றுகள் வழங்கி வைக்கபபட்டுள்ளன.

மேலும், 25 ஏக்கர் பரப்பளவில் நடுகை செய்வதற்கு 10 ஆயிரம் மாதுளம் கன்றுகளும், 1.5 ஏக்கர் பரப்பளவில் நடுகை செய்வதற்கு 750 கொய்யாக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பிரதி விவசாயப்பணிப்பாளர் அஞ்சனாதேவி ஸ்ரீரங்கன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.செபமாலை ஆகியோரும் திட்டத்தின் பயனாளிகளான விவசாயிகளும் கலந்து கொண்டிருந்தார்கள்.

மரநடுகை மாதச் செயற்பாடுகளில் ஒன்றாக மன்னாரில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கும் பழமரத் தோட்டங்களை உருவாக்கும் திட்டம், வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் விரைவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பழங்களின் உள்ளூர் நுகர்வும், ஏற்றுமதி வாய்ப்பும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (2)

# மாணவர்களின் சீருடைக்கான கொடுப்பனவு வவுச்சர் விபரங்களை கல்வியமைச்சு வெளியீடு

(மல்லாவி)

நாடு தழுவிய ரீதியிலுள்ள பாடசாலை மாணவர்களின் சீருடைக்கான கொடுப்பனவு வவுச்சர் விபரங்களை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

சீருடைக்கான பண வவுச்சர்கள் பாடசாலை வகுப்பாசிரியரினால் ஆவணப்படுத்தப்பட்டு மாண வர்கள் அல்லது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் ஆகியோரிடம் கையளிக்கப்படும்.

தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கான சீருடை பண வவுச்சர்கள் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் ஆகியோரிடம் கையளிக்கப்படும்.

இதற்கமைய தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கு மேற்சட்டைக்கு 200 ரூபாவும் காற்சட்டை துணிக்காக 250 ரூபாவுமாக மொத்தம் 450 ரூபா பெறுமதியான பண வவுச்சர்கள் வழங்கப்படும்.

தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான மாணவிகளுக்கு சீருடை துணிக்காக 400 ரூபாவும் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையிலான முஸ்லிம் மாணவிகளுக்கு பர்தா தலைக்கவசமுடன் துணிக்காக 600 ரூபாவும் பாவாடை மற்றும் மேற்சட்டை துணிக்காக 720 ரூபாவுமாக மொத்தம் ஆயிரத்து 320 ரூபாவிற்கான பண வவுச்சர்கள் வழங்கப்படும்.

இதேவேளை தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையிலான மாணவர்களுக்கு மேற்சட்டை துணிக்காக 275 ரூபாவும் காற்சட்டை துணிக்காக 250 ரூபாவுமாக மொத்தம் 525 ரூபா பண வவுச்சர்கள் வழங்கப்படும்.

தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையிலான மாணவிகளுக்கு சீருடை துணிக்காக 500ரூபாவும் முஸ்லிம் மாணவிகளுக்கு பர்தா தலைக்கவசத்துடன் துணிக்காக 700 ரூபாவும் பாவடை துணிக்கு 250 ரூபாவும் மேற்சட்டை துணிக்காக 550 ரூபாவுமாக மொத்தம் ஆயிரத்து 500 ரூபா பண வவுச்சர்கள் வழங்கப்படும்.


தரம் 10 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்களுக்கு மேற்சட்டை துணிக்காக 275 ரூபாவும் காற்சட்டை துணிக்காக 475 ரூபாவுமாக மொத்தம் 700 ரூபா பண வவுச்சர்கள் வழங்கப்படும்.

தரம் 10 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவிகளுக்கு சீருடை துணிக்காக 600 ரூபாவும் முஸ்லிம் மாணவிகளுக்கு பர்தா தலைக்கவசமுடன் துணிக்காக 800 ரூபாவும் பாவடை துணிக்காக 700 ரூபாவும் மேற்சட்டை துணிக்காக 300 ரூபாவுமாக மொத்தம் ஆயிரத்து 800 ரூபாவிற்கானபணவவுச்சர்கள்வழங்கப்படும். அத்துடன் அனைத்து தரங்களுக்கும் உரிய மாணவிகளுக்கான சேலை துணிக்கு 800 ரூபா பண வவுச்சர்கள் வழங்கப்படும். மேற்படி சீருடை விநியோகத்தின் போது முறைகேடுகள் ஏற்பட்டால் 071 439 0000 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு குறுந்தகவல்மூலம்அறிவிக்கலாம்எனகல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (2-15)

# மண் அகழ்வை நிறுத்துமாறு கோரி குஞ்சுக்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்

( பனிக்கன்குளம் )

மடு பிரதேசச் செயலாளர் பிரிவிற்குட்பட்ட குஞ்சுக்குளம் பகுதியில் கிரவல் மண்அகழ்வு இடம்பெறுவதால் அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், கிரவல் மண் அகழ்வை உடனடியாக நிறுத்தக் கோரி அப்பகுதி மக்கள் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.



குஞ்சுக்குளம், மாதாகிராமம், மூன்று முறிப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களே நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் குஞ்சுக்குளம் ஆலயத்திற்கு முன் ஒன்று கூடினர்.

பின் பல்வேறு வசனங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு மண்அகழ்வு செய்யப்படும் பகுதியில் உள்ள பிரதான வீதிக்கு வருகை தந்தனர்.

பின் வீதியை இடைமறித்து அமைதியான முறையில் தமது கண்டன ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இதன்போது அதிகளவான பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இதன்போது குஞ்சுக்குளம் பங்குத்தந்தை வடக்கு மாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து மக்களின் பிரச்சினைகள் குறித்து உரிய அதிகாரிகளோடு, கலந்துரையாடியதோடு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு பிரச்சினையை கொண்டு வந்தார்.

எனினும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்டச் செயலக அதிகாரிகள் எவரும் சம்பவ இடத்திற்கு வரவில்லை என அம் மக்கள் தமது விசனத்தை தெரிவித்தனர்.

இந்த நிலையில் கனியவள அகழ்வு திணைக்கள அதிகாரி மற்றும் வனபாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் உரிய அதிகாரிகளையும் அழைத்து வந்து மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது குறித்த பகுதியில் மண் அகழ்வு செய்யப்படுகின்றமையினால் விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வரும் சின்னகுஞ்சுக்குளம், தம்பனைக்குளம், புதுக்குளம் போன்ற குளங் களுக்கு செல்லும் மழை நீர்மண் தோண்டப்படும் பள்ளங்களில் தேங்குகின்றது.

இதனால் விவசாய தேவைகளுக்காக நீரை சேமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அம்மக்கள் அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டினர்.

அத்தோடு, மண்அகழ்வு செய்கின்றமையினால் இக்கிராம மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் பல கஷ்டங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக டிப்பர் வாகனங்கள் மண் ஏற்றிக்கொண்டு வேகமாக செல்வதனால் வீதிகள் கடுமையாக சேதத்திற்கு உள்ளாகுவதோடு, போக்குவரத்து செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

எனவே இப்பகுதியில் மண் அகழ்வு செய்யப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது வருகை தந்த அதிகாரிகள் மண்அகழ்வு செய்யப்பட்டு வந்த இடத்தை நேரடியாக சென்று பார்வையிட்டதோடு தற்காலிகமாக குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மண்அகழ்வை நிறுத்துவதாகவும்,

பின் இவ்விடயம் தொடர்பாக பலதரப்பட்டவர்களுடன் கலந்துரையாடி இறுதி முடிவுகள் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியாகத் தெரிவித்தனர். (2-281)




# ஹொரவப்பொத்தானை வீதி விபத்தில் இளைஞன் மரணம்



வவுனியாவில் இருந்து ஹொர வப்பொத்தானை நோக்கி மோட் டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த இளைஞன் 2ஆம் கட்டை, அம்பலாங்கொட பகுதியை அண்மித்த போது மாடு ஒன்றுடன் மோதி எதிரே வந்த ஆட்டோவுடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றது.

(குருமன்காடு)

வவுனியா - ஹொரவப்பொத்தானை வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் மரணமடைந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த எச்.எம்.லஹிரு பண்டார (வயது-22) என்ற இளைஞனே மரண்மடைந்தவராவார்.

இது தொடர்பான விசாரணையை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டனர். (2-250)

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்

கிளிநொச்சி நாறோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வவுனியாவை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் என்பிகோடா நிறுவனத் தலைவர் வெ.சுப்பிரமணியம் பங்கு கொள்ளவுள்ளார். மாற்றுத்திறனாளிகள் குறித்த விழிப்புணர்வு ஊர்வலமும் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது. (2-254)

# பாலியல் சேட்டையில் ஈடுபட முயன்ற இளைஞன் மக்களால் மடக்கிப்பிடிப்பு

கிளிநொச்சி ஆனந்தநகர் பகுதியில் தனிமையில் இருந்த பெண் மீது பாலியல் சேட்டை புரிய முற்பட்ட இளைஞனை பிரதேச மக்கள் சுற்றிவளைத்து பிடித்துள்ளனர்.

குறித்த நபர் தனிமையில் இருந்த பெண்ணின் வீட்டுக்கு சென்று பாலியல் சேட்டையில் ஈடுபட முற்பட்டபோதே கிராம மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

38 வயதுடைய குறித்த இளைஞனை மக்கள் மடக்கி பிடித்தபோது, தான் இராணுவ புலனாய்வாளன் என தெரிவித்ததாக மக்கள் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், குறித்த இளைஞனிடம் வாக்கு மூலம் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை தான் இராணுவ புலனாய்வாளர் இல்லை என்றும் தான் இராணுவத்தினருக்கு தகவல்களை வழங்குவதாகவும் அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட பிரஸ்தாப நபர் வவுனியா பிரதேசத்தினை சேர்ந்தவர் எனவும், தற்போது விசுவமடு பகுதியில் வசித்து வருகிறார் என்றும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# தொழில்நுட்பக் கல்லூரியை முள்ளியவளையின் மையப்பகுதியில் அமைப்பதே சாலச்சிறந்தது

## பொதுமக்கள் வேண்டுகோள்

இந்திய அரசின் நிதி ஒதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள தொழில்நுட்பக் கல்லூரியினை முள்ளியவளையில் போதிய நிலப்பரப்புள்ள முல்லைத்தீவு மாங்குளம் பிரதான வீதியில் முள்ளியவளை 6 ஆம் கட்டை ஐயன் கோயிலடிக்கும் 7 ஆம் கட்டைக்கும் இடையேயான பிரதான வீதியோரம் நிர்மாணித்து உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது குறித்து கல்விமான்கள் சிலர் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் சனத்தொகை கூடிய பிரதேச செயலாளர் பிரிவுகளாக முதலாவதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவும் அடுத்ததாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவும் விளங்குகின்றது.

அத்துடன் க.பொ.த உயர்தர வகுப்புக்கள் உள்ள பாடசாலைகள் அதிகம் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளாகவும் இவையே காணப்படுகின்றது.

அத்துடன் முல்லைத்தீவு நகரின் மையப் பகுதியிலிருந்து கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்கள் சுமார் 35 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையாகிய விசுவமடு, உடையார்கட்டு ஆகிய கிராமங்கள் சுமார் 35 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளன.

எனவே முல்லைத்தீவு மாவட்டத்தின் சனத்தொகை பரம்பலின் அடிப்படையில் முள்ளியவளைப் பிரதேசமே மையப்பகுதியாக அமைவதால் தொழில்நுட்பக் கல்லூரியை முள்ளியவளையில் நிர்மாணிப்பதே பொருத்தமாக அமையும் என அவர்கள் தெரிவித்துள்ளதுடன் இதனால் பெருமளவான மாணவர்கள் நன்மை அடைவர் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட புள்ளிவிபரத் திணைக்களத்தினரின் இறுதி மதிப்பீட்டின்படி பிரதேச செயலக ரீதியான மக்களின் தொகை கரைதுறைப்பற்று 41 ஆயிரத்து 535, புதுக்குடியிருப்பு 39 ஆயிரத்து 23, ஒட்டுசுட்டான் 19 ஆயிரத்து 30, துணுக்காய் 11 ஆயிரத்து 725,மாந்தை கிழக்கு 9 ஆயிரத்து 42 ஆகும்.

எனவே நிர்மாணிக்கப்படவுள்ள தொழில்நுட்பக்கல்லூரியை முள்ளியவளையில் நர்மாணிக்கவேண்டுமென அரசாங்க அதிபரை மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (2-302)

# சேயா கொலை விவகாரம் ஐவருக்கெதிராக விசாரணை



வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட கொட்டதெனியாவயைச் சேர்ந்த 5 வயது சிறுமியான சேயாவின் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணையின் போது, பாடசாலை மாணவன் மற்றும் பிள்ளையொன்றின் தந்தை ஆகிய அப்பாவிகளைக் கைது செய்தமைக்காக, பொலிஸார் ஐவருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஐவருக்கு எதிராகவும், பாடசாலை மாணவனிடமிருந்து பெற்றுக்கொண்ட பொருளை மீளவும் கையளிக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கொட்டதெனியாவ பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட ஐவருக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாணவன் மற்றும் பிள்ளையொன்றின் தந்தை ஆகியோரைக் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட உதவி பொலிஸ் அதிகாரி தலைமையிலான குழுவே மேற்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளது. (இ-7-10)




# எனக்கு விசுவாசமானவர்களை இணைத்துக் கொள்ள முயற்சி!

## அரசு மீது மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

**எனக்கு விசுவாசமான தரப்பினர் மீது வழக்குகளைத் தொடர்ந்து அவர்களை அச்சுறுத்தி ஆளும் கட்சியில் இணைத்துக் கொள்ள முயற்சிக்கப்படுகின்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.**



எனினும், இனிவரும் காலங்களில் எதிர்க்கட்சியில் இருக்கும் எவரும் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ள மாட்டார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.


ஆளும்கட்சியுடன் இணைந்து கொள்ளும் தரப்பினர் ஏற்கனவே இணைந்து கொண்டுள்ளனர். அரசாங்கம் வெறுமனே அவர் இணைகின்றார், இவர இணைகின்றார் என் பிரசாரம் செய்கின்றது.

இனி எதிர்க்கட்சியின் எவரும ஆளும்கட்சிக்கு ஆதரவளிக்கப் போவதில்லை. எனக்கு ஆதரவான தரப்பினரை ஆளும் கட்சியில் இணைத்துக் கொள்ள பெரும் முயற்சி எடுக்கப்படுகின்றது.

எனினும், இந்த முயற்சிகள் ஒரு போதும் வெற்றியளிக்காது என மகிந்த ராஜபக்ஷ சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நோய் தீர்க்கும் நட்சத்திர மூலிகைகள்




(சென்ற வாரத் தொடர்ச்சி..)

**மேசராசிக்குரிய நட்சத்திரங்கள்:** அச்சுவினி, பரணி, கார்த்திகை. **இதற்குரிய மூலிகைகள்:** எட்டி, நெல்லி, அத்தி. இவர்களுக்கு காசநோய், இதயநோய், வெப்பம், பித்தம்சம்பந்தமான நோய்கள், சுரம், இருமல், மூலம், நரம்புத்தளர்ச்சி, வலிப்பு, இரத்த அழுத் தம், தூக்கமின்மை போன்றன ஏற்படலாம்.

எட்டி: நரம்புகளுக்குவலிமையைத் தரும், வாதக்குற்றங்களை நீக்கும, மேகநோய்கள், குட்டரோகம் தீர்க்கும்

**எட்டியின் மருத்துவப் பயன்**

பழ இரசத்துடன் எண்ணெய் சேர்த்து காய்ச்சி கீல்களில் வரும் நோய்களுக்குப் பூசலாம்.

எட்டிவிதைச்சூரணம்கற்பமுறைப்படி சாப்பிட குட்டநோய்கள்தீரும், பக்கவாதம், நரம்பு நோய்கள் தீரும்.

நீரில் இலையைப்போட்டு காய்ச்சி ஒற்றடம் இட உடல்வலி, வாதவலி தீரும். மரப்பட்டைச் சூரணத்துடன் உப்புக்கல் சேர்த்துக் கொடுக்க தேள் நஞ்சு தீரும்.

**நெல்லி:** இரத்த பித்தம், கண் நோய்கள், காசம், மார்பு வலியை நீக்கும்.பாண்டு, சூலை, மூலரோகம்தீரும்.

**மருத்துவப்பயன்**

கற்பமுறைப்படி நெல்லிக்காய்ச் சாறும் அதேயளவு தேனும் கலந்துண்ண காசம், இருமல், காமாலை தீரும்.

நெல்லிக்காய்ச்சாறும் எலுமிச் சம் பழச்சாறும் வெந்நீரில் கலந்து காலையில் வெறும்வயிற்றில்சாப்பிட சோர்வு, பித்தம், இரத்த அழுத்தம் குறையும்.

நெல்லிவேர், விதை, பட்டை, காய், கனி, வற்றலை கற்பமுறைப்படி ஊறுகாய், துவையல்செய்துண்ண மூலம், வாய்வு, மயக்கம் தீரும்.

**அத்தி:** இரத்த விருத்தியை உண்டாக்கும். மலச்சிக்கல், சுரத்தால் உண்டாகின்ற வெப்பம் தீரும். இரத்த மூலம், நீரிழிவு தீரும்.

**மருத்துவப் பயன்கள்**

அத்திப்பாலில் பசு வெண்ணெய் சேர்த்துக் கொடுக்க நரம்புப் பிடிப்பு, நீரிழிவு தீரும்.

கீல்வாதம், மூட்டுவாதத்திற்கு அத்திப் பாலை வெளிப்பிரயோகமாக பூசலாம்.

அத்திப்பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டுவர மூலரோகம் தீரும்.

**ரிஷப இராசிக்குரிய நட்சத்திரங்கள்:** கார்த்திகை, ரோகினி, மிருகசீரிடம். **இதற்குரிய மூலிகைகள்:** அத்தி, நாவல், கருங்காலி.

இவர்களுக்கு சளி, இருமல், கழுத்துவலி, வீக்கம், வாதநோய்கள், தோல், இரத்த சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம்.

**நாவலின் மருத்துவப் பயன்கள்**

நாவல்பட்டை, பூவரசம்பட்டை சம எடை எடுத்து சூரணித்து 10 நாட்கள் உள்ளெடுக்க தேமல், சொறி, சிரங்கு தீரும்.

பட்டைக்குடிநீர் நீரிழிவு, வாய்ப்புண்ணைக் குணப்படுத்தும்.

வேர்ச்சூரணம் கரப்பான், புண்ணைக் குணப்படுத்தும்.

நாவற்பட்டையுடன் கடுக்காய்த் தோல் சேர்த்து சூரணம் செய்து கொடுக்க நீரிழிவு பெரும்பாடு தீரும்.

**கருங்காலியின் மருத்துவப் பயன்கள்**

கருங்காலிப் பிசினால் கரப்பான், இருமல், கிருமி நோய்கள், அரிப்பு, சுரம், வெண் குட்டம் போன்றன தீரும்.

கருங்காலிப் பட்டை குடிநீர் உள்ளுக்கும் வெளியிலும் உபயோகிக்க குட்டம் தீரும்.

இதன்பட்டை குடிநீர் இரத்தத்தையும் சுத்திசெய்யும், நீரிழிவு தீரும்.

**மிதுனராசிக்குரிய நட்சத்திரங்கள்:** மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம். **இதற்குரிய மூலிகைகள்:** கருங்காலி, செங்கருங்காலி, மூங்கில். இவர்களுக்கு பொதுவாக காசநோய், இருமல், தலைவலி, மயக்கம், தோல்நோய்கள், மூளைசம்பந்தமான பாதிப்புக்கள், பித்தம், மூக்கு, கழுத்து, கண் சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம்.

**மூங்கிலின் மருத்துவப்பயன்.**

வேரை அரைத்து சொறி, சிரங்கிற்கு தடவ குணமாகும்.

மூங்கிலுப்பை கல்வத்திலிட்டு பன்னீர் விட்டரைத்து மாத்திரையாக செய்து பசும் பாலில் கொடுக்க சுரம், காசம், இருமல் தீரும்.

மூங்கில் இலைச்சாறும் காடியும் கூட்டிப் பூச இடுப்புவலி தீரும்.

இலைச்சாறும் தேனும் கலந்து கொடுக்க இருமல் தீரும்.

**கடகராசிக்குரிய நட்சத்திரங்கள்:** புனர்பூசம், பூசம், ஆயிலியம். **இதற்குரிய மூலிகைகள்:** மூங்கில், அரசு, புன்னை. இவர்களுக்கு கபம் சம்பந்தமான நோய்கள், வாதம், தோல், இரத்தம் தொடர்பான பாதிப்பு, புற்றுநோய், நீரிழிவு போன்றன ஏற்படலாம். மனோரீதியான பாதிப்பு, தூக்கமின்மை, சோர்வு, செரியாமை, வயிற்றுவலி, வயிற்றுப்புண் ஏற்படலாம்.

**அரசின் மருத்துவப் பயன்கள்**

பட்டைக்குடிநீர், சொறி, சிரங்கை நீக்கும், அரசம் வேர் தோலில் ஏற்படுகின்ற ரணங்களைப் போக்கும்.

விதையையும் திப்பிலியையும் சூரணித்துத் தர தொண்டைக்கட்டு கோழை, இருமல் தீரும், கனியை உலர்த்தி பொடி செய்து உட் கொள்ள மலச்சிக்கல் தீரும்.

**புன்னையின் மருத்துவப் பயன்கள்.**

விதையை நீர்விட்டரைத்து காய்ச்சி கீல் வாயு, வீக்கங்களுக்குப் பூசலாம்.

இலையைப் பொடித்து ஒற்றைத் தலைவலிக்கு பற்றிடலாம்.

இலை அல்லது பூ ஊறல் குடிநீராகக் கொண்டுகண்ணைக்கழுவ கண்வீக்கம் தீரும்.

இதன் எண்ணெயால்வாதநோய்கள், சொறி, சிரங்கு தீரும்.

**சிம்மராசிக்குரிய நட்சத்திரங்கள்:** மகம், பூரம், உத்தரத்தில் முதலாம் காலும். **இதற்குரிய மூலிகைகள்:** ஆல், பலாசு, அலரி. இவர்களுக்கு முதுகுவலி, கர்ப்பப்பை, கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.

**ஆலின் மருத்துவப் பயன்கள்**

ஆலம் பாலை தொப்புளைச் சுற்றிப்பூச அடிவயிற்றில் தோன்றும் வலி தீரும்.

ஆலம் மொட்டுக்களை பால் விட்டரைத்து பசும்பாலில் கலந்து தர வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல் தீரும்.

ஆலம் பழத்தையும் விழுதையும் அரைத்து 41 நாட்கள் தர மலட்டுத்தன்மை தீரும், பெண்களுக்குப் பிள்ளைப்பேறு உண்டாகும்.

**பலாசின் மருத்துவப் பயன்கள்**

பிசினை நீரில் கரைத்து தொண்டையில் பூச தொண்டைப் புண் மாறும்.

இலைச்சாறு 30 மில்லிலீற்றர் உடன் மிளகுத்தூள் சேர்த்துக் கொடுக்க இருமல் தீரும்.

புங்கம் விதையை பலாசம் பூச்சாற்றில் 5 முறை ஊறவைத்து சூரணித்து கண்ணுக்கு இட்டு வரக் கண்பூ, கண்கறுப்பு மாறும்.

விதையை பொடித்து எலுமிச்சம்பழச்சாற்றில் கலந்து படை முதலியவற்றுக்கு பூசலாம்.

காயை பசும்பால் விட்டு அரைத்து உடம்பில் தேய்த்து குளிக்க சிரங்கு, சொறி தீரும். (தொடரும்)

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# மீண்டும் டெங்கு பரவும் அபாயம்

நாடளாவிய ரீதியில் மீண்டும் டெங்கு பரவும் அச்சுறுத்தல் நிலை காணப்படுவதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது. 25 ஆயிரத்து 235 பேர் நாடளாவிய ரீதியில் இதுவரையில் பதிவாகியுள்ளதாகவும்சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேல்மாகாணத்தில்கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 8 ஆயிரத்து 264 பேருக்கும் அதிகமான நோயாளிகள் காணப்படுவதாகவும் சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.



2ஆயிரத்து 263 நோயாளிகள் கொழும்பு நகர எல்லைக்குள் உள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் காணப்படும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக டிசெமபர் மாதத்தில் டெங்கு நோய் கூடுதலாக பரவும் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ-7-10)

## இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

கினிகத்தேனை - தியகல பகுதியில் நேற்று பகல் இடம்பெற்ற விபத்தில் 17 பேர் காயமடைந்துள்ளனர். ஹட்டனிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றும் கண்டியிலிருந்து ஹட்டன் நோக்கி சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (இ-7-10)

## இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரால் செயற்றிட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிவைப்பு


தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால், இளைஞர் பாராளுமன்ற வேலைத் திட்டத்திற்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படும் "சிரமசக்தி" திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் நல்லூர் தொகுதியில் நேற்று முன்தினம் இரண்டு திட்டங்களுக்கான அடிக்கல்கள் நாட்டி வைக்கப்பட்டன.

ஜே/90 பிரிவில் கரப்பந்தாட்ட மைதானம் அமைத்தல் மற்றும் ஜே/117 பிரிவில் கோண்டாவில் குமரகோட்டம் பொதுநோக்கு மண்டபத்துக்கான மலசலகூடம் அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கான அடிக்கற்களே நாட்டி வைக்கப்பட்டன.

நல்லூர் தொகுதி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் கி.நிஷாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் யுகராஜ், ஜே/90 கிராம உத்தியோகத்தர் கு.மஹிந்தன், ஜே/118 கிராம உத்தியோகத்தர் ஜெயந்திரன், நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளன உப தலைவரும், ஜே/113 கிராம உத்தியோகத்தருமான ப.தர்சானந் மற்றும் பிரதேச இளைஞர்கள், குமரகோட்டம் சித்தி வைரவர் அம்பாள் ஆலய தலைவர், பொருளாளர், முக்கியஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புகழை விரும்பாத மேதை பேராசிரியர் மகாலிங்கம்

கடந்த 03.11.2015 அன்று சிவபதமடைந்த பேராசிரியர் மகாலிங்கம்அவர்களின்மறைவால் கவலையும் அதிர்ச்சியும் அடைந்த பல்லாயிரக் கணக்கான மக்களில் நானும் ஒருவன். அன்னாரைப் பற்றிய சில தகவல்களை இங்கு பகிர்ந்து கொள்வதில் மன அமைதி கிட்டும் என எண்ணுகின்றேன்.

அளவையூர் கிராமம் பல பிரபல்யங்களை, கலைஞர்களை, கல்வி மேதைகளையும் உருவாக்கிய வரிசையில் பேராசிரியர் மகாலிங்கம் அவர்கள் அளவையூர்பெற்றமேதையாவார். இவர் அழகொல்லை அளவெட்டி என்னும் கிராமத்தில் 16.01.1926 இல் பிறந்தார்.

அன்னாரின்மறைவுஎம்மை மட்டுமல்லாது மிகவும் கவலையுடன் காணப்பட்டவர்களில் தென்னிலங்கை சகோதர மொழி இனத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம். ஏனென்றால் அன்னாரின் மரணச் சடங்கில் பங்குபற்றியவர்களில் 50 வீத மாணவர்கள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள். மரணச் சடங்கில் கண்டி பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் கொழும்பைச் சேர்ந்தவர்களும் எனப் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டதைஎண்ணும்பொழுது பெருமையாக இருந்த அதே நேரத்தில் எமது பிரதேச மக்களோ புத்திஜீவிகளோ முழுமையாக கலந்து கொள்ளாதது கவலையையும் தந்தது. இதற்கு காரணம் அமரர் தன் வாழ்நாளில் அதிக நாட்களை தென்னிலங்கையில் கல்வி



நடவடிக்கையில் ஈடுபட்டதாக இருக்கலாம்.

குடும்பத்தில் 8 பிள்ளைகளில் மூத்தவராகப் பிறந்த இவர் தமது குடும்பத்துடன் மலாயா சென்று தமது ஆரம்பக் கல்வியை கற்று பின்னர் 1946 இல் மேற்கல்வியைத் தொடர மீண்டும் இலங்கை வந்து தொழில்நுட்பக் கல்லூரியில் (Technical College, Colombo) பொறியியல் பிரிவில் கல்வி கற்று 1950 இல் பொறியியல் பட்டதாரி பட்டம் (1st Class Hons) இங்கிலாந்து பல்கலைக்கழகத்தினால் இவருக்கு வழங்கப்பட்டது. இலங்கையில் இருந்து வெளிவாரி மாணவர்களும் பங்குபற்றிய இப்பரீட்சையில் அமரர் மகாலிங்கம் முதற்தர மாணவனாக இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் இவர் புதிதாக 1952 ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக சேர்ந்தார். தனது phD கல்வியை செபீல்ட் பல்கலைக்கழகத்தில் (Sheffied University) கற்று 1956 இல் அதிர்வு சார்ந்த துறையில் (Torsional Vibration) விசேட பட்டம் பெற்ற நிரந்தர பேராசிரியராக இலங்கை பல்கலைக்கழகத்தில்சேர்ந்தார்.

இவர் பரவலாக பல ஆய்வுக் கட்டுரைகளை பிரபல புத்தகங்களில் (Journals) பிரசுரித்தார். இவருடைய ஆய்வுக் கட்டுரைகளை கவனத்தில் கொண்ட இங்கிலாந்து பல்கலைக்கழகம் இவருக்கு விஞ்ஞான பொறியியல் துறையில் கலாநிதி (DSc Engineery) என்ற புகழ்பெற்ற பட்டத்தைவழங்கிகௌரவித்தது.

இங்கு தமிழ்மக்கள் பெருமைப்பட வேண்டிய முக் கிய விடயம் என்னவென்றால் இப்பட்டத்தை அதாவது Doctor in Science (DSc) பெற்ற முதல் மாணவனும் இவரே ஆகும். அதுமட்டுமன்றி இப்பட்டம் அந்நேரம் வேறு எவராலும் இலங்கையில் பெறப்படவில்லை.

அன்னாரைப் பற்றிய மற்றுமொரு சாதனையை இங்கு குறிப்பிட வேண்டும். அதாவது அவ்றோ ஜெட் எஞ்ஜினில் ஒரு அதிர்வுச் சத்தம் (Vibration) ஒன்று தொடர்ந்து இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தபொழுதுறோல்ஸ் றோயிஸ் (Rolls Royce) கார் நிறுவன கம்பனி இவரை அழைத்து அந்த அதிர்வுச் சத்தத்தை சரிபார்த்துக் கொடுத்தார். இந்தச் செயலுக்காக இந்தக் கம்பனி இவருக்கு பல வெகுமதிகளைக் கொடுத்த போதிலும் அவற்றை நிராகரித்து விட்டு ஒன்றே ஒன்றை மட்டும் கேட்டார். அது என்னவென்றால் ஜெட் என்ஜின் (Jet Engine) குறுக்குவெட்டு (Cross Section) ஒன்றைத் தருமாறு கேட்டார். வெட்டப்பட்ட அந்தப் பகுதி இன்றும் பேராதனைப் பொறியியல் பிரிவில் இவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆய்வுகூடத்தில் அனைவரின் பார்வைக்காகவும் மாணவர்களின்கல்விக்காகவும்வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு தற்பொழுது அன்னாருடைய பெயருடன் (Applied Mechanics Lab) என்று அழைக்கப்படுகின்றது.

அன்னார் பொறியியல் கல்வித் துறைக்கு ஆற்றிய சேவைகளை கருத்திற்கொண்டு இவருக்கு அநேக பதவிகள் காத்திருந்த போதிலும் அவர் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் இலங்கை அரசாங்கம் இவருடைய சேவையைப் பாராட்டி வித்தியா ஜோதி (Vidya Jothi) என்ற பட்டத்தை கொடுத்து கௌரவித்தது.

40 ஆண்டு சேவையில் இருந்து இளைப்பாறிய பின்பும் தொடர்ந்தும் கற்பித்தலில் ஈடுபட்டு தமது முழு வாழ்க்கையையும் கல்விக்காக தியாகம் செய்த ஒரு மாமனிதர் ஆசிரியையான தேவகி என்ற பெண்ணைத் திருமணம் செய்து இவருடைய துறைக்கு அவரும் மிகவும் உந்து சக்தியாக விளங்கினார். அவர்2014 ஆம் ஆண்டு மறைந்ததும் அமரர் வாழ்விலும் பலவீனமுற்று 03.11.2015 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

வலிகாமம் வடக்கில் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்து இவ்வாறான உன்னத பட்டம் பதவிகளை வகித்து தன்னல மற்ற சேவையாற்றி மறைந்த மாமனிதருக்கு ஒவ்வொரு தமிழனும் பெருமையுடன் அஞ்சலி செலுத்த வேண்டும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

லயன் சி.விக்கினராஜா
ஓய்வுநிலை இலங்கை
வங்கி முகாமையாளர்.

# செய்தித் துளிகள்

## வடக்கிலும் வழங்கப்படுமா?

(கொழும்பு)

2014-2015 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட மழை மற்றும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கான காசோலைகள் மானிய உர காப்புறுதிச் சங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கென கிட்டத்தட்ட 22 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை இந்த திட்டத்தின் மூலம் 20 ஆயிரத்து 561விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என வடக்கு-கிழக்கு விவசாய காப்புறுதி சங்க பிரதிப் பணிப்பாளர் விநாயக மூர்த்தி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலும் மழை, வறட்சியால் அதிகளவில் பாதிப்பு ஏற்பட்ட போதும் இதுவரை எந்தவிதமான உதவிகளும் அரசால் வழங்கப்படவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

3.5 மில்.பெறுமதியான

## நகைகளை பறிகொடுத்த நடிகை சனோஜா வழக்கு

திரைப்பட மற்றும் நாடக நடிகையான சனோஜா பிபிலியின் 35 இலட்ச ரூபாய் பெறுமதியான தங்க நகைகள், கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கொள்ளையிடப்பட்டுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

பொரலஸ்கமுவயிலுள்ள மலர்ச்சாலையொன்றுக்கருகில் தனது காரை நிறுத்திவிட்டு சென்றபோதே அவரின் காரிலிருந்த நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. பாதுகாப்பு கருதியே இவ்வளவு பெறுமதியான நகைகள் காரில் (வைத்துள்ளார்) கொண்டு சென்றுள்ளார்.

கார்க் கண்ணாடியை உடைத்த கொள்ளையர்கள், 30,000 ரூபா பெறுமதியான அலைபேசி, 32,000 ரூபா பணம் மற்றும் 35 இலட்ச ரூபா பெறுமதியான நகைகள் என்பவற்றைக் கொள்ளையடித்துள்ளதாக பொலிஸில் முறையிட்டுள்ளார். (இ-7-10)

## நெரிசலால் வருடத்துக்கு ரூ.375பில்லியன் இழப்பு

நாட்டின் பிரதான நகரங்களுக்கு அண்மையில் ஏற்படுகின்ற வாகன நெரிசல்கள் காரணமாக, வருடத்துக்கு 375 பில்லியன் ரூபா இழக்கப்படுகின்றது என்று மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாட்டின் பிரதான நகரங்களுக்கு அண்மையில், வாகனங்களின் வேகம் மணித்தியாலத்துக்கு 20 கிலோமீற்றர் முதல் 12 கிலோமீற்றர் வரை குறைந்துள்ளது.

பொதுவாகப் பார்க்கின்ற போது, மூன்று தசாப்தத்துக்கு முன்னர் கொழும்பு நகரத்துக்கு நாளொன்றுக்கு ஒரு இலட்சத்து 323 ஆயிரம் வாகனங்கள் உட்பிரவேசித்தன. தற்போதைய நிலையில் அது, ஐந்து இலட்சமாக மாறிவிட்டது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வீதிகளில் 85 சதவீதத்தை, தனியார் வாகனங்களும் ஏனைய 15 சதவீதத்தை பொதுப் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் வாகனங்களும் பிடித்துக்கொண்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## தனியார் துறையினருக்கும் ஓய்வூதியத் திட்டம்

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்ற ஓய்வூதியத் திட்டமொன்றை தனியார்துறை ஊழியர்களுக்கும் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை, அரசாங்கம் விரைவில் எடுக்குமென, வெளிநாட்டு அலுவல்கள் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். வரவு- செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். பலர், அரசாங்கத் துறையில் பணியாற்ற விரும்புவதற்கு, அங்கு காணப்படும் ஓய்வூதியத் திட்டமே காரணமெனத் தெரிவித்த அவர், தனியார் துறையிலும் இணைந்து கொள்வதை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் விரும்பு வதாகத் தெரிவித்தார். (இ-7-10)

## சிங்கராஜவனத்தில் பறவைகள் ஆய்வுமுகாம்

சிறுவர்களின் உயரிய நலனைநோக்காகக்கொண்டு இலங்கையில் பணிபுரியும் சி.சி.எச். முதன்முறையாக இயற்கை மற்றும் சுற்றுச் சூழலில்ஆர்வமுடைய இளைஞர்களுக்காக 3 மாத இயற்கைமற்றும்சூழலியலிலான சான்றிதழ் கற்கை நெறி (Certificate of Nature and Environment Study) ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

துறைசார் வளவாளர்களால்விரிவுரைகளும்ஆய்வு செயற்பாடுகளும் நடைபெற்று வருகிறது. மேலும் இக்கற்கைநெறி மாணவர்களின் ஆய்வுச்செயற்பாட்டிற்கு விசேட பயிற்சி முகாமுக்காக நாளை 3ஆம் திகதி சிங்கராஜவனம் செல்லவுள்ளனர்.

இவ் ஆய்வு முகாமை Senior Advisor, Ministry of Sustainable Develpoment and wild life, கொழும்பு பல்கலைக்கழக இலங்கைகள பறவையியல் குழுவின் காப்பாளரும் கொழும்பு பல்கலைக்கழகவிலங்கியல்துறை பேராசிரியருமான சரத் கொட்டகம நெறிப்படுத்துகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



# நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூ
# தீவகக் கல்வி வலயப் பிரதிக் க
# இராமநாதன் குணநாதன் அவர்களின் ப



### நீர்வையின் முக்கிய நட்சத்திரம்

கல்வியுடையவரே என்றும் எங்கும் உயர்ந்தவர் என்றும் கல்வியே ஆபரணங்கள் யாவினும் உயர்ந்தது என்றும், 'வித்வான் ஸர்வத்ர பூஜ்யதே" எனவும் 'வித்யா ஸர்வஸ்ய பூஷணம்" என்றும் நமது இந்து தர்ம சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு வித்யையை தெளிவுற பெற்றவரின் அடையாளம் என்ன? என்றால் அதற்கும் 'வித்யா ததாதி விநயம்" என்கிறது சாஸ்திரம். அதாவது கல்வி ஆனது அடக்கமாகிய விநயத்தை கொடுக்கிறது.

'சிற்பி" என்ற பிரம்மஸ்ரீ சி. சிவசரவணபவன் அவர்கள் உசன் மகா வித்தியாலயத்தில் முதல்வராக திகழ்ந்த போது அவரால் ஆற்றுப்படுத்தப்பட்டு பல்கலைக்கழகத்துள் பிரவேசித்தவர். அதனால் தமிழ், சைவ பற்று மிக்கவர். இவ்வாறு ஒரு குணநலன்கள் நிறைந்த பெருமகனாரை நீர்வேலி மணமகனாக பெற்று பாக்கியமுற்றது.

எப்படி தென்மராட்சி பெற்றகவிஞர் முருகையன் 'நீர்வை முருகு" ஆகி நம்மூரின் பெருமையை பரப்பினாரோ, அவ்வாறே நம் குணநாதனும் நீர்வேலியில் இணைவு பெற்றது இந்த மண்மகிமையே.

எல்லோரும் அரசபதவிகளில் தமக்கு கிடைத்த வேலையை செய்வார்கள். ஆனால் இவரோ வேதனத்துக்கு அப்பால் ஒரு வேள்வி போல பணி செய்த தியாகி.

எனவே மணிவிழா காணும் தீவக வலய பிரதிக் கல்விப்பணிப்பாளரின் வாழ்வு இன்னும் இன்னும் செழிப்புறவும் அவரது குடும்பத்தாரும் குழந்தைகளும். மகிழ்ச்சியோடு வாழவும் நம் வழிபடு தெய்வமான நீர்வேலி செல்லக் கதிர்காமச் செவ்வேள் திருவடிகளை பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

**வண. பிரம்மஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள்**
**பிரதம குரு, நீர்வேலி செல்லக்கதிர்காமசுவாமி தேவஸ்தானம்.**



### கல்வித்துறையில் பல்வேறு வகிபாகங்களை ஆற்றியவர்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் சிறப்புப் பட்டதாரியான திரு. இ. குணநாதன் அவர்கள் ஆசிரியராக, அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக கல்வித் துறையில் பல்வேறு வகி பாகங்களை திறம்பட ஆற்றியவராவார். இவர் 11.06.2011 தொடக்கம் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டு யாழ்.கல்வி வலயத்தில் கல்வி முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக சிறப்பாகப் பணி யாற்றி தீவக வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

நேர்மை, கடமையில் அர்ப்பணிப்பு என்பனவற்றுடன் கூடிய இவர் பல்வேறு சமூகப்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி சேவையாற்றியவராவார்.

கல்வி நிர்வாக சேவையில் சிறந்த ஒரு அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு. இ. குணநாதன் அவர்கள் ஆற்றிய பணிகளுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு அவரது ஓய்வுக் காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**செ. உதயகுமார், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்**




### மனிதம் நிறைந்த நல்ல மனிதர்

ஆசிரியராக, அதிபராக, யாழ். வலய பிரதிக்கல்விப்பணிப்பாளராக தீவக கல்விவலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக திரு. இ.குணநாதன் அவர்கள் சேவையாற்றி அப்பிரதேச கல்வி வளர்ச்சிக்கு செய்த பங்களிப்பு சிறப்பானது.மனிதம் நிறைந்த நல்ல மனிதன், எதையும் அமைதியாகவும் பொறுமையாகவும் கையாள்வது இவரது திறன், மற்றவாகளுக்கு அறிவுரை கூறுகின்ற அதே நேரம் மற்றவர் கருத்துக்களையும் இவர் கேட்கத் தவறுவதில்லை. ஆயினும் கண்டிப்பானவர்.

இத்தகையோர் அரசகல்விச்சேவையில் இருந்து விடை பெறுவது தூரநோக்கு கொண்ட கல்விச்சிந்தன்னக்கு. எதிர்காலத்தில் இவர்களது அனுபவங்களைப் பெறமுடியாது போய்விடுமோ என எண்ணவும் தோன்றலாம்.

நிர்வாகத்திறனால் எம்மை கவர்ந்த இவர் தனது ஓய்வுக்காலத்தில் குடும்பத்தாருடன் மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

**யோன் குயின்ரஸ், வலயக் கல்விப்பணிப்பாளர் மடு, முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர், தீவகம்**



### நான் சந்தித்த நல்ல மனிதர்

என் வாழ்வில் நான் சந்தித்த நல்ல மனிதர்களில் திரு. இராமநாதன் குணநாதன் அவர்களும் ஒருவர். தனிப்பட்ட வாழ்விலும் பொதுவாழ்விலும் இவர் கடைப்பிடித்த அடக்கம், பணிவு, உண்மை, நேர்மை, நடுவு நிலைமை ஆகிய பண்பு கள் இவருக்கு அணி சேர்த்தன. பணம், பதவிகளுக்கு என் றுமே விலை போகாத தன்மையே, இவரது சமூக மதிப்பை உயர்த்தியது. பொதுப்பணிகள் பல இவரை நாடிவர வைத்தது மிகக் கஷ்டப்பிர தேசத்தில் பிறந்து. அப்பிரதேசத்திலேயே கற்று கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியைப்பெறும் வாய்ப்பினைப் பெற்ற பெருமகன். இவர் வாழ்ந்த கற்ற அக்கடினமான சூழல்தான் ஏழைப்பிள்ளைகள் பால் இவரைக் கரிசனை கொள்ள வைத்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது. அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்திலும், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியிலும் கற்ற ஒவ்வொரு மாணவரும் என்றும் இவரின் பணியை நினைவு கூர்வர். இவரது பணிகள் நிலைத்திருப்பது போல் இவரும் நீடித்த புகழுடன் பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**ஆ. ராஜேந்திரன், ஓய்வுநிலை மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்.**



### சேவையால் உயர்ந்தவர்

நமது தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் காலமாற்றங்களுக்கு ஈடு கொடுத்து செயற்படக்கூடிய சிறந்த மனிதவளத் தொகுதியினரை உருவாக்கி வழங்கி வருகின்ற நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியப் பணியினை எமது கல்விக்கூடங்கள் நிறைவேற்றி வருகின்றன.எனினும் கடந்த முப்பது வருடகாலப் போர்ச்சூழலின் பிரதி விளைவாக ஏற்பட்ட மனவடுக்கள், சமூகக்கட்டொழுங்குச் சிதைவுகள் மற்றும் பாரம்பரிய விழுமியங்களை இயல்பாகவே கையளிக்கும் தொடர் நிகழ்வில் ஏற்பட்ட சந்ததி இடைவெளிகள் கல்வியை ஊட்டுவதிலும் அதன் தராதரத்திலும், வசாலமான தன்மையிலும் பல நலிவுகளை ஏற்படுத்தியது. இதனது வெளிப்பாடுகளை தற்போதைய கல்விக்கூடங்களில் மாணவர்களது நடத்தை கோலங்களிலும் கல்வியை வளங்கும் மனிதவளத்தொகுதியினரது எண்ணப்பாங்குகளிலும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இத்தகைய கலவிச்சூழலில் பாடசாலை முகாமையாளர்களும் நிர்வாகிகளும் எதிர்கொள்கின்ற ஏராளமான சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு கல்வி இலக்குகளை அடைவதற்கேற்ற உயர் வினைத்திறன் மிக்க முகாமையாளர் ஒருவரின் தேவை அவசியமாகின்றது. இந்தவகையில் திரு.இ.குணநாதன் அவர்கள் ஆசானாக, அதிபராக, கல்வி நிர்வாகியாக தனது ஆற்றுகைத் திறன்களை பொறுமை, அன்பு, பரிவு, அடக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, தூர திருஷ்டிப்பார்வை போன்ற குணாம்சங்களின் ஊடாக வெளிப்படுத்தி உள்ளார். பல்லாயிரக்கணக்கான மனித உள்ளங்களில் தனது சேவையின் மூலமாக கொலுவீற்றிருக்கும் மணிவிழா நாயகர் நீடுழி காலம் நிறைவான வாழ்வு வாழ்ந்து கல்விச்சமூகம் பயனுற வேண்டுமென இறைவன் பெயரால் வாழ்த்துகின்றேன்.

**சு. சுந்தரசிவம் ,வலயக் கல்விப்பணிப்பாளர், தீவகம்**



### வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன

அன்னயாவினும் கோடி புண்ணியம் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்னும் பாரதி பாடலுக்கமைய உயர்ந்த பணியான எழுத்தறிவித்தல் பணி செய்பவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள், வாழ்த்தப்பட வேண்டியவர்களே. "கல்விப்பணிகாலமெல்லாம் நன்றியோடு போற்றும் பணி" என்னும் உயர்நிலையில் மதிக்கப்படுகின்றது.

இந்த உயர்வான பணியை உன்னதமாகச் செய்து கல்விச்செல்வத்தை மாணவர்களுக்கு அள்ளிவழங்கும் உயர்பணியை உன்னதமாகச் செய்பவர்கள் "குரு" என மதிக்கப்படுகிறார்கள். அந்தவகையில் தொடர்ந்து 31 வருடங்கள் கல்விப் பணியாற்றி இன்று அகவை அறுபது நிறைவு செய்யும் உயர்திரு.இராமநாதன் குணநாதன் அவர்களை மனதார வாழ்த்துகின்றேன். அதனால் மனநிறைவடைகின்றேன்.1984இல் கொழும்பு முகத்துவாரம் கல்லூரியில் ஆசிரியப்பணியை ஆரம்பித்தவர். யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் 01.06.1991இல் அதிபர் பதவியையும் ஏற்று பல நூறு நன்மாணக்கர்களை உயர்நிலையடையச் செய்த சிறப்பிற்குரியவர். யா/அத்தியார் இந்துக் கல்லூரியில் அதிபர் பதவியை ஏற்று நடத்திய இவர் காலம் கல்லூரியின் பொற்காலம் என்றால் மிகையாகாது. அர்ப்பணிப்புடன் இரவு பகல் பாராது அவர் ஆற்றிய சேவைகளை சமூகம் என்றும் மறக்கமாட்டாது.

அவரிடம் கல்விகற்ற மாணவர்கள் உலகளாவிய ரீதியில் உயர்பதவிகள் வகிக்கின்றமை இவரது சேவைக்குக் கிடைத்தபரிசு.

**த.பரராசசிங்கம், நீர்வேலி வடக்கு, நீர்வேலி**






ஒரே பார்வையில் எங்கள் விழா நாயகர்.
இராமநாதன் குணநாதன் SLEAS III அவர்கள்

**தந்தை** :- சிதம்பரப்பிள்ளை இராமநாதன்.
**தாய்** :- இராமநாதன் சின்னம்மா
**பிறப்பு** :- 02.12.1955 விடத்தற்பளை, தென்மராட்சி.
**திருமணம்:** 28.10.1984 நீர்வேலி
**மனைவி:-** பங்கஜவல்லி
**பிள்ளைகள்:-** * நிரோஜன் * நிஸாந்தி * நிமலன்

### கல்வி நிலை

**ஆரம்பக் கல்வி** :- யா/ விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்
**சிரேஷ்ட கல்வி** :- யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
**உயர் கல்வி** :- கொழும்பு பல்கலைக்கழகம் (பொருளியல் சிறப்பு)
B.A (Hons) 1977 - 1981
**பட்டப்பின் கல்வி டிப்ளோமா** :- தேசிய கல்வி நிறுவகம் 1992 - 1994
**கல்வி முதுமாணி:-** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 2007
**அதிபர் தரம் II:-** 01.06.1991 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை
**அதிபர் தரம் I** :- 01.06.1996 திறமை, சேவை மூப்பு
**இலங்கை கல்வி நிர்வாக சேவை III** :- 11.06.2011 சேவை மூப்பு, பரீட்சை

### சேவை விபரம்

1982 - 1984 உதவி ஆசிரியர், வீரகேசரி பத்திரிகை நிறுவனம், கொழும்பு

### அரச சேவை விபரம்

05.08.1984 - 15.04.1990- ஆசிரியர், கொ/ முகத்துவாரம் இந்துக் கல்லூரி
16.04.1990 - 07.11.1991- ஆசிரியர், யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்
08.11.1991 - 11.08.1995- உப அதிபர், யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்
12.08.1995 - 21.03.2002 -அதிபர், யா / அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்
22.03.2002 - 02.11.2011 -அதிபர்,யா / நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
03.11.2011 - 15.01.2013- பிரதிக் கல்விப் பணிப்பாளர் (மாணவர், அபிவிருத்தி) வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்.
16.01.2013 - 01.12.2015 பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) வலயக் கல்வி

### பொதுப்பணிகள்

தலைவர், கலை பண்பாட்டு மன்றம், நீர்வேலி.
தலைவர், நீர்வேலி நலன்புரிச்சங்கம் இலண்டன், நீர்வேலிக் கிளை.
இணைப்பாளர், நீர்வேலி நற்பணிச்சங்கம் - சுவிஸ்
பொருளாளர், கல்வி மேம்பாட்டுப் பேரவை, யாழ்.மாவட்டம்

### இன்று மாலை மணிவிழா

இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோவில் அருகில் உள்ள திருமுருகன் மணி மண்டபத்தில் மணிவிழா நடைபெறுகின்றது. மணிவிழாவையொட்டி குணநாதம் என்ற 230 பக்கங்கள் கொண்ட மணிவிழாச் சிறப்பு மலரும் வெளியிடப்படுகின்றது. இந்நிகழ்வுகளில் விழா நாயகரின் அன்பர்கள், அபிமானிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- விழாக் குழுவினர்



# ...ல்லூரியின் முன்னாள் அதிபரும்
# ...் கல்விப் பணிப்பாளருமாகிய
# ...ன் மணிவிழாச் சிறப்பிதழ்- 02.12.2015

...ள்

...ப்பு)

... 1994

...சை

...ரீட்சை

...கொழும்பு

...க் கல்லூரி
... வித்தியாலயம்
...தியாலயம்
...தியாலயம்
...துக் கல்லூரி
..., அபிவிருத்தி)
...ாழ்ப்பாணம்.
... வலயக் கல்வி

...ளை.

...வாமி கோவில்
...டபெறுகின்றது.
...ட மணிவிழாச்
...ழா நாயகரின்
...று அன்புடன்

...ாக் குழுவினர்



**நாமத்திற்கேற்ப நற்குணங்கள் கொண்டவர்**

தீவககல்விப்புலத்தில் பலர் பல்வேறு நிலைகளில் கல்விப்பணியாற்றிச் சென்றுள்ளனர். ஆயினும் கண்ணியத்தோடும்,நேர்மையோடும்; கடமையுணர்வோடும் பணியாற்றியவர் என்ற வகையில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் மதிப்பார்ந்த இ. குணநாதன் அவர்களைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன். அவர்தம் நாமத்திற்கேற்ப பலநற்குணங்கள் படைத்தவர். மனிதர்களை மனதார மதிக்கின்றவர். அவர்களிடம் பேரன்புகாட்டுகிறவர். கருணையுள்ளம் கொண்டவர். மனிதநேயமிக்கமகான். ஒவ்வொருவரையும் இலகுவாகக் கணிப்பிட்டு அவரவர் திறமைகள் தகுதிக்கு ஏற்ப பொறுப்புக்கள் கடமைகளை வழங்கிப் பணிகளைப் பெறுவதில் கைதேர்ந்த நிர்வாகி. கூட்டங்களில் உரையாற்றும் போது விடயங்களைக் கச்சிதமாகவும்,விளங்கக் கூடியவாறும், விரைவாகவும் எடுத்துக்கூறி கேட்போரைத் தன்வழியின்பால் ஈர்ப்பதில் வல்லவர். தன் நேரத்தையும் பிறர் நேரத்தையும் பொன்னென மதிப்பவர். சொன்னசொல் தவறாதவர்.

திரு. இ. குணநாதன் அவர்கள் கல்வி நிதி நிர்வாக விடயங்களையும்கற்பித்தல் விடயங்களையும் தன் விரல் நுனியில் வைத்துள்ளவர். என்ன விடயத்தையும் இவரிடம் கேட்டுத்தெரிந்துகொள்ளக் கூடிய புலமையாளன். எப்போதும் எவ்வேளையிலும் அணுகப்படக் கூடியவர். இவரின் திறமைகளையும் அர்ப்பணிப்பையும் பெற்ற நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி. இவரின் காலத்தில் உயர்ந்து பல சாதனைகள் படைத்ததையும்,பன்மடங்குவளர்ச்சிகண்டதையும் இன்றும் பலர் சொல்லக் கேட்கின்றோம். இவ்வாறான பல்துறை ஆற்றல் பெற்ற கல்வியியலாளர் ஓய்வு பெறுவதில்லை. மாறாக மென்மேலும் கல்வியோடுபற்பலசமூகச் சேவைகளைச் செய்யும் சுதந்திரம் பெற்றுக்கொள்கின்றார். இவ்வகையில் பேராசான் இ. குணநாதன் அவர்களின் பணிகள் வளரவும்,அதனால் நீர்வேலி மண் மட்டுமல்ல தமிழ் சமூகமே பயன்கள் பலபெறவும் ஆசிக்கின்றேன்.

**வணபிதா. க. ஜேம்ஸ் சிங்கராயர், அதிபர், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.**




**பிரதேச செயலகச் செயற்பாடுகளில் கைகோர்ப்பவர்**

திரு. இ.குணநாதன் அவர்கள் எமது பிரதேசம் எடுக்கும் சமூக நலன் சார்ந்த விடயங்களில் எம்முடன் கைகோர்த்துச் செயற்பட்டவர். வலிகாமம் கிழக்குப் பிரதேசம் பற்றிய ஆவணப்படுத்தலை மேற்கொள்ளும் முகமாகவும் கலைகளை வளர்க்கும் நோக்குடனும் எமது பிரதேசச் செயலகத்தின் வழிகாட்டலில் கிராமிய மட்டங்களில் கலை பண்பாட்டு மன்றங்கள் அமைக்கப்பட்டன. அந்த வகையில் நீர்வேலி பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் நிறுவப்பட்ட போது அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு மிகச் சிறப்பான விழாவையும் திருநீர்வை என்ற ஆவண மலரையும் வெளியிடுவதில் திரு. குணநாதன் அவர்கள் அளப்பரிய பங்களிப்பை நல்கினார்.

எமது பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படும் விளையாட்டு விழாக்கள் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடத்தப்படுவதை நாம் வழக்கமாகக் கொண்டுள்ளோம். அந்தப் பாடசாலையில் இத்தகைய பெரும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தக்கூடியதாக 400 மீற்றர் ஓடுபாதையுடன் கூடிய மைதானத்தை உருவாக்கிய பெருமை திரு. குணநாதனையே சாரும். எமது விளையாட்டு போட்டி நிகழ்வுகளுக்கான சகல வகையான ஒத்துழைப்புக்களையும் வழங்கி நிகழ்வுகள் வெற்றி பெறுவதற்கு உழைக்கும் அவரது சமூக உணர்வை இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

**ம. பிரதீபன்,வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர்.**



**அத்தியார் இந்துவின் கற்றல் கலாசாரத்தின் அச்சாணியாக விளங்கியவர்**

நாம் சந்தித்த இடப்பெயர்வின் பின்னர் 1997, 1998ஆம் ஆண்டு காலப் பகுதிகளிலே சமூகக்கல்வியும், வரலாறும் பாட சேவைக்காலப் பயிற்சிவகுப்புகளிலே என் போன்ற ஆசிரியர்களுடன் ஓர் அதிபரும் கலந்து கொள்கின்றார். என்பதை அறிந்து முதன் முதல் இவருடன் அச்சத்துடன் நெருங்கிப் பழகலானேன். நெருங்கிச் சென்றதும் அவரது ஆற்றலைப் புரிந்து கொண்டதுடன் படவேலை செயற்பாடுகளில் பலவிடயங்களை அவரிடம் இருந்து நுட்பமாகப் புரிந்து கொண்டேன். இந்த நட்பு நான் அதிபரானதும் வலுப்பெற்றது. கோப்பாய் கோட்ட அதிபர் கூட்டங்களில் ஆணித்தரமான கருத்துக்களால் சிரேஷ்ட அதிபராக தனது நிலையை நிறுத்திக் கொண்ட இவர் பின்தங்கிய ஏழ்மை மாணவர்களின் கல்வி நலனில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார்.

அத்தியார் இந்துக்கல்லூரிக்கு என்னை அதிபராக நியமிப்பதற்கு உத்தேசித்த காலகட்டத்திலே இவரது காத்திரமான கருத்துக்கள் பாடசாலைச் சமூகத்திற்கு என்மீது பற்றுதலைத் தோற்றுவித்ததென்பதை பின்னாளில் அறிந்து கொண்டேன். இன்றும் அத்தியார் இந்துக்கல்லூரியின் கற்றல் கலாசாரத்தின் பல்வேறு படிமங்களும் இவரின் காலத்தில் தோற்றம் பெற்றதாகவே காணப்படுகின்றன. இத்தகைய கல்விமான் நீர்வேலிக் கிராமத்துடன் இரண்டறக்கலந்துள்ளார் என்பது நீர்வேலி நலன்புரிச்சங்கத்தின் தூணாக நின்று செயற்பாடுகளை ஒன்றிணைப்பதில் இருந்து புலனாகிறது. இத்தகைய சீராளன் பதவியில் இருந்து ஓய்வு பெற்றாலும் கல்விப்பணியில் தொடர்ந்திட எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு வேண்டிய வல்லமைகள் அனைத்தையும் வழங்க வேண்டுமென இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

**கு. ரவிச்சந்திரன், அதிபர், யா/ அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.**



**சிந்தனை, சொல், செயல் என அனைத்தும் ஒன்றித்தவர்**

சிந்தனையும் சொல்லும் ஒன்றித்துச் செயற்படும் மனிதர்களைக் காண்பது அரிது. என் பார்வையில் அதிபர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ.குணநாதன் இத்தகு குணங்களைத் தன்னகத்தே கொண்டவராக விளங்குகின்றார். நீர்வேலி பிரதேசத்தின் கல்வி உயர்ச்சிக்காகப் பல திட்டங்களை முன்னெடுத்த பெருமை திரு. இ.குணநாதன் அவர்களைச் சாரும். நீர்வேலியில் இயங்கும் கல்விசார் அமைப்புக்களுக்குத் தனது ஆதரவை அவர் எந்நேரமும் வழங்கும் இயல்புடையவர். இதனை நான் பல தடவைகள் அவதானித்திருக்கின்றேன். யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கிராமங்களில் நீர்வேலி நன்றியுணர்வுடையோர் வாழ்கின்ற பதி. கிராமத்திற்காக உழைத்தவர்கள் இங்கு நன்றியுடன் போற்றப்படுகின்றார்கள்.

திரு. இ. குணநாதனைப் பொறுத்தவரையில் அவர் ஆற்றிய கல்விப் புலம் சார்ந்த பணிகளுள் அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபராக அவர் வழங்கிய சேவையே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். நீர்வேலிக் கிராமம் சார்ந்த புலம்பெயர் உறவுகள் பலர் அவர் மீது அபிமானம் கொண்டிருக்கின்றமைக்குக் காரணம் அவரது காலத்தில் அத்தியார் இந்துக் கல்லூரி கண்ட எழுச்சியாகும். இதன் நன்றி வெளிப்பாடாகவே இவரது மணி விழாவை நோக்குகின்றேன்.

இன்று இலங்கையின் எழுத்தறிவு, கணனித்துறைசார் அறிவு உயர்ந்திருக்கின்றது. மனித வாழ்வுக்காலம் உயர்ந்திருக்கின்றது. எனவே ஆரோக்கியமுள்ள நிலையில் வாழும் மனிதர்கள் தமது அரச பணி ஓய்வுக்குப் பின்னர் சமூக நன்மை கருதிய துறைகளில் தங்களை ஈடுபடுத்தி சமூகத்திற்காக உழைப்பது சாலப்பொருத்தமானது. திரு. குணநாதனிடம் சிறந்த அனுபவத் திரட்சி இருக்கின்றது. இவையாவும் எமது சமூகத்திற்குத் தொடர்ந்து கிட்ட வேண்டும் என வேண்டுவதோடு திரு.குணநாதன் அவர்கள் தன்து ஓய்வுக்காலத்தில் உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் தி. வேல்நம்பி**
**பீடாதிபதி, வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம் ,**
**தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்**



**நீர்வேலி அத்தியார் இந்துவை ஒளிரச் செய்த பெருமகன்**

அத்தியார் இந்துக் கல்லூரியில் பல்வகைப் பெருமைகளோடு கடமை புரிந்த பன்முக ஆளுமை கொண்ட புகழ்பூத்த அதிபர்கள் பலரது செயற்பாடுகளுக்கு மேலாக "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற கூற்றிற்கு அமைய அத்தியார் இந்துவை பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள், ஊரவர்கள், கல்விசார் வளத்தினர் போன்ற சகல தரப்பினரின் பூரண ஒத்துழைப்புக்களை தனது அயராத சேவை மூலம் ஒன்று திரட்டி பாடசாலையை சகல படிகளிலும் ஒளியூட்டி பெருமைப்படுத்தியவர் திரு. இ.குணநாதன் ஆவார். இதனை நீர்வேலி சமூகம் மிக நன்றியுடன் நினைவில் வைத்துள்ளமையே இன்றைய மணிவிழாவின் கருப்பொருள் என்பதை நான் நன்கறிவேன். தம்மை தாமே வெல்வதே மற்றவர்களை வெல்வதிலும் மேலானது என்ற அயராத உழைப் போடு தற்பெருமையின்றி தன்னடக்கத்தோடு ஏழைப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக உழைத்த திருவாளர் குணநாதன் அவர்கள் தனது அதிபர் பதவியிலிருந்து ஒருநிலை உயர்ந்து கல்விப் புலப் பணிப்பாளராக உயர்ந்து பெருஞ்சேவை புரிந்தமையை கல்விசார் உலகம் சீர்தூக்கி மகிழ்வடைந்த பல செய்திகளையும் நான் அறிந்து மகிழ்ச்சி கொண்டேன்.

நீர்வேலி கிராமத்தின் தற்போது வசிக்கின்ற மூத்தவர்கள் வரிசையில் மிகவும் அர்த்தமுள்ள பலருக்கு எடுத்துக்காட்டக்கூடிய திரு. குணநாதனின் வாழ்வு மேலும் மேலும் வளரவும், அவரது உடல் நலம், குடும்பப் பலம் மேலோங்கவும் எல்லாம்வல்ல நீர்வேலி அரசகேசரியான் பாதங்களை பணிவோடு வேண்டி திரு. குணநாதன் உயரிய சேவையை நீர்வேலிக்கு காலமெல்லாம் நல்கிட வாழ்த்துகின்றேன்.

**வே. கா. கணபதிப்பிள்ளை , முன்னாள் அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.**



**குன்றின் விளக்கு குணநாதன்**

திரு. இ. குணநாதன் அவர்கள் எமது கல்விக் கோட்டத்தின் ஆசிரியராக இருந்து பின் அதிபராக இருந்த காலப்பகுதியை எண்ணிப் பார்க்கின்றேன்.

அகவை அறுபது என்பதைச் சொல்ல முடியவில்லை. தங்களின் இளமைத்துடிப்பும் இலட்சியப் பற்றும் புன்சிரிப்பும் அனுபவ அறிவும் ஓய்வைத் தரவில்லை. ஆவணங்களால் மட்டுமே தங்களுக்கு ஓய்வு. தொடரட்டும் உங்கள் சமூகப் பணி என மனமார வாழ்த்துக்கின்றேன்.

**மு. விக்னேஸ்வரன், அதிபர் யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், தலைவர், கோப்பாய்க் கல்விக் கோட்ட அதிபர் சங்கம்**



**வெற்றிகரமான தலைமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டானவர்**

தமது துறை சார்ந்த அதன் வளர்ச் சிக்கான தனது இலக்கை அடைவதற்கு உதவக்கூடியதாகக் கற்பவர்கள் வெற்றிகர மான தலைமைத்துவத்தைக் கொண்டவர் களாவார்கள். ஆம், அத்தகையதான ஒரு தலைமைத்துவப் பண்பை எட்டிநிற்கின்ற வர் தான் இன்றைய மணிவிழா நாயகன் திருவாளர் இ.குணநாதன் அவர்கள். அகவை அறுபது காணுகின்ற இவ்விழா நாயகரை வாழ்த்துவதில் நீர்வேலி வாழ் கல்விச் சமூகத்தின் சார்பில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்று,
ஆய்ந்து அதனை அவன் கண் விடல்"

என்ற வள்ளுவரின் பொய்யாமொழிக்கு இணங்க ஆசிரியர், அதிபர், கல்விப்பணிப்பாளர் எனப் பற்பல உயர்நிலைப் படிகளில் இருந்து பாடசாலைக்கும் சமூகத்திற்கும் அரிய பல கடமைகளைச் செய்து இன்று மணிவிழாக் காணுகின்றார். குறிப்பாக எமது அத்தியார் இந்துக்கல்லூரியின் வளர்ச்சியில் இவரது காலம் ஒரு படிக்கல் என்றே கூறலாம். அத்தகைய சிறந்த பண்பாளராகவும், கல்வியாளராகவும், கடமையுண ர்வுடையவராகவும் விளங்கும் இவரது தன்னலமற்ற சேவை மென்மேலும் தொடரவும், பல்லாண்டு காலம் வாழவும் எல்லாம்வல்ல இறைவன் அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

**வனஜா செல்வரட்ணம், உதவிப் பணிப்பாளர், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

**தலைமை: திரு. வே. கா.கணபதிப்பிள்ளை அவர்கள்**
(முன்னாள் அதிபர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்)

**வரவேற்புரை:**
**திரு. த. நடராசா அவர்கள்**
(முன்னாள் செயலாளர், வலி.கிழக்கு பிரதேச சபை, காப்பாளர், மணிவிழாக் குழு)

**ஆசியுரைகள்:**
**சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் அவர்கள்**
(பிரதம குரு, நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி தேவஸ்தானம்)
**அருட்திரு. க.ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார்**
(அதிபர், யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை)

**வாழ்த்துரைகள்:**
**பேராசிரியர் தி.வேல்நம்பி அவர்கள்**
(பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
**திரு.செ.உதயகுமார் அவர்கள்**
( வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்)
**திரு. ஆ.இராஜேந்திரன் அவர்கள்**
(முன்னாள் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்)
**திரு. ம.பிரதீபன் அவர்கள்**
(பிரதேச செயலர், பிரதேச செயலகம், கோப்பாய்)
**திரு.த.ந.பஞ்சாட்சரம் அவர்கள்**
(ஆங்கில ஆசான், நீர்வேலி)
**திரு.தி.ஜோன்குயின்ரஸ் அவர்கள்**
(வலயக் கல்விப் பணிப்பாளர், மடு வலயம்) முன்னாள் கல்விப்பணிப்பாளர் தீவக கல்வி வலயம்)
**திரு. சு.சுந்தரசிவம் அவர்கள்**
(வலயக் கல்விப் பணிப்பாளர், தீவக கல்வி வலயம்)

**'குணநாதம்' மணிவிழா மலர் வெளியீட்டுரை:**
**திரு. ச.லலீசன் அவர்கள்**
(பிரதி அதிபர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய், இணைச் செயலாளர், மணிவிழாக்குழு)

**பாராட்டுரைகள்:**
**திரு.த. இராசலிங்கம் அவர்கள்**
(ஆரம்பக் கல்வி முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்)
**திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்கள்**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், (நிர்வாகம்) தென்மராட்சி கல்வி வலயம்)
**திரு.சு.சற்குணராசா அவர்கள்**
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)
**திரு.அ.அகிலதாஸ் அவர்கள்**
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்)
**திருமதி. வனஜா செல்வரட்ணம் அவர்கள்**
(உதவிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடமாகாணம்)
**திருமதி. நிறைஜா மயூரதாசன் அவர்கள்**
(உதவிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), தீவக கல்வி வலயம்)
**திரு. பூ. இராஜ்வினோத் அவர்கள்**
(உதவி திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், கண்டாவளை)
**திரு. மு.விக்னேஸ்வரன் அவர்கள்**
(தலைவர், கோப்பாய் கோட்ட அதிபர் சங்கம்)
**திரு. கு.இரவிச்சந்திரன் அவர்கள்**
(அதிபர், யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, உப தலைவர், மணிவிழாக்குழு)
**திரு. த. பரராசசிங்கம் அவர்கள்**
(சமாதான நீதவான், காப்பாளர், மணிவிழாக் குழு)
**திரு. ம.சசிகுமார் அவர்கள்**
(ஆசிரியர், கிளி/ தர்மபுரம் மத்திய கல்லூரி , உறுப்பினர் மணிவிழாக்குழு)
**திரு.கா.கௌரீசன் அவர்கள்**
(கணக்கீட்டு உத்தியோகத்தர், மாவட்ட நீதிமன்றம், முல்லைத்தீவு, உறுப்பினர் மணிவிழாக்குழு)
**திரு.சீ.கமலதாஸ் அவர்கள்**
(ஆசிரியர், யா/காரைநகர் தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாலம்)

**நன்றியுரை:**
**திரு. சி.தர்மரத்தினம் அவர்கள்**
(அதிபர், யா/ நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை, இணைச் செயலாளர், மணிவிழாக்குழு)

# பட்ஜெட் முன்மொழிவுகள்

(தொடர்ச்சி...)

### மாளிகை வரி

இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மாளிகை வரி தொடர்பான ஏற்பாடுகள் கூட்டாதனங்கள் நீங்கலாக தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

### சுங்கத்தீர்வைக் கட்டமைப்பினைக் குறைத்தல்

தற்பொழுது சுங்கத் தீர்வையாக 4 அறவீட்டு மட்டங்கள் காணப்படுகின்றன. அவை 0 சதவீதம், 7.5 சதவீதம், 15 சதவீதம், 25 சதவீதம் மற்றும் நிலையான உயர் விகிதம் என்பனவே அவையாகும். ஏறக்குறைய 7,000 இயைபு முறைக் குறியீடுகளில் 50 சதவீதமான பொருட்கள் 0 சதவீதமாகக் காணப்படுகின்றன. அவற்றுள் 2 சதவீதம் மாத்திரம் 7.5 சதவீதமாக காணப்படுகின்றன. வரிக் கட்டமைப்பினை மேலும் இலகுபடுத்துவதற்கு 7.5 சதவீத மட்டத்தினை நீக்குவதற்கும் 25 சதவீத மட்டத்தினை 30 சதவீதமாக அதிகரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன. அந்த வகையில் இலங்கை 0 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 30 சதவீதம் ஆகிய 3 சுங்கத்தீர்வை கட்ட மைப்பினை மாத்திரம் கொண்டிருக்கும்.

### துறைமுகம் மற்றும் விமான நிலைய அறவீடு

நிர்மாணம், பாற் பண்ணை மற்றும் விவசாயக் கைத்தொழில்களுக்காக பயன்படுத்தப்படும் பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் தவிர ஏனையவற்றுக்கான துறைமுக மற்றும் விமான நிலைய அறவீட்டினை 5 சதவீதத்திலிருந்து 7.5 சத வீதமாக அதிகரிப்பதற்கு நான் முன் மொழி கின்றேன்.

### மதுபானம் மீதான வரிகள்

மதுபான வரியிலிருந்து பெறப்பட்ட வருமானம் 2015 ரூபா 100 பில்லியனாகக் காணப்பட்டது. சட்ட ரீதியற்ற மற்றும் கள்ளச் சாராயங்களின் மூலமும் உற்பத்தி வருமானத்தினை அளவிடுவதில் காணப்படும் தவறுகள் காரணமாகவும் இவ்வாறான தொகையொன்று அரசாங்கத்துக்கு கிடைக்காமல் போனது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மது பானத்திற்கு ஏற்புடையதான அதே நடைமுறையினை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மதுபானத்திற்கும் பிரயோகிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இப்போக்கினை ஓரளவுக்கு வெற்றி கொள்ள 2005 இல் எம்மால் முடியுமாக இருந்தது. அத்தகைய சட்ட ரீதியற்ற மதுபான பாவனையினை எம்மால் குறைக்க முடியுமாக இருந்தது என்ற வகையில் மேலும் ரூபா 100 பில்லியனைச் சேகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்த முடியும். இந் நோக்கத்திற்காக பின்வரும் விடயங்களை நான் முன்மொழிகின்றேன்.

### விசேட ஸ்ரிக்கர்

வரி செலுத்தப்பட்ட ஒவ்வொரு மதுபான போத்தலுக்கும் விசேட ஸ்ரிக்கர்கள் ஒட்டுவதன் மூலம் அத்தாட்சிப் படுத்தப்படும். வரி செலுத்தப்பட்ட மதுபான போத்தல்களை இனங்காண்பதற்கு மதுவரி அலுவலர்களுக்கு இது உதவியாக இருக்கும். இந்த ஸ்ரிக்கர் தயாரிப்பாளர்கள் அரசாங்கத்தின் கொள்வனவு நடவடிக்கை களை பின்பற்றுவதன் ஊடாக சர்வதேச கேள்விப்பத்திரம் கோருவதன் மூலம் தெரிவு செய்யப்படுவர். இந்த வெளிப்படையான நடவடிக்கையினை அமுல்படுத்துவதன் மூலம் ஒழுங்கு விதிகளுக்குட்படாத சட்ட ரீதியற்ற மதுபானங்கள் நுகர்வோருக்கு செல்வதனை தடுக்க முடியும்.

### மதுபான தயாரிப்பு உரிமைக் கட்டணத்தினை அதிகரித்தல்

வடிசாலை ஒன்றுக்கான வருடாந்த தயாரிப்பு உரிமைக் கட்டணத்தினை ரூபா 150 மில்லியனாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும்தற்பொழுது காணப்படும் போத்தல் ஒன்றுக்கான உரிமைக் கட்டண முறையானது சிக்கலாகக் காணப்படுவதனால் மதுபானத் தயாரிப்பாளர்களுக்கான வருடாந்த உரிமைக் கட்டணத்தினை ரூபா 150 மில்லியன் என்ற ஒற்றை கட்டண் முறையொன்றினை விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். மதுபானத்திற்கான உற்பத்தித் தீர்வை இன்று நள்ளிரவிலிருந்து திருத்தப்படும்.

### உரிமம் வழங்கல் திட்டத்தினை இலகுபடுத்தல்

தற்பொழுது காணப்படும் சிக்கலான உரிமம் வழங்கும் திட்டம் இலகுபடுத்தப் படுவதுடன் சிலவேளை விற்பனைக்கு ஏற்புடையதான வரையறைகள் நீக்கப்படும்.

### செலுத்தவேண்டிய ஆகக் குறைந்த மதுவரி

வடிசாலைகள் மற்றும் மதுபானத் தயாரிப்பாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது ரூபா 200 மில்லியனை மதுவரியாக சேகரிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை அறி முகப்படுத்துவதற்கு வசதியாக மதுவரிக் கட்டளைச் சட்டத்திற்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

### மதுபானம் மீதான இறக்குமதித் தீர்வையினை அதிகரித்தல்

இவ் வருடத்தின் செப்டெம்பர் மாதத்தில் மதுபானத்திற்கான விலை போதத்தல் ஒன்று ரூபா 40 - 60 இனால் அதிகரித்தது. அத்தகைய அதிகரிப்பினை ஒத்ததாக இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள் மீதான வரியும அதிகரிக்கப்படுதல்வேண்டும். இந்த வகையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானத்தின் விலை அதிகரிப்புக்கேற்ப வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட ஈதையில் மதுபானம் அனைத்திற்குமான வரிகளை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபான உரிமம

தற்பொழுது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானம் 10 தொகை லீற்றர்கள் மாத்திரம் எடுத்துச்செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதே வேளை, இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களை எடுத்துச் செல்வதற்கு எவ்வித வரையறையும் அமுல்படுத்தப்படவில்லை. எனவே இவ் விடயத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானத்திற்கு ஏற்புடையதான அதே நடைமுறையினை இறக்குமதி செய்யப்பட்ட மதுபானத்திற்கும் பிரயோகிப்பதற்கும நான் முன்மொழிகின்றேன்.


### பீடி இலைகள் மீதான சுங்கத்தீர்வை

1990 களில் ஆரம்பத்தில் வருடாந்த உள்நாட்டு சிகரட் நுகர்வு 5 ஆயிரத்து 500 மில்லியனுக்கு மேற்பட்டதாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் காலத்திற்கு காலம் சிகரட் விலை அதிகரித்ததுடன் சுகாதாரத்திற்கு ஏற்படும் ஆபத்துத் தொடர்பான விழிப்புணர்வு பொது மக்களிடத்தில் அதிகரிப்பதனாலும் தற்பொழுது வருடாந்த சிகரட் பாவனை 3 ஆயிரம் மில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு மாற்றமாக பீடி இலைகளின் இறக்குமதி பீடி உற்பத்தியில் வளர்ச்சிப் போக்கினை ஏற்படுத்தியுள்ளது. சிகரட் விலைகள் ஒவ்வொரு வருடமும் அதிகரித்த போதிலும், பீடி விலை அதிகரிக்கப்படவில்லை. புகையிலைப் பாவனையினை ஊக்கம் குன்றச் செய்யும் வகையிலும் ஆகக் குறைந்த விலையினை ஸ்தாபிபபதற்கும் பீடி விலைகள் மீதான சுங்கத் தீர்வையினை அதிகரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். மேலும் பீடி தயாரிப்பு அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா ஆயிரத்து 500 இலிருந்து ரூபா 5 ஆயிரம் ஆக அதிகரிக்கப்படும்.

### பயணிகள் அறவீட்டினை அதிகரித்தல்

பயணிகள் அறவீட்டினை 25 ஐ.அ.டொலரிலிருந்து 30 ஐ.அ.டொலராக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இது கப்பல் மற்றும் விமானப் பயணிகளுக்கும் ஏற்புடையதாக இருக்கும். திரட்டு நிதியத்திற்கான பயணிகள் அறவீட்டு வருமானத்தின் பங்களிப்பினை தற்பொழுது காணப்படும் மூன்றில் ஒன்றினை மூன்றில் இரண்டாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## ஒரு நாள் சேவை கடவுச் சீட்டுக்கட்டணம் அதிகரிப்பு



### கடவுச்சீட்டுக் கட்டணம்

கடவுச்சீட்டுக் கட்டணம் அண்மைக் காலத்தில் திருத்தப்படவில்லை. ஆயினும் கடவுச்சீட்டுகளை அச்சிடுவதற்கான செலவினம் அதிகரித்துள்ளது. இதற்கமைவாக ஒரு நாள் சேவை விண்ணப்பத்திற்கான கட்டணத்தினை ரூபா 7 ஆயிரத்து 500 இலிருந்து ரூபா 10 ஆயிரம் ஆக அதிகரிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன். மேலும் இரட்டைப் பிரஜா உரிமைக்கான விண்ணப்பக் கட்டணத்தினை ரூபா 2 இலட்சத்து 50 ஆயிரம் இலிருந்து ரூபா 3 இலட்சம் ஆக அதிகரிப்பதற்கும் தெற்காசிய நாடுகளுக்கான வீசாக் கட்டணத்தினை 20 ஐ.அ. டொலராக அதிகரிப்பதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

### வதிவிட வீசாவினை அறிமுகப்படுத்தல்

வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிப்பதற்காக மூன்று வருட காலப்பகுதிக்கு வதிவிட வீசாவினை வழங்குவதற்கு 250,000 ஐ.அ. டொலரினை கட்டணமாக அறவிடுவதற்கு நான் முன் மொழிவதுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் வெளிநாட்டவர்களுக்கான நிரந்தர வதிவிட வீசாவினை வழங்குவதற்கு 5 மில்லியன் ஐ.அ. டொலரினை அறவிடுவதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

### தொலைத்தொடர்புகள் தொழில் மீதான வரி

சர்வதேச தொலைத்தொடர்புகள் இயக்குனர் கட்டணமானது உள்வரும் சர்வதேச அழைப்புக்கள் மீது நிமிட அடிப்படையில் ஒரு நிமிடத்திற்கு ஐ.அ. டொலர்கள் 9 சதங்கள் கட்டணமாக அறவிடப் படும். அத்தொகையின் ஒரு நிமிடத்திற்கான ஐ.அ.டொலர் 3 சதங்களை மாத்திரமே இயக்குநர்கள் திரட்டிய நிதிக்கு வழங்குகின்றனர். சர்வதேச தொலைத் தொடர்புகள் இயக்குநர் கட்டணத்தை ஐ.அ.டொலர் 9 சதத்திலிருந்து 12 சதங் களாக அதிகரிப்பதற்கும், அவ்வதிகரிக்கப்பட்ட முழுத் தொகையையும் திரட்டிய நிதியத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

### ஏற்றுமதிக் கம்பனிகளின் உள்நாட்டுச் சந்தை விற்பனை

ஏற்றுமதியினை மையமாகக் கொண்ட முதலீட்டு ஊக்குவிப்புச் சபைக் கம்பனிகள் அவற்றின் மொத்த உற்பத்தியில் 5 சதவீதத்தினை மாத்திரம் உள்நாட்டுச் சந்தையில் வழங்குவதற கு அனுமதிக்கப்படும்.

## பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் மூடப்பட்டால் 5 இலட்சம்

### கம்பனிப் பதிவுக் கட்டணத்தை அறிமுகப்படுத்தல

பதிவு செய்யப்பட்ட பெருமபாலான கம்பனிகள் தொழிற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்தகைய கம்பனிகளை தொழிற்படக் கூடியனவாக மாற்றுவதற்கு, பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் அனைத்தும் மாதம் ஒன்றுக்கு பதிவாளரினால் அறவிடப்படும் கட்டண மாக 7 ஆயிரம் 500 ரூபாவனை செலுத்துவதற்கு நான் முன் மொழிகின்றேன். மேலும் தன்னார்வக் கலைப்பினை தூண்டாதிருப்பதற்காக கம்பனிகளின் தன்னார்வக கலைப்பின் மீது ரூபா 5 இலட்சத்தினை அறவிடு வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

2016 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பதிவு செய்யப்பட்ட அனைத்து தொழில் முயற்சிகளும் தமது உள்ளூராட்சி சபைகளுடன் வருடமொன்றுக்கு 100 ரூபா என்ற சாதார கட்டணத்தினை செலுத்தி பதிவு செய்தல் வேண்டும். புதிய வியாபார தொழில்முயற்சிகள்மின்சாரம் மற்றும் நீர் இணைப்புகள், வங்கிகளிலிருந்து கடன் வசதிகளினை பெறல் என்பவற்றுக்கு இப் பதிவானது முன் தேவைப் பாடாக கொள்ளப்படும்.

(தொடரும்...)

# மீனவர்கள் கைது செய்யப்படுவதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்



தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்களை இந்திய மத்திய அரசு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று அந்த நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடியிடம், தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஜெயலலிதா எழுதியுள்ள கடிதத்தில்,

## ஜெயலலிதா வலியுறுத்து

இராமேஸ்வரம், ஜகதாப் பட்டினத்திலிருந்து 2 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 8 மீனவர்களை இலங்கை கடற்படை ஞாயிற்றுக் கிழமை அதிகாலை கைது செய்து காங்கேசன்துறைக்கு கொண்டு சென்றுள்ளது.

பாக் நீரிணைப் பகுதியில் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை உறுதி செய்ய தமிழக அரசு உறுதியாக உள்ளது. இதைத் தடுக்க மீனவர்களைக் கைது செய்தும், தாக்குதல்களை நடத்தியும் இலங்கைக் கடற்படை நடவடிக்கை மேற்கொள்கிறது.

இத்தகைய சம்பவங்களை இந்திய அரசு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். மீனவர்களை விடுவித்தாலும், படகுகளை விடுவிப்பதில்லை என்று இலங்கை அரசின் நிலைப்பாடு எடுத்துள்ளது. மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பதோடு, பதற்றத்தையும் ஏற்படுத்துகிறது.


இதேநேரத்தில், ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்ட மீனவர்களையும் சேர்த்து, இலங்கையின் வசமுள்ள 37 மீனவர்களையும், 55 படகுகளையும் விடுவிப்பதற்கான நவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வெளியுறவுத் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்.

அதேபோல், படகு பழுதானதால் இலங்கைக் கடற்கரையில் ஒதுங்கியுள்ள 4 மீனவர்களையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும என முதல்வர் வலியுறுத்தியுள்ளார். (இ-7-10)

# பதவி விலகிய போதிலும் அவன்கார்ட் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவேயில்லை

## திலக் மாரப்பன ஆதங்கம்

(கொழும்பு)



**பதவி விலகிய போதிலும் அவன்ட் கார்ட் பிரச்சினைக்கு இதுவரையில் தீர்வு கிடைக்கவில்லை என முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.**

அவன்ட் கார்ட் நிறுவனத்திற்கு சொந்தமான சட்டவிரோதமானது எனக் கூறப்படும் ஆயுதங்களை கடற்படையினரிடம் ஒப்படைக்க முடியுமா? என்ற சர்ச்சைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை.

அவன் கார்ட் தொடர்பில் விசாரணை நடத்தப்படுவதாக அரசாங்கம் கூறிய போதிலும் அதன் ஊடாக நான் பதவியிழந்தது மட்டுமே நடைபெற்றுள்ளது.

அவன் கார்ட் நிறுவனத்தின் பணிகள் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட மாத்திரத்தில் பிணக்குகளுக்கு தீர்வு கிட்டாது.

அவன் கார்ட் சம்பவத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அவன் கார்ட் நிறுவனம் தொடர்பில் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட பகைமையின் அடிப்படையிலேயே கருத்து வெளியிட்டு வருகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.(இ-7-10)

# வரவு செலவுத் திட்டம் குறித்து நாம் திருப்தி அடைய முடியாது



அண்மையில் சமர்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் தொடர்பில் திருப்தி அடைய முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவரபெரும தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தை நன்மையானது என்றோ தீமையானது என்றோ கூற முடியாது. எனினும் மக்கள எதிர்பார்த்த சலுகைகள் நிவாரணங்கள் இதில் கிடைக்கவில்லை.

வெளிநாட்டு முதலீடுகளுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு முதலீடுகளை கிரமமான முறையில் மேற்கொள்ள வழியமைக்கப்பட வேண்டும்.

பெருந்தோட்டத்துறை சார் சமூகம் எதிர்பார்த்த நன்மைகளும் நலன்களும் கிடைக்கவில்லை. இதனை விடவும் அதிகளவான நிவாரணங்களை மக்கள் எதிர்பார்த்தனர்.

மக்களின் அத்தியாவசிய பொருடகளின் மீது வரி விதிப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

திருப்தி அடையக் கூடிய வகையில் இந்த வரவு செலவுத் திட்டம் அமையவில்லை என பாலித தேவரப்பெரும சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது ஆதரவாக வாக்களிப்பதா அல்லது எதிர்ப்பதா, வாக்களிக்காமல் விடுவதா என்பது குறித்து பாலித தேவரப்பெரும எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## மூன்று இடையூறுகள்

ஒரு பெரியவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் சொன்னார். "இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி. ஒரு நல்லவன்– ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி. இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழி " என்றார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இதற்கு என்ன விளக்கம்? என்றேன்.

அதன்பின் அவர் விளக்கம் கொடுத்தார்.

ஒரு ஒற்றையடி பாதையில் எதிரும் புதிருமாக இரண்டு பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் பாதையை விட்டு விலகாமல் நேராக வந்தால் மோதிக் கொள்ள வேண் டியது தான். எதிரும் புதிருமாக வந்து கொண்டிருக்கும் இவர்கள் இருவருமே நல்லவர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அவர் என்ன செய்வார்? இவர் நேராக பாதையில் வரட்டும் என்று அவர் வரப்பை விட்டு விலகி கீழே இறங்கி நடந்து வருவார்.

இவர் என்ன செய்வார்? அவர் பாதையில் வரட்டும் என்று கீழே இறங்கி நடந்து வருவார்.

அவருக்காக இவரும் இவருக்காக அவரும் விட்டுக் கொடுக் கிறார்கள். ஆக அவர் வரும் பாதையயொன்று. இவர் போகும் பாதையொன்று. நடுவில் ஏற்கனவே உள்ள பாதையொன்று மொத்தம் மூன்று.

அது தான் இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி என்று சொல் வது.

ஒரு நல்லவன்– ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி. இது எப்படி என்றால்... ஒரே வரப்பில் எதிரும் புதிருமாக வரும் இரண்டு பேரில் ஒருவன் நல்லவன். ஒருவன் கெட்டவன்.

நல்லவன் வரப்பை விட்டு கீழே இறங்கி எதிரில் வருபவனுக்கு வழி விடுவான். கெட்டவன் வரப்பை விட்டு இறங்கவேமாட்டான். அவன் இறங்கட்டுமே. நாம் எதற்கு இறங்க வேண்டும் என்று இருந்து விடுவான். இப்பொழுது இரண்டு பாதைதான் உண்டு. இதுதான் ஒரு நல்லவன் – ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி என்று சொல்வது.

இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழியென்று சொல்வது எப்படித் தெரியுமா?

ஒரே வரப்பில் எதிரும் புதிருமாக வரும் இரண்டு பேருமே கெட்டவன் என்று வைத்துக் கெள்ளுங்கள். இரண்டு பேருமே வரப்பை விட்டு கீழே இறங்க மாட்டார்கள்.

இவன் இறங்கட்டுமே என்று அவனும் அவன் இறங்கட்டுமே என்று இவனும் இருப்பார்கள்.

இதுதான்கெட்டவனுக்குஒரேவழிஎன்றுசொல்வது. இப்பொழுது தான் அந்த பெரியவர் சொன்ன வார்த்தைக்கு அர்த்தம் புரிந்தது. அவரே இன்னொரு விடயத்தையும் சொன்னார்.

அதாவது நமக்கு வரும் இடையூறுகள் மூன்று வகை என்றார். அது எப்படி என்று கேட்டேன். நாம் ஒரு காரியத்தை தொடங்கு கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு மூன்று வகையில் இடைஞ்சல் வரலாமாம். நம்மால் வரும் இடைஞ்சல் ஒரு வகை. இது ஆத்யாத்மிகம். நம்மைத் தவிர மற்றவர்களால் வரும் இடைஞ்சல் ஒரு வகை–இது ஆதிபௌதிகம்.

இயற்கையாக வரும் இடைஞ்சல் மூன்றாவது ரகம். அதற்கு பெயர்–ஆதிதெய்வீகம்.

நமக்குப் பிடித்த ஒரு சினிமாப் படத்தை பார்த்துக் கொண்டிருக் கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த நேரம் பார்த்துக் நமக்கு வயிறு வலிக்கிறது. இது நம்மிடம் இருந்தே வரும் இடைஞ்சல்.

ஆர்வமாக அந்தப் படத்தை பார்த்துக் கொண்டிருக் கின்றோம்.

அந்தச் சமயம் பார்த்து பக்கத்திலிருப்பவர்கள் சத்தம் போடு கிறார்கள். இது மற்றவர்களால் வரும் இடைஞ்சல்.

அந்த சமயம் பார்த்து இடி–மின்னல்–பூகம்பம்... கரன்ட் போய் விடுகிறது. இது இயற்கை உண்டு பண்ணும் இடைஞ்சல்.

இப்படி மூன்று வகையாகவும் இடைஞ்சல் வரக்கூடாது என்பதற்காகத்தான் பெரியவர்கள் சாந்தி–சாந்தி–சாந்தி என்று மூன்று தடவை சொல்கிறார்கள். இந்த மூன்று இடைஞ்சலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று அர்த்தம்.

# தமிழ் சினிமா வரலாறு

## 68 "மங்கம்மா சபதம்" செய்த புரட்சி

### ஆங்கில பாணியில் வசுந்தராதேவி பாட்டு- நடனம்

...தெலுங்குப் படத்தையே தமிழ் நாட்டில் திரையிட்டார் வாசன். தமிழ்ப் படங்களுக்கு இணையாக வெற்றிகரமாக ஓடியது பாலநாகம்மா.

**நந்தனார்**

அடுத்தபடியாக ஜெமினி எடுத்த மகத்தான படம் நந்தனார்.

பிரபல தமிழிசைப் பாடகர் எம்.எம்.தண்டபாணி தேசிகர் நந்தனாராகவும் செருகளத்தூர் சாமா வேதியராகவும் நடித்தனர்.

காதல் இல்லாத பக்திக்கதை. இதை ஒரு இசைகச் சித்திரமாகத் தயாரித்திருந்தார் வாசன். தண்டபாணி தேசிகர் தமது வெண்கலக் குரலில் என்னப்பன் அல்லவா, காணவேண்டாமா? வழிமறித்து நிக்குதே முதலான பாடல்களை ரசிகர்களின் இதயத்தில் எதிரொலிக்கும்படி பாடியிருந்தார்.

இந்தப் படத்தை முருகதாசா இயக்கியிருந்தார். இசை எம்.டி.பார்த்தசாரதி, எஸ்.ராஜேஸ்வரராவ். வசனம்-கி.ரா.

நந்தனார் சூப்பர் ஹிட் படமாக அமைந்தது. இந்தப் படத்தில் எல்லா பாடல்களுமே இனிமையானவை.

அதில் மூன்று பாடல்களைத் தேர்ந்து எடுக்கும்படி ரசிகர்களுக்கு போட்டி வைத்தார் வாசன்.

ஒவ்வொரு டிக்கெட்டுடனும் விடைகள் எழுத விண்ணப்பப்பாரம் கொடுக்கப்பட்டது.

தியேட்டர்களில் ஓட்டுப்பெட்டிகள் வைக்கப்பட்டன! குறிப்பிட்ட திகதி முடிந்ததும் விடைகள் பரிசீலிக்கப்பட்டு சரியான விடை எழுதியவர்களுக்கு பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.



வசுந்தராதேவி

**சிறந்த கலைஞர்கள்**

சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களை ஜெமனியில் பணியாற்றச் செய்தார் வாசன்.

அக்காலத்தில் சிறந்த ஒளிப்பதிவாளராகப் போற்றப்பட்டவர், கே.ராம்நாத்.

சிறந்த ஆர்ட் டைரக்டர் சேகர். இவர்கள் ஜெமினியில் பணியாற்றினார்கள்.

நடிகர் - நடிகைகளை ஒப்பந்தம் செய்வதில் பிறர் பின்பற்றாத ஒரு வழக்கத்தை வாசன் பின்பற்றினார். சில நடிகர் நடிகைகளை மாத சம்பளத்துக்கு வைத்துக்கொண்டார். இதன்மூலம் கால்ஷீட் பிரச்சினைகள் ஏற்படாமல் தடுத்தார். கதை முடிவானதும் படப்பிடிப்பு தொடர்ந்து வேகமாக நடக்கும்.

எம்.கே.ராதா, புஷ்பவல்லி, கொத்தமங்கலம் சுப்பு, சுந்தரி பாய், எல்.நாராயணராவ், வனஜா, ஸ்ரீராம் போன்றவர்கள் மாத சம்பளத்துக்கு ஜெமினியில் பணியாற்றினார்கள்.

அரசு ஊழியர்கள் மாதம் 100 ரூபாய் சம்பளம் வாங்கிய கால கட்டத்தில் (40களில்) எம்.கே.ராதாவின் சம்பளம் 2 ஆயிரம் ரூபாய்!

ஜெமினி தயாரித்த மங்கம்மா சபதத்தில், வசுந்தராதேவி ஆங்கில பாணியில் பாடிய பாட்டும் ஆடிய நடனமும் பெரும் பரபரப்பை உண்டாக்கின. 1943 ஏப்ரலில் வெளி வந்த ஜெமினியின் மங்கம்மா சபதம், மெகா ஹிட் திரைப் படம்.



இதில் ரஞ்சனும் வசுந்தராதேவியும் (வைஜயந்தி மாலாவின் தாயார்) ஜோடியாக நடித்தனர்.

கதை

கதாநாயகி, ஒரு ஏழைப்பெண். ஆனால் துணிச்சல் மிக்கவள். *(தொடரும்)*

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 337**

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

**...நீ**ங்கள் ரொட்டிக்கும் வெண்ணெய்க்குமான போராட்டத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள்.

நான் என் சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன்.. நான் அலைந்து திரிந்த நாட்களில் பல நாட்கள் உணவின்றியே இருந்திருக்கிறேன்.

ஆனால் நான் அதை ஒருபோதும் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் ஒரு குறையாக நினைத்ததில்லை.

நான் மிகவும் ஆர்வத்துடன் உண்மையைத் தேடிக் கொண்டிருந்ததால் எல்லாமே உணவில்லாமல் இருப்பதுகூட தியானமாகிவிட்டது.

உங்களுக்குத் தெரியுமா... சில தர்ம சத்திரங்களையும் சந்யாசிகளுக்கு நல்ல மரியாதை தரும் வட இந்தியாவையும் தவிர, மக்கள் எப்பொழுதும் பொதுவாகவே சந்யாசிகளைத் தவிர்த்துவிடுகின்றனர்.

சந்யாசிகள் எப்பொழுதும் சந்தேகத்துடனேயே பார்க்கப்படுகின்றனர். அவர்கள் உங்கள் சொத்துக்களைத் திருடிச் செல்வதற்காகவே வந்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறீர்கள் போலிருக்கிறது.

நான் சொல்கிறேன்... ஒருபோதும் அவர்களைத் தவிர்த்து விடாதீர்கள். அவர்களுக்கு ஏன் கொஞ்சம் உணவு கொடுக்கக்கூடாது? அதுவே அவர்களுக்குப் போதுமானது.

மக்களுக்குக் கொடுக்கும்போது ஒருபோதும் கஞ்சத்தனமாக இருக்காதீர்கள். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்... நீங்கள் உங்கள் செல்வத்தில் இருந்து கொஞ்சம் கொடுக்கும் தானியாக இருக்க விரும்பாவிட்டால் இறக்கும்பொழுது எல்லாவற்றையும் விட்டுச்செல்லும் மஹாதானியாகி விடுவீர்கள்!



எப்படியோ... தயவுசெய்து நான் என் சொந்த அனுபவத்திலிருந்துதான் பேசுகிறேன் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

ஆழமான கஷ்டங்களிலும் போராட்டங்களிலும்கூட அலைபாயாத விசுவாசத்துடனும் நன்றியுணர்வுடனும் செயற்பட்டு உங்கள் உள்ளறிவுக் கூர்மையை உபயோகித்து அவற்றைக் கடந்து செல்வீர்களானால் நீங்கள் அதிக நன்றியுணர்வுடனும் அறிவுக் கூர்மையுடனும் வெற்றிகரமாக வெளிவருவதைக் காண்பீர்கள்!

நீங்கள் மிக வும் விலைமதிப் பற்ற எதையேனும் இழந்துவிட்டால் கூட அதைச் சிலகாலம் மகிழ்ச்சியுடன் அனுபவித்ததற்காக வெறுமனே நன்றியுணர்வுடன் இருங்கள். அவ்வளவே.

நீங்கள் தூய்மையான நன்றியுணர்வாகி விடும்பொழுது இழந்துவிட்ட எதற்காகவும் அழுது கொண்டிருக்க மாட்டீர்கள். அது இருக்கும் வரையில் வெறுமனே மகிழ்ச்சியாக அனுபவிப்பீர்கள்; அதுபோன பிறகும் தொடர்ந்து நன்றியுணர்வுடனேயே இருந்து கொண்டிருப்பீர்கள்.

ஒரு சின்னக் கதை...

ஒரு அரசன் அவனது நாட்டிலேயே இரவில் மாறு வேடத்தில் நகர்வலம் வருவது வழக்கம். ஒவ்வொரு இரவும் நகரம் முழுவதும் உறக்கத்தில் இருக்கும்பொழுது ஒரு குரு மட்டும் ஒரு மரத்தினடியில் ஆனந்தமயமான நிலையில் அமர்ந்திருப்பதைக் காண்பான். *(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**

## புதிய அரசியலமைப்பை உருவாக்க

# சர்வஜன வாக்கெடுப்புக்கு மைத்திரி அரசாங்கம் தயார்

(கொழும்பு)

**புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்த அரசாங்கம் தயார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளை பூர்த்தி செய்ய எமக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டிய அவசியம் உண்டு. எமது அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த அஞ்சப் போவதில்லை.



19ம் திருத்தச் சட்டத்தின் ஊடாக தெளிவானதும் விரிவானதுமான அரசியல் அமைப்பு செயன்முறை ஒன்றை அறிமுகம் செய்ய வேண்டிய தேவையுள்ளது. எனினும் உச்ச நீதிமன்றின் தீர்மானங்களுக்கு தலைசாய்க்க வேண்டும். கடந்த பத்து மாதங்களில் சமூக மற்றும் அரசியல் ரீதியான மாற்றங்களை செய்வதில் அரசாங்கம் கூடிய ஆர்வம் காட்டியது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தேர்தலில் வெற்றியீட்டியிருந்தால் நாடு பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கும். சர்வதேச அரங்கில் இலங்கை தனிமைப்படு த்தப்பட்டிருக்கக் கூடிய அபாயம் காணப்பட்டது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் விஜ யம் செய்துள்ள ஜனாதிபதி அங்கு வாழும் இலங்கையர்களுடனான சந்திப்பு ஒன்று அண்மையில் பங்கேற்றிருந்த போது இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# புலிகளின் சர்வதேச திறைசேரியில் 2பில்லியன் அமெரிக்க டொலர் நிதி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்புடன் தொடர்புடைய திறைசேரியில் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் நிதி காணப்படுவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கனேடிய பாதுகாப்பு முகவர் நிறுவனமொன்று அண்மையில் வெளியிட்ட இரகசிய அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கனேடிய நீதிமன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்ட இரகசிய அறிக்கையில் புலிகளின் இந்த நிதி பற்றி முதல் தடவையாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கனேடிய கோயில் ஒன்றில் அர்ச்சகராக செயற்பட்ட நபர் ஒருவர் தொடர்பில் அந்நாட்டு நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கிற்கு இந்த இரகசிய ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இந்தப் பணத்தைக் கொண்டு என்ன செய்யப் போகின்றார்கள் என்பது கேள்விக்குறியே என இரகசிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அதன் வலையமைப்புக்களின் நிதி குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை என சிங்கள ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

### பஸ் தரிப்பிடத்தில் நின்ற பெண்ணை மோதிய கார்

மஹியங்கனை - பதியதலாவை பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் பெண்ணொருவர் படுகாயமடைநதுள்ளார். இந்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று பஸ் தரிப்பிடத்தில் இருந்த பெண் ஒருவர் மீது மோதியுள்ளது.

இதன்போது குறித்த பெண் காயமடைந்த நிலையில், வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை பதியதலாவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 562

Search for people, places and things Nagendram Home

நதீபன்




லொலிபப் விதுஷ்




சந்திரன் சிந்து





சர்மி சர்மிலா




குலசீலன் குணா




வின்யாக்ஷன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வாஸ் குணவர்தனவிற்கு எதிரான மற்றுமொரு வழக்கு பெப்ரவரியில்

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவிற்கு எதிரான மற்றுமொரு வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கோடீஸ்வர வர்த்தக முகமட் சியாம் கொலை சம்பவம் தொடர்பில் அண்மையில் வாஸ் குணவர்த்தன அவரது மகன் மற்றும் மேலும் 4 பேருக்கு கொழும்பு உயர்நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது.

வாஸ் குணவர்தன கப்பம் கோரியதாக குற்றம் சுமத்திதொடுக்கப்பட்டிருந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மஹார நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்க சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை தேவைப்படுவதாகவும் இதுவரையில் உரிய ஆலோசனை கிடைக்கவில்லை எனவும், இதனால் வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாகவும் நீதவான் மகிந்த பிரபாத் ரணசிங்க தெரிவித்துள்ளார.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுகவீனம் காரணமாக நீதிமன்றில் முனனிலைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வழக்கு விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரையில் பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, வழக்கு எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டது. (இ-7-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 01.12.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 140.97 | 145.32 |
| பவுண்ட் | பிரிட்டன் | 211.81 | 220.02 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 148.12 | 154.61 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 136.12 | 142.33 |
| டொலர் | கனடா | 104.96 | 109.67 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 101.38 | 106.47 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.57 | 103.73 |
| ரூபா | இந்தியா | 2.1552 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 379.9241 |
| குவைத் | டினார் | 470.2991 |
| ஓமான் | ரியால் | 372.0397 |
| கட்டார் | ரியால் | 39.3303 |
| ச்வுதி அரேபியா | ரியால் | 38.1757 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.9968 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சுன்னாகம் ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 160 | 160 | 150 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 60 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 650 | 650 | 800 | 800 | 700 |
| தக்காளி | 180 | 190 | 140 | 160 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 20 | 15 | 50 | 40 | 40 |
| கோவா | 160 | 180 | 140 | 200 | 200 | 200 |
| கரட் | 200 | 200 | 180 | 200-450 | 240 | 200 |
| பூசணி | 80 | 40 | 30 | 60 | 60 | 40 |
| புடோல் | 150 | 140 | 100 | 140 | 160 | 150 |
| வாழைக்காய் | 80 | 50 | 45 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 120 | 120 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 100 | 130 | 120 | 140 |
| பாகற்காய் | 350 | 300 | 250 | 300 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 150 | 100 | 100 | 140 | 150 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 200 | 180 | 200 | 200 | 250 |
| லீக்ஸ் | 150 | 180 | 140 | 120 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | — | 100 | — | 200 | 80 |
| கறிமிளகாய் | 400 | — | — | 600 | 320 | 400 |
| முருங்கைக்காய் | 300 | — | — | — | 320 | — |
| போஞ்சி | 350 | 280 | — | 260 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 120 | — | 120 | — |
| கீரை - 1 பிடி | 70 | 50 | 25 | 50 | 60 | 60 |
| தேசிக்காய் | 250 | 200-350 | 170 | 350 | 160 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 30-45 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 300 | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | 150 | — | — | — |
| முள்ளங்கி | 120 | — | 70 | 80 | 160 | 80 |
| பொன்னாங்காணி | 40 | — | — | 30 | 40 | — |
| வல்லாரை | 10 | — | 15 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 80 | — | 50 | 80-120 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## 'இலங்கையின் காந்தி' செல்வநாயகம் மரணம் 42

...தகனம் செய்யப்படுவதற்கான இடத்தில் 3 லட்சம் பேர் கூடி இருந்தனர். செல்வநாயகம் உடல் வைக்கப்பட்டிருந்த பேழையை ரதத்திலிருந்து அமிர்தலிங்கம் மாவை சேனாதிராஜா உட்பட பிரமுகர்கள் கீழே இறங்கி சந்தனக் கட்டைகள் அடுக்கப்பட்டிருந்த சிதை மீது வைத்தனர்.

கூடியிருந்தவர்கள் கதறி அழ சிதைக்கு பிஷப் அம்பலவாணர் தீ மூட்டினார்.

இலங்கைத் தமிழர் வரலாற்றில் ஒரு சகாப்தம் முடிந்தது.

### குடும்பம்

மறைந்த செல்வநாயகத்திற்கு ஒரு மகள், 4 மகன்கள். விபரம் வருமாறு:-

சுசீலாவதி. கனடா நாட்டில் வசிக்கிறார். இவருடைய கணவர் ஜெயரத்தினம் வில்சன். அரசியல் துறைபேராசிரியர். இறந்துவிட்டார்.

டாக்டர் மனோகரன். அணு விஞ்ஞானி. அமெரிக்காவில் வசிக்கிறார்.

வசீகரன். கணித பேராசிரியர். இறந்துவிட்டார்.

ரவீந்திரன். சார்ட்டர்டு அக்கவுண்டண்ட். அமெரிக்காவில் வசிக்கிறார்.

சந்திரஹாசன். வக்கீல். ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழக நிறுவனர். பொருளாளர். சென்னையில் வசிக்கிறார்.

இலங்கையில் 1977 ஆம் ஆண்டில் நடந்தபொதுத் தேர்தலில் ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி மகத்தான வெற்றிபெற்றது.

அதன் காரணமாக சட்டத்தில் ஒரு திருத்தம் செய்து ஜனாதி பதியாகத் தன்னைத் தானே நியமித்தக்கொண்டு சகல அதிகாரங்களையும் கைப் பற்றிக்கொண்டார். ஜெயவர்த்தனா.

இலங்கையின் வரலாற்றில் 1977 ஆம் ஆண்டு ஜூலையில் நடந்த பொதுத் தேர்தல் முக்கியமானது.

### ஜெயவர்த்தனா

இந்தத் தேர்தலில் ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி வரலாறு கண்டறியாத மெஜாரிட்டியுடன் வெற்றி பெற்றது.



பாராளுமன்றத்தின் மொத்த இடங்கள் 168. அதில் 140 இடங்களை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியது.

அதுவரை ஆளும் கட்சியாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வி அடைந்தது. வெறும் 8 இடங்கள் மட்டுமே அதற்குக் கிடைத்தன.

### தமிழர் கட்சி வெற்றி

தமிழ் ஈழம் வேண்டும் என்று வட்டுக்கோட்டை மாநாட்டில் தீர்மானம் நிறைவேறிய பிறகு இத்தேர்தல் நடந்தது.

அந்தக் கோரிக்கையை முன்நிறுத்தித்தான், இந்தத் தேர்தலில் தமிழர் விடுதலை முன்னணி போட்டியிட்டது.

18 இடங்களில் வெற்றி பெற்று சட்டசபையில் எதிர்க் கட்சி அந்தஸ்தைப் பெற்றது.

அதாவது முன்பு ஆளும் கட்சியாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சியை விட 10 இடங்களைக் கூடுதலாகப் பெற்று சட்டசபையில் இரண்டாவது பெரிய கட்சியாகத் தமிழர் கட்சி விளங்கியது. தமிழ் ஈழம் கோரிக்கையைத் தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தேர்தல் முடிவு அமைந்தது.

தேர்தல் முடிவினால் ஜெயவர்த்தனா மிகவும் மகிழ்ந்தார். மிப்பெரும் மெஜாரிட்டி கிடைத்துவிட்டதால் சட்டத்தில் எப்படிப்பட்ட திருத்தத்தையும் செய்யும் அளவுக்கு அவர் வலிமை பெற்றுவிட்டார். சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள அவர் தீர்மானித்தார்.

### ஜனாதிபதி

அரசியல் சட்டப்படி பிரதமரே சகல அதிகாரங்களும் கொண்டவர். அதை மாற்றி ஜனாதிபதியே சகல அதிகாரங்களும் படைத்தவர் என்று சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தார். அதன்படி தன்னைத் தானே ஜனாதிபதியாக நியமித்துக்கொண்டார்.

இந்த மாற்றம் 1978 பெப்ரவரி 4 ஆம் திகதி அமலுக்கு வந்தது.

பிரதமராக பிரேமதாசவை ஜெயவர்த்தனா நியமித்தார்.

(அமெரிக்க ஆட்சி முறையிலும் ஜனாதிபதிக்குத்தான் அதிகாரம். ஆனால் ஜனாதிபதியைப் பொதுமக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள்)

### சுதந்திர தினம்

1978 பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் 30 ஆவது சுதந்திர தினம்.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்க அந்த நாளை தேர்ந்தெடுத்திருந்தார் ஜெயவர்த்தன.

ஜோசியர்கள் குறித்துக் கொடுத்த நல்ல நேரமான காலை 8.53 மணிக்கு ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார்.



செல்வநாயகம் உடலுக்கு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா இறுதி மரியாதை செலுத்தியபோது எடுத்த படம்.

(தொடரும்)

# மகிந்தவின் ஆணிவேரை அசைத்த சமந்தா பவர்

முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷவால் அதிகம் வெறுக்கப்பட்டவர் ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் ஆவார்.

'வெள்ளைமாளிகையில் உள்ள மெல்லிய அந்தப் பெண்மணியே எனது எல்லாப் பிரச்சினைகளுக்கும் மூலகாரணம்' என மகிந்த ராஜபக்ஷ தனது அமைச்சர்களைச் சந்திக்கும் போது அடிக்கடி கூறிக்கொள்வார.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாணடோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளவர் நித்திய பாரதி.**



பத்தாண்டுகளாக இலங்கையின் ஜனாதிபதியாக ஆட்சி செய்த மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தை நோக்கும் போது, அவர் நான்கு பெண்களை அடியோடு வெறுத்தார் என்பது புலனாகும்.

இந்த நால்வரில் ஒருவர் சந்திரிகா குமாரதுங்க. இரண்டாவதாக அமெரிக்காவின் ஐ.நாவுக்கான வதிவிடப் பிரதிநிதி சமந்தா பவர். மூன்றாவதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, நான்காவதாக இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் மைக்கேல் ஜே.சிசன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இந்த நான்கு பெண்களிலும் மகிந்த ராஜபக்ஷவால் அதிகம் வெறுக்கப்பட்டவர் சமந்தா பவர் ஆவார்.

'வெள்ளை மாளிகையில் உள்ள மெல்லிய அந்தப் பெண்மணியே எனது எல்லாப் பிரச்சினைகளுக்கும் மூலகாரணம்' என மகிந்த ராஜபக்ஷ தனது அமைச்சர்களைச் சந்திக்கும் போது அடிக்கடி கூறிக்கொள்வார.

அப்போதைய அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனுக்கும் சமந்தா பவருக்கும் இடையில் முறுகலை ஏற்படுத்தி கிளின்ரனை வெற்றி பெறச செய்வதற்கு மகிந்த ராஜபகஷ அதிகளவில் செலவிட்டிருந்தார்.

2008 இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் தெரிவுக்கான பரப்புரையின்போது, ஹிலாரியை சமந்தா பவர் மகவும் மோசமான ஒருவர் என விபரித்திருந்ததாகவும், இதனால் சமந்தாவுக்கும் ஹிலாரிக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டதாகவும் மகிந்தவிடம் அவரது வெளிவிவகார மற்றும் அனைத்துலக உறவுகளுக்கான ஆலோசகர்கள் தெரிவித்திருந்தனர்.

ஆகவே சமந்தா மற்றும ஹிலாரி ஆகியோருக்கு இடையிலான முறுகல் நிலை முற்றி வெடிக்கும் என மகிந்த காத்திருந்தார். ஆனால் அது ஒருபோதும் இடம்பெறவில்லை.

இதன்பின்னர், ஹிலாரியை அடுத்து அவரது இடத்திற்கு நியமிக்கப்பட்ட ஜோன் ஹெரி மீது மகிந்த நம்பிக்கை கொண்டார்.

இலங்கைகக்கு எதிராக அமெரிக்காவானது போர்க் குற்றங்கள் தொடர்பாக அதிகளவில் அழுத்தம் கொடுத்தால், சீனாவுடன் இலங்கை மிகவும் நெருக்கமான உறவை ஏற்படுத்தக் காரணமாக அமையும் என ஜோன் ஹெரி, அமெரிக்க நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான ஒரு நகர்வானது அமெரிக்காவின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் எனவும் ஹெரி தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்தினால்,, சமந்தா பவரின் அதிகாரங்களை ஹெரி கைப்பற்றிக் கொள்வார் என மகிந்த கருதினார்.

மகிந்த என்னதான் கனவு கண்டாலும், சமந்தா பவர் இலங்கை மீதான தனது பிடியை தளர்த்துவதற்குத் தயாராக இருக்கவில்லை.

அந்த நேரத்தில் கொழும்பில் பணிபுரிந்த அமெரிக்காவின் தூதுவர் மைக்கேல் ஜே.சிசன், சமந்தா பவரின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்பவே செயற்பட்டிருந்தார்.

மகந்தவின் இத்தகைய குழப்பநிலையை நன்கறிந்து கொண்ட மறைந்த மாதுளுவாவே சோபித தேரர எதிரணிகளின் பொதுவேட்பாள ராக ஒருவரை நிறுத்த வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டை உருவாக்கினார்.

இது தொடர்பாக மைக்கேல் ஜே.சிசன், சோபித தேரரைச் சந்திப்பதற்காக நாக விகாரைக்குச் சென்றார்.

இதன்மூலம் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எதிரணியின் பொதுவேட்பாளராக நிறுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மகிந்த ஜனாதிபதித தேர்தலை நடத்தப் போவதாக அறிவித்த போது, மைக்கேல் ஜே.சிசன் கொழும்பை விட்டு அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார்.

இவர் தற்போது அமெரிக்காவின் ஐ.நாவுக்கான பிரதித் தூதுவராகச் செயற்படுகிறார்.

சமந்தாபவர் 2010 ல் கொழும்பிற்கான தனது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த போது மகிந்தவைச் சந்தித்தார்.

நாட்டில் நிலவும் போர்க் குற்றங்களை விசாரணை செய்வதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு மகிந்தவிடம் சமந்தா பவர் கோரியிருந்தார். இதிலிருநதே மகிந்த இவரை வெறுக்க ஆரம்பித்தார்.

இதன்பின்னர், மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை சீனா மற்றும் ரஷயா எதிர்த்திருந்தன.

இலங்கைக்கு எதிரான போர்க்குற்றத் தீர்மானத்தின் மூலம் மகிந்த மேலும பிரபலமடைவதாக அமெரிக்க வல்லுனர்கள் சுட்டிக் காட்டினர்.

இதனால் சமந்தா பவர், இலங்கை தொடர்பான தனது நிகழ்ச்சி நிரலை மைக்கேல் ஜே.சிசன் ஊடாக நிறைவேற்றினார்.

இந்தவருடம் சமந்தா பவர் இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்ட போது, மகிந்த, நாடாளுமன்றின் உறுப்பினராக மட்டுமே செயற்படுகிறார்.

இதற்கும் மேலாக, சமந்தா பவரின் வருகையின்போது, எட்டு புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடையை இலங்கை அரசாங்கம் நீக்கியுள்ளது.

தடைநீக்கப்பட்ட இந்த அமைப்புக்கள் கடந்த காலங்களில் சமந்தா பவருடன் தமது தொடர்புகளைப் பேணியிருந்தனர்.

உலகத் தமிழர் பேரவையின் தலைவராக உள்ள அருட்தந்தை எஸ்.ஜே.இமானுவேலுக்கு **நுழைவுவிசாவை** வழங்குவதற்கு இந்திய மத்திய அரசாங்கம் மறுப்புத தெரிவித்திருந்த நிலையலேயே, ராஜபக்ஷ அரசாங்கத்தால் இவற்றின் மீதான தடை அறிவிக்கப்பட்டது.

எனினும், இலங்கையல் இறுதியாக ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதற்கு இரண்டு மாதங்களின் முன்னர், உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் இந்தியாவுக்குப் பயணம் செய்திருந்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பாரதீய ஜன்தாக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னரே உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் இந்தியாவிற்கு வருவதற்கான அனுமதியை இந்தியா வழங்கியது.

மகிந்தவால் தடை செய்யப்பட்ட புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் மீதான தடையை மைத்திரி- ரணில் அரசாங்கம் நீக்கியமையானது சமந்த பவரின் நிகழ்ச்சி நிரலுக்கான ஒரு வெற்றியாகவே நோக்கப்படுகிறது.

இலங்கையல் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது, போரை நிறுத்த முடியாது அமெரிக்கா அமைதி காத்தது.

அமெரிக்காவின் இத் தோல்வியை சமந்தாபவர் ஏற்க வேண்டியிரு ந்தது.

இருப்பினும் 2010 இல, தோற்கடிக்கப்பட்ட ஒரு மனநிலையுடனேயே சமந்தா பவர் கொழும்பை வந்தடைந்திருந்தார். எனினும், இத்தடவை சமந்தா பவர் இலங்கைக்குப் பயணித்த போது வெற்றிப் புன்னகையுடனேயே கொழும்பை வந்தடைந்திருந்தார்.




# புலவரே இல்லை!

...நான் என்ன சொல்கிறேனோ அதை அப்படியே எழுதித்தான் அவர் புகழ் பெற்றுள்ளார்," என்றார்.

இப்படி ஓர் அறிமுகத்தை எதிர்பாராத அனைவரும் திகைத்தனர்.

"நாடே போற்றிப் புகழும் கலாதரைப் பற்றி இவர் இப்படி பொய் சொல்கிறாரே... இவரைப் பற்றிக் கலாதர் என்ன சொல்கிறார். பார்ப்போம" என்று நினைத்தார் அரசர்,

"கலாதரே! உங்கள் நண்பர் துருபத்தை இங்கு உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்து வையுங்கள்," என்றார் அரசர்.

"துருபத்தை விட நிறைய பரிசு எனக்கே கிடைக்க வேண்டும். அவரைப் பற்றித் தாழ்வாகப் பேசினால்தான் என் எண்ணம் நிறைவேறும" என்று நினைத்த கலாதர் எழுந்தார்.

"அரசே! பிறரைப் பற்றிக் குறை சொல்வது எனக்குப் பிடிக்காது. அரசவையில் எப்போதும் உண்மையையே பேச வேண்டும் என்பதால், நண்பனைப் பற்றிய என் கருத்துக்களை உங்கள் முன் வைக்கிறேன்.

"அவர் புலவர் அல்ல! இப்படிச் சொல்லி எல்லாரையும் நம்பவைத்து ஏமாற்றி இருக்கிறார். உண்மையில் அவர்தான் கழுதை, நான் எழுதும் பாடல்களை தான் எழுதியது போலக்காட்டி பேரும் புகழும் பெற்றுள்ளார்," என்றார்.

இருவருடைய பேச்சையும் கேட்ட அரசர் திடுக்கிட்டார்.

"எத்தனையோ சிறந்த நூல்களை அவர்கள் எழுதி என்ன பயன்? சிறந்த அறிஞர்களாக இருந்தும் பொறாமையால் எத்தனை சிறியவர்களாகி விட்டனர்" என்று நினைத்தார் அரசர்.

அமைச்சரை அருகில் அழைத்து மெல்லிய, குரலில் ஏதோ சொன்னார் மன்னர்.

"அப்படியே செய்கிறேன்!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றார் அமைச்சர்.

சிறிது நேரத்தில் பட்டுத் துணியால் மூடப்பட்ட இரண்டு தட்டுகளை வீரர்கள் கொண்டு வந்தனர்.

"புலவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு பரிசுத் தட்டைத் தருக!" என்று கட்டளையிட்டார் மன்னர்.



புலவர்கள் இருவரும் ஆர்வத்துடன் பரிசுத் தட்டை வாங்கினர்.

பட்டுத் துணியை விலக்கிப் பார்த்த அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். ஒவ்வொரு தட்டிலும் பசும்புல் வைக்கப் பட்டு இருந்தது.

'அரசே! எங்களை அவமானப்படுத்தவா இங்கு அழைத்தீர்கள்? பசும் புல்லைப் பரிசாகத் தருகிறீர்களே?" என்று கோபத்துடன் இருவரும் கேட்டனர்.

"புலவர்களே! உங்களைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. நீங்கள் இருவரும் நண்பர்கள். ஒருவரை பற்றி இன்னொருவருக்கு நன்றாகத் தெரியும்.

"அதனால் அடுத்தவரைப் பற்றி அறிமுகம் செய்யும்படி உங்கள் இருவரையும் கேட்டேன்.

"நீங்கள் இருவருமே ஒருவர் இன்னொருவரைக் கழுதை என்கிறீர்கள். கழுதைக்குப் பிடித்தமானது பசும்புல் தானே. அதனால்தான் உங்களுக்கு பசும் புல்லைப் பரிசாகத் தரச்சொன்னேன்.

என் மீது என்ன தவறு?" என்று கேட்டார் அரசர்.

இதைக் கேட்டு அவையில் இருந்த எல்லாரும் சிரித்தனர்.

"பொறாமையால் ஒருவரை ஒருவர் கழுதை என்று சொல்லி, இருவரும் கழுதையாகி விட்டோம்!" என்று வருந்தி தலை கவிழ்ந்தபடியே, அங்கிருந்து சென்றனர் இருவரும்.

(முற்றும்)

12.2015
02

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1755 - ஐக்கிய இராச்சியத்தின் இரண்டாவது எடிஸ்டோன் கலங்கரை விளக்கம் தீ விபத்தில் அழிந்தது.
- 1804 - பாரிசில் நெப்போலியன் பொனபார்ட் பிரான்சின் பேரரசனாக முடிசூடினான்.
- 1843 - யாழ்ப்பாணத்தில் கடும் சூறாவளி வீசியதில் பலத்த அழிவுகள் ஏற்பட்டன.
- 1848 - முதலாம் பிரான்ஸ் ஜோசப் என்பவன் ஆஸ்திரியாவின் பேரரசன் ஆனான்.
- 1908 - பூ யி தனது இரண்டாவது அகவையில் சீனாவின் பேரரசனாக முடிசூடினான்.
- 1947 - பாலஸ்தீன நாட்டைப் பிரிக்க ஐநா சபை எடுத்த முடிவை அடுத்து ஜெருசலேமில் கலவரம் வெடித்தது.
- 1961 - பிடெல் காஸ்ட்ரோ தன்னை ஒரு மார்க்சிச-லெனினிசவாதி எனவும் கியூபா கம்யூனிச நாடாக இருக்கும் எனவும் அறிவித்தார்.
- 1971 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து ஐக்கிய அரபு அமீரகம் விடுதலை பெற்றது.
- 1976 - பிடெல் காஸ்ட்ரோ கியூபாவின் அரசுத் தலைவரானார்.
- 1988 - பெனாசீர் பூட்டோ பாகிஸ்தானின் முதல் பெண் பிரதமரானார்.
- 1995 - யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கை இராணுவத்திடம் வீழ்ச்சி அடைந்தது.
- 2002 - இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஒஸ்லோவில் ஆரம்பமாயின.
- 2006 - பரிதிமாற் கலைஞரின் நூல்கள் தமிழக அரசினால் நாட்டுடமை ஆக்கப்பட்டன.

### பிறப்புகள்

- 1885 - ஜார்ஜ் மினாட், அமெரிக்க மருத்துவர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1950)
- 1910 - ரா. வெங்கட்ராமன், இந்தியாவின் 8வது குடியரசுத் தலைவர்
- 1933 - கி. வீரமணி, திராவிடர் கழகத் தலைவர்.
- 1937 - மனோகர் ஜோஷி, இந்திய அரசியல்வாதி, 15வது மகாராட்டிரா முதல்வர்
- **1982 - முருகதாசன், தீக்குளித்து இறந்த ஈழத்தமிழன் (இ. 2009)**

### இறப்புகள்

- 1547 - எர்னான் கோட்டெஸ், நாடுபிடிப்பாளர் (பி. 1485)
- 1552 - புனித பிரான்சிஸ் சேவியர், ரோமன் கத்தோலிக்க மிஷனறி (பி. 1506)
- 1911 - பாண்டித்துரைத் தேவர், தமிழறிஞர் (பி. 1867)
- 1933 - ஜி. கிட்டப்பா, நாடக நடிகர்
- 2006 - வீ. துருவசங்கரி, இலங்கையின் அறிவியலாளர் (பி. 1950)
- 2008 - மு. கு. ஜகந்நாதராஜா, பன்மொழிப் புலவர் (பி. 1933)

### வர்ணகுலசிங்கம் முருகதாசன்



வர்ணகுலசிங்கம் முருகதாசன் (Varnakulasingham Murugathasan) டிசம்பர் 2, 1982 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் துன்னாலை என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். புலம்பெயர்ந்து லண்டனில் வசித்து வந்தவர்.

அகவை 27 உடைய முருகதாசன் சுவிட்சர்லாந்தில் ஐக்கிய நாடுகள் அவையின் முன்றலின் முன்பாக 2009, பெப்ரவரி 12 வியாழக்கிழமை இரவு 8:15 தொடக்கம் 9:45 நிமிடம் வரையான நேரத்துக்குள் இன அழிப்பிலருந்து ஈழத்தமிழ் மக்களைக் காப்பாற்றக்கோரி தீக்குளித்து இறந்தார். இவர், 7 பக்கங்களுக்கு "உலக சமூகத்துக்கு தமிழினத்தின் சார்பில் என் ஆத்மார்த்த வேண்டுகோள்" என்ற தலைப்பில் ஒரு மரண சாசனம் எழுதி வைத்து விட்டு தீக்குளித்தார்.

இலங்கையின் உள்நாட்டுப் போரை எல்லோரினதும் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் அவையின் முன்றலில் 2009, பெப்ரவரி 12 தீக்குளித்து மரணமடைந்த முருகதாஸ் விரும்பியிருந்தார் என்று லண்டன் பிபிசி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

முருகதாசனின் இறுதி மரண சாசனக் கடிதம் ஏழு பக்கங்களைக் கொண்ட நீண்ட கடிதம். இக்கடிதத்தில் கூடுதலான பக்கங்கள் அப்பாவி மக்கள் மீதான தாக்குதல்களை கண்டிப்பதோடு, வைத்தியசாலைகள் மீதான தாக்குதல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. உரிமையை காக்க போராடுவதில் என்ன தவறு என்றும் அவர் கேட்டுள்ளார். தமிழரின் தாகம் தமிழீழ தாயகம் என்று கூறி, உண்மைக்காக உயிர் தருவதாகதெரிவித்து தனது மரணசாசனத்தை முடித்துள்ளார்.

மனச்சான்று நீதிபதியாயிருந்து தண்டனை தருமுன் நண்பனாயிருந்து எச்சரிக்கை செய்யும். - ஸ்டானிஸ்லாஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இம்மானுவேல் அடிகளார் பாவமன்னிப்புக் கொடுப்பாரா?

புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் இப்போது இரு தரப்புக் கொள்கைகள் காணப்படுகின்றன.

அதில் ஒன்று விடுதலைப்புலிகளின் கொள்கையை அப்படியே பின்பற்றுகின்ற தரப்பு.

மற்றைய தரப்பு சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் நிலைமைகளுக்கு ஏற்பவும் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுகின்றவர்கள். இந்த இரண்டு தரப்பில் யார் சரியான கொள்கை உடையவர்கள் என்று ஆராய்வது நன்மை தரக்கூடியதன்று. மாறாக தமிழ் மக்கள் நிம்மதியான வாழ்வை வாழவேண்டும். அந்த நிம்மதி என்பது எக்காலத்திலும் குழப்புறாமல் நிரந்தரமானதாக இருத்தல் அவசியம் என்பதைக் கருத்தில் கொள்வதே இங்கு பொருத்துடையது.

அப்படியானால் இத்தகையதோர் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியவர்கள் அரச தரப்பாகவே இருக்கமுடியும்.

எனினும் இலங்கையின் ஆட்சிப் பீடங்களைப் பொறுத்தவரை காலம் கடத்துதல் என்பதைத் தவிர, எச் சந்தர்ப்பத்திலும் நாட்டில் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டு விடக் கூடாது என்ற நினைப்பு ஆளும் தரப்பிடம் அறவேயில்லை.

ஆளும் தரப்பைப் பொறுத்தவரை இந்நாடு சிங்கள மக்களுக்கும் பௌத்த சமயத்துக்குமானது. எனவே நாட்டில் உருவாக்கப்படுகின்ற அரசியல் யாப்புக்கள் மருந்துக்கேனும் சிறுபான்மை மக்களின் நலனுக்குச் சாதகமாக அமைந்து விடக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டே அரசியல் அமைப்புக்கள் பிரசவிக்கப்படுகின்றன.

இருந்தும் 2009ஆம் ஆண்டு வன்னியில் நடந்த மிகப்பெரும் கொடூரப் போரின் பின்னர் சர்வதேசத்தின் அழுத்தம் ஏதோவொரு வகையில் இலங்கை அரசுக்கு உபாதையைக் கொடுக்கிறது.

இதனால்தான் முன்னைய அரசு செய்த பாவத்தை நாங்கள் சுமக்கின்றோம் என்று இந்தநாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

பாவத்தைச் சுமப்பது வேறு. பாவத்தைக் கழுவுவது வேறு. எனவே இங்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியது பாவத்தை சுமப்பது என்றாகும்.

பாவத்தைச் சுமப்பது என்பது பாவப்பட்டவன் பட்டு அனுபவித்து சுமந்த பாவத்தைத் குறைப்பது. இதனால் துன்பப்பட்டவனுக்கு எந்த விமோசனமும் கிடையாது.

ஆக, பாவப்பட்டவன் தன் பாவத்தைக் கழுவ வேண்டும். இதற்காக பிராயச்சித்தம் செய்வதே ஒரே வழியாகும். ஆகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாவம் சுமப்பதை விடுத்து பாவத்தைக் கழுவ முன்வரவேண்டும்.

இதன்மூலம் பாவத்தில் இருந்து விடுபடுவது மட்டுமன்றி துன்பப்பட்டவன் பாக்கியவானாகவும் முடியும். எது எப்படியாயினும் சர்வதேசத்தின் அழுத்தம் அல்லது காலத்துக்குக் காலம் நடைபெறும் சர்வதேசம் சார்ந்த கூட்டங்களில் அளிக்க வேண்டிய பதிலுக்கான சூழ்நிலைகாரணமாக செய்பாவத்துக்கு பாவமன்னிப்புப்பெறுவது இலங்கை அரசுக்குத் தவிர்க்க முடியாததே.

இந்நிலையில் 2016ஆம் ஆண்டில் ஏதோவொரு தீர்வுத்திட்டத்தை பாவமன்னிப்புக்கான சாட்சியமாக இலங்கை அரசு முன்வைக்கப்போகின்றது.

பாவமன்னிப்பு வழங்குவதற்கு ஒரு அருட்தந்தை தேவையல்லவா? அதற்காக உலகத்தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை எல்.ஜே.இம்மானுவேல் அடிகளாரை இலங்கை அரசு அழைக்கிறது.

அரசின் அழைப்பை ஏற்று இம்மானுவேல் அடிகளார் இலங்கைக்கு வருவாராயின், அவர் அரசுக்குப் பாவ மன்னிப்பு வழங்குவாரா அல்லது ஈழத்தமிழ் மக்களின் துன்பச் சுமையை தன்னில் சுமந்து மீட்சி கொடுப்பாரா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

## ஆய்வுகூடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய தொழிநுட்ப ஆய்வுகூடத் திறப்பு விழா நாளை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் நா.இராதா கிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தீவகம் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம், தீவகம் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும் மடு வலயக் கல்விப் பணிப்பாளருமான ஜோன் குயின்ரஸ், ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மு.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக யாழ். அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய முன்னாள் அதிபரும் யாழ்.நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபருமான வீ.ஓங்காரலிங்கம், யாழ்.அனலைதீவு தெற்கு அ.த.க.வித்தியாலய அதிபர் செல்வி. ச.விக்னேஸ்வரி, யாழ்.அனலைதீவு வடலூர் அ.த.க வித்தியாலய அதிபர் எஸ். இராஜேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## விவாதிகள் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி யூனியன்ஸ் விவாதிகள் கழகம் நடத்தும் விவாதிகள் விழா நாளை வியாழக்கிழமை யூனியன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன் போது வரவேற்புரையினை சிறிபாஸ்கரன் சிந்துஜா நிகழ்த்தவுள்ளதுடன் தலைமையுரையினை நாகராசா கபிலன் நிகழ்த்தவுள்ளார். ஆசியுரையினை கல்லூரியின் அதிபர் வீ.கே. இரட்ணகுமார் நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வின் சிறப்புரையாளர்களாக சிரியாவும் மத்திய கிழக்கு நெருக்கடியும் என்ற தலைப்பில் மனோகரன் நிருசனும் மாறும் உலக ஒழுங்கில் நாணய யுத்தம் என்ற தலைப்பில் பாலச்சந்திரா தினேசும் உரையாற்றவுள்ளனர்.

தொடர்ந்தும் சமூக வலைத்தளங்களின் பாவனை ஆரோக்கியமானதா இல்லையா என்ற தலைப்பில் கனிஷ்டப் பிரிவு மாணவர்களும் இளம் சமூகத்தின் உன்னத வளர்ச்சிக்கு உற்ற உறுதுணையாக அமைவது வாய்ப்புக்களா வழிகாட்டல்களா என்ற தலைப்பில் சிரேஷ்டப்பிரிவு மாணவர்களும் விவாதங்களை நடத்தவுள்ளனர்.

தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும். (இ-5)

## புத்தக அட்டைப்பட காட்சி நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை மற்றும் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் வைத்தீஸ்வரன் சிவசுப்ரமணியத்தின் புத்தக அட்டைப் பட காட்சி நிகழ்வு இன்று புதன்கிழமை பல்கலைக் கழகத்தின் புதிய கலைப்பீட கட்டடத்தொகுதியில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓவியர்கள், பாடசாலையில் சித்திரம் கற்கும் மாணவர்கள், கலை ஆர்வலர்கள் என அனைவரும் கலந்து கொண்டு பயன் பெற முடியுமென யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை மற்றும் கலைவட்டத்தின் தலைவர் ஆர்.துஷ்யந்தன் அறிவித்துள்ளார். (இ-5)

## திருட்டு குற்றச்சாட்டில் கைதானவருக்கு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை

(கரணவாய்)

பெருந்தொகைப்பணம் மற்றும் நகை என்பவற்றை திருடிய குற்றச்சாட்டில் கைதானவருக்கு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதவான் மா. கணேசராஜா நேற்றைய தினம் தீர்ப்பளித்துள்ளார்.

ஸ்ரீமுருகன் கொலனி வல்வெட்டித்துறைப் பகுதியில் வசிக்கும் செல்வராசா நகுலன் என்பவரது வீட்டில் 26. 02.2013 அன்று மேற்படி திரு ட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இது தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த மேற்படி சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நபருக்கு எதிரான வழக்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் மா.கணேசராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதவான் மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

மேற்படி வழக்கு விசாரணையின் பின்னர் கைப்பற்றிய பணம் மற்றும் நகை என்பவற்றை உரியவரிடம் ஒப்படைக்குமாறும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நபரின் கைவிரல் அடையாளத்தை பெற்றுக்கொள்ளுமாறும் நீதவான் மேலும் உத்தரவிட்டுள்ளார். (இ-5-60)

### சீருடைத் துணிகளை வழங்கும்

## வர்த்தகர்களை பதிவுசெய்ய கல்வி அமைச்சு நடவடிக்கை

(சாவகச்சேரி)

கல்வி அமைச்சின் 26.11.2015 ஆம் திகதியை 26-2015 ஆம் இலக்க சுற்று நிருபத்துக்கு அமைவாக வடமாகாணத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களுக்குமான சீருடைத் துணிகளை வழங்குவதற்கு பொருத்தமான வர்த்தகர்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தந்த வலயத்தில் உள்ள வர்த்தகர்கள் இன்று புதன்கிழமை தங்கள் விண்ணப்பங்களை வலயக் கல்வி அலுவலகங்களில் பெற்று உடனடியாக தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

எனவே சீருடைத்துணிகளை வழங்குவதற்கு தகுதியுடைய வர்த்தகர்கள் தங்களது வர்த்தக நிலையப் பதிவுப் பெயர், நிலைய இலக்கம் என்பவற்றை கொண்டிருத்தல் அவசியம் எனவும் அறிவிக்கப்பட்டது. (இ-5-29)

## மகளிர் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படும் - பிரதமர்

உள்ளூராட்சி மன்றங்களில் மகளிர் பிரதிநிதித்துவத்தை 25 சதவீதமாக அதிகரிப்பதற்கான திருத்தத்தின் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவுசெலவுத்திட்டத்தின் இரண்டாம வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைக் கூறினார்.

வரவுத் செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் 9 ஆவது நாள் இன்றாகும்.

அத்துடன் தேசிய கணக்காய்வு சட்டத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக பிரதமர் கூறினார்.

இதன் மூலம் கணக்காய்வாளர் நாயகத்துக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (செ-12)

JSAC
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16
2015
சமாதானம், சமத்துவம், சமவாய்ப்பு, சம உழைப்பு, சமகூலி, சம அந்தஸ்து, சமூகப் பொருளாதாரம் சாத்தியமாக்கிட சாதனை படைப்பீர் சமகாலப் பெண்கள்

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### இறைவனை மட்டும் நம்புங்கள்



✦ பக்தனுடைய பிரேமைக்கு வசப்பட்டு பகவான் அவனிடம் அகப்பட்டுக் கொள்கிறார். சாதனைகள் பழகப் பழக இறைவனின் அருள் ஏற்படும்போது அவரது காட்சி கிட்டுகிறது. பக்தன் பகவானைத் தன் இதயத்தில் தாங்கிக் கொண்டு உலகில் வாழ்கிறான்.

✦ இறைவனைக் காணவேண்டும் என்று மனம் ஏங்குகிறது. உயிர் துடிக்கிறது, இந்த நிலையில்தான் இறைவனின் தரிசனம் கிட்டும். இறைவனை அடைய வேண்டுமானால் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இறைவன் தூய பக்தர்களிடம் அதிக அளவில் பிரகாசிக்கிறான்.

✦ அவதார புருஷரை நினைப்பது இறைவனை நினைப்பதற்குச் சமம். எவ்வளவு இடையூறுகள், ஆபத்துக்கள் வந்தாலும் ஞானி மனம் கலங்க மாட்டான்.

✦ இறைவனை அடைந்தபிறகு ஒருவனுக்கு உலகப் பொருள்களில் மயக்கம் தோன்றாது. இறைவனே உலகத்திலுள்ள எல்லாப் பொருட்களாகவும் ஆகியிருக்கிறான்.

✦ எவன் இறைவனை அடைய ஏங்கி நிற்கிறானோ, அவன்மீது இறைவனின் கருணை விழுகிறது. இறைவன் நாமத்தில் பக்தனுக்குத் தீவிர நம்பிக்கை இருக்க வேண்டும். இறைவனே உலகம் என்ற இந்த நம்பிக்கை ஏற்பட்டால் எல்லாச் சிக்கல்களும் ஒழிந்து தீர்வு காண முடியும்.

✦ "ஆண்டவனே கர்த்தா, நான் கர்த்தா அல்ல" என்ற நம்பிக்கை எவனிடம் இருக்கிறதோ அவன் ஜீவன் முக்தன். மனதில் தீய வாசனைகள் இருக்கும் வரையில் தூய பக்தி உண்டாவதில்லை.

✦ இறைவனை ஆராய்ச்சியால் அறிந்துகொள்ள முடியாது, எல்லாம் நம்பிக்கையைச் சார்ந்தது.

✦ தனித்த ஓர் இடத்தில் மங்கைப் பருவமுள்ள ஒரு பெண்ணைக் கண்டால், அவளைத் தன் மனதில் தாய் என்று வணங்கிப் போகிறவனே உண்மைத் துறவின் தன்மைகளை.

## பரபரப்பான சுப்பர் ஓவரில்

# பாகிஸ்தான் அணியை வீழ்த்தி வெள்ளையடிப்பு செய்தது இங்கிலாந்து






பாகிஸ்தான் அணிக்கு எதிரான 3 ஆவது இருபது-20 போட்டியில் சுப்பர் ஓவரில் வெற்றி பெற்ற இங்கிலாந்து தொடரை முழுமையாக கைப்பற்றி அசத்தியுள்ளது.

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகள் மோதிய 3 ஆவது மற்றும கடைசி இருபது-20 கிரிக்கெட் போட்டி சார்ஜாவில் நேற்று முன தினம் நடந்தது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடியது. 20 ஓவரில் அந்த அணி 8 விக்கெட் இழப்புக்கு 154 ஓட்டங்கள் எடுத்தது.

வீன்ஸ்46 ஓட்டங்களும், வோக்ஸ் 24 பந்தில் 37 ஓட்டங்களும் (ஒரு பவுண்டரி, 3 சிக்சர்), ஜோரூட் 32 ஓட்டங்களும்எடுத்தனர். பாகிஸ்தான் தரப்பில், சோகைல் தன்வீர், அப்ரிடி தலா 2 விக்கெட் கைப்பற்றினர். பின்னர் 155 ஓட்டங்கள் இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் விக்கெட்டுகள் சரிய தொடங்கியன.

இருப்பினும் மறுமுனையில் இருந்த சொயித் மலிக் சிறப்பாக விளையாடி அணியை வெற்றிப் பாதையை நோக்கி அழைத்து சென்றார்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 10 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அப்போது வோக்ஸ் வீசிய அந்த ஓவரின் முதல் பந்தில் சொயித் மலிக் ஒரு ஓட்டம் எடுத்தார். 2 ஆவது பந்தில் சோகைல் தன்வீர் சிக்சர் அடித்து அசத்தினார். 3 ஆவது பந்தில் ஓட்டங்கள் ஏதுமில்லை. 4 ஆவது பந்தில் ஒரு ஓட்டம் எடுக்கப்பட்டது.

கடைசி 2 பந்தில் 2 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், 5 ஆவது பந்தில் சொயித் மலிக் ஆட்டம் இழந்தார். இதனால் கடைசி பந்தில் வெற்றிக்கு 2 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஆனால் ஒரு ஓட்டமே எடுக்கப்பட்டதால் பரபரப்பான இந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

பாகிஸ்தான் அணி 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 154 ஓட்டங்கள் எடுத்தது. சொயித் மலிக் 54 பந்தில் 75 ஓட்டங்களும் (8 பவுண்டரி, 2 சிக்சர்), அப்ரிடி 20 பந்தில் 29 ஓட்டங்களும் (3 சிக்சர்) எடுத்தனர். இங்கிலாந்து சார்பில், டேவிட் வில்லி 3 விக்கெட் கைப்பற்றினார்.

போட்டி சமநிலையில் முடிந்ததால வெற்றி தோல்வியை நிர்ணயிக்க சுப்பர் ஓவர் கடைபிடிக்கப்பட்டது. அப்ரிடியும், உமர் அக்மலும் துடுப்பெடுத்தாடினர்.

இங்கிலாந்து வீரர் ஜோர்டான் சுப்பர் ஓவரை சிறப்பாக வீசினார். இதனால் பாகிஸ்தான் அணியால் 3 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் சுப்பர் ஓவரில் இங்கிலாந்து எளிதில் வெற்றி பெற்றது.

3 போட்டிகள் கொண்ட இந்த தொடரில் இங்கிலாந்து 3-0 என "ஹட்ரிக்" வெற்றி பெற்று பாகிஸ்தானை 'வயிட்வாஷ்' செய்தது

முன்னதாக நடந்த ஒருநாள் தொடரை இங்கிலாந்து 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் 2:0 என்ற கணக்கில் வென்று இருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

# 30 ஓவர் கிரிக்கெட் போட்டி ஹாட்லியைட்ஸ் அணி வெற்றி



யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 6 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 30 ஓவர் போட்டியில் விக்ரம், ராஜன், கங்கு வெற்றிக்கிண்ணத்திற்காக போட்டிகளில் 6 போட்டிகளும் கே.சீ.சீ.சீ. வெற்றிக்கிண்ணத்திற்கான போட்டிகளில் 21 போட்டிகளும் ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்கான போட்டிகளில் 14 போட்டிகளும் எல்லாமாக 41 போட்டிகள் நடைபெற்றன.

அவற்றிற்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஹாட்லியைற்ஸ் அணி 5 போட்டிகளில் பங்கு பற்றி 5 இலும் வெற்றி பெற்று 31.41 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்திலும் பற்றீசியன்ஸ் அணி 6 போட்டிகளில் பங்கு பற்றி 4 போட்டிகளில் வெற்றி பெற்று 30.26 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும் ஜொலிஸ்ரார் அணி 6 போட்டிகளில் பங்கு பற்றி 4 போட்டிகளில் வெற்றி பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளன. ஏனைய கழகங்களின் நிலை பின்வருமாறு,

திருநெல்வேலி சீ.சீ 28.39 (05/04),சிறி காமாட்சி 26.99 (06/04), கே.சீ.சீ.சீ. 25.46 (07/03), சென்றலைட்ஸ் 19.66 (05/03), யாழ். பல்கலைக்கழகம் 16.88 (05/02), கிறஸ்கொப்பர்ஸ் 14.74 (03/02), ஸ்கந்தாஸ்ரார் 14.39 (03/02), சென்றலைட்ஸ் 'B' 13.93 (03/02) டிறிபேக்ஸ்ரார் 12.74 (03/01), ஓல்ட் கோல்ஸ் 11.59 (03/01), மூளாய் விக்டோறி 9.62 (03/01), யாழ்.ஜொனியன்ஸ் 8.69 (02/01), மானிப்பாய் பரீஸ் 6.51 (01/01), லிங்ஸ் 6.10 (01/01), ஸ்ரான்லி 5.15 (02/09), நியூஸ்ரார் 4.47 (02/00) யூனியன்ஸ் 4.00 (02/00) திருநெல்வேலி YMHA 3.79 (02/00) அரியாலை சென்றல் 3.69 (02/00) றெயின்போ 2.77 (02/00), யாழ். சென்றல் 2.26 (01/00), கே.சீ.சீ.சீ. 'B' 1.74 (01/00), யங்ஸ்ரார்ஸ் 0.70(01/00) (கு)

## வவுனியாவில் உடல் தகுதி காண் பரீட்சை



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க நடுவர்களுக்கான உடல் தகுதி காண் பரீட்சை நடைபெற்றது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இப் பரீட்சையில் வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 100இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். (க-281)







அண்மையில் பண்டத்தரிப்பு சாந்தைப் பகுதியில் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் ஏற்பாட்டில் தாச்சி விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.இந் நிகழ்வின் ஆரம்பத்தில் வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன் மங்கள விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். விளையாட்டு நிகழ்வை படத்தில் காணலாம்.

## மோல்டா, பிரா...

மைத்திரிபால சிறிசேன நேற்று நாடு திரும்பினார்.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் தலைமைப் பதவியினை மோல்டா பிரதமர் ஜோசப் மஸ்கட்சுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நவம்பர் மாதம் 27-ம் திகதி உத்தியோகபூர்வமாக கையளித்திருந்தார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவராக இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகப் பெறுமதியான ஒரு சேவையை மேற்கொண்டிருந்தார் என பொதுநலவாய செயலகத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி கமலேஷ் சர்மா தெரிவித்தார்.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் பின்னர் ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை தொடர்பான உச்சிமாநாடு-2015 இல் கலந்து கொள்வதற்காக பிரான்ஸ் பயணமானார்.

காலநிலை மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி, அபிவிருத்தி அடைந்த நாடுகளினால் மேற்கொள்ளப்படும் பூகோள ரீதியான பச்சைவீட்டு வாயு வெளியீட்டினை பாரியளவில் குறைக்கும் தேவையுள்ளது என்று தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி பிரான்ஸில் வாழும் இலங்கையர்களை பிரான்சிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் கடந்த நவம்பர் மாதம் 29-ம் திகதி சந்தித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, தேசிய பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கும் எந்தவொரு செயற்பாட்டையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் மேற்கொள்ள மாட்டேன் என்று தெரிவித்தார். (செ-12)

## கனமழை நீடி...

த்த சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் கூறும்போது, இலங்கையில் வடக்கு மற்றும் தமிழகத்தை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலைகள் நிலைகொண்டுள்ளன. இவை மேற்கு நோக்கி நகர்ந்து வருகின்றன.

இதனால், இலங்கையின் வடக்கே அடுத்த 3 நாட்களுக்கு மழை நீடிக்கும். கடலோர பகுதிகளில் கனமழை பெய்யும். உள்மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேலும் தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலையால் தமிழகத்தில் மட்டும் 4 நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதை தொடர்ந்து 3 நாட்களுக்கு மிதமான மழை பெய்யும் என்று கூறப்படுகிறது. (செ-12)

## சித்திரவதை...

கட்டுப்பாட்டிலிருந்த தனியார் காணிகளை விடுவித்தல் எனும் செயற்பாட்டில் தனியாருக்குச் சொந்தமான காணியில் அமைந்திருந்த வரணி படைமுகாமை, இராணுவத்தினர் கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாத நடுப்பகுதியில் விட்டு வெளியேறியிருந்தனர்.

தற்பொழுது குறித்த முகாம் ஏ-9 வீதிக்கு அருகில் ஆசைப்பிள்ளை ஏற்றத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முகாம் வரணியில் அமைக்கப்பட்டிருந்த போது விசாரணைக்கு என அழைத்து வரப்பட்ட மக்கள் குறித்த முகாமில் வைத்து பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளானதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இராணுவத்தினரின் சித்திரவதைகளை வெளிக்கொணரும் வகையில் குறித்த முகாம் விடுவிக்கப்பட்டபொழுது அங்கிருந்த சித்திரவதைக் கூடம் ஒன்றைக் காண முடிந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு ஆதாரமாக அவ்விடத்தில் உள்ள ஒரு அறை முட்கம்பிகளால் அடைக்கப்பட்டும், சுவர்களில் கைரேகைகளும் காணப்படுகின்றது. மேலும் திருகோணமலையில் கடற்படையின் சித்திரவதை முகாம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் இன்னமும் முடிவுறாத நிலையில், வரணி முகாமில் சித்திரவதை முகாம் கண்டறியப்பட்டுள்ளமை பலத்த தாக்கத்தை அரச தரப்பிற்கு ஏற்படுத்தலாம் என கூறப்படுகின்றது. (செ-4)

## இந்திய இராணுவ...

யின் இந்தப் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக் காலையில் இலங்கையின் கூட்டுப் படைகளின் தலைமையகத்தில், கூட்டுப் படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் கோலித குணதிலகவையும், விமானப்படைத் தலைமையகத்தில் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ககன் புலத்சிங்களவையும், இந்திய இராணுவத் தளபதி சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இதையடுத்து இந்திய இராணுவத் தளபதி வடக்கிற்கான பயணத்தை ஆரம்பித்தார்.

எனினும் கடும் மழை பெய்து வருவதால், இரணைமடுவுக்கு அப்பால் பயணத்தை தொடரமுடியாத நிலையில், வடக்கிற்கான பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. (செ-4)

## யுத்தத்தில் வென்...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் முதலாவது ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களினால் அரசியல் கைதிகள் தொடர்பிலும் முன்னாள் ஜனாதிபதியிடம் சில கேள்விகள் வினவப்பட்டன.

இதன்படி, தமிழ் அரசியல் கைதிகள் மூன்று கட்டங்களாக விடுதலை செய்யப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்த நிலையில் குற்றங்கள் இன்றி தடுத்து வைக்கப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், குற்றங்கள் இழைத்தவர்கள் நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், சிறு குற்றங்களை இழைத்தவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குறிப்பிட்டார்.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புப்பட்டு பாரிய குற்றங்களை இழைத்தவர்கள் காணப்படுவார்களாயின் அவர்கள் தொடர்பில் விசாரணை துரிதப்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில்,

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் .

நல்லிணக்கம் தொடர்பில் சர்வதேசம் மிகுந்த அவதானத்துடன் இருப்பதாக தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, அதனை பொறுப்புடன் செயற்படுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இந்த நிலையில் இராணுவ ரீதியில் யுத்தத்தினை வெற்றிக்கொண்டுள்ள போதிலும் இயல்பான சமாதானத்தை இன்னும் வெற்றிக் கொள்ள முடியவில்லை என அவர் சுட்டிக்காட்டினார். (செ-12)

## கல்வியை குழ...

வற்றை அறிமுகப்படுத்தி அம் மாணவர்களைக் கல்வியறிவில் மிகப் பின்தங்கியவர்களாக மாற்றுவதற்கு சிலர் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

கல்வி நடவடிக்கைகளை குழப்பி அதன் மூலம் எமது வருங்காலச் சந்ததியினரை ஒரு அடிமைப்பட்ட சமூகமாக மாற்றுவதற்கும் திட்டமிட்டே பல சதிகள் இங்கே உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

போதைப் பொருள் பாவனையானது புற்றுநோய் உடலில் பரவுவதற்கு ஒப்பானது. ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அறுவை சிகிச்சை மூலமாகவோ அல்லது மின்சாரச் சிகிசசை மூலமாகவோ குணமடையச் செய்து விடலாம். ஆனால் நிலைமை முற்றி விட்டால விளைவுகள் துன்பகரமானதாகவே அமையும.

அதேபோன்றுதான் போதைபொருள் பழக்க வழக்கங்கள் ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் இப் பழக்கங்கள் திருத தப்படலாம். இல்லை என்றால் அப்பழக்கத்தின் கோரப்பிடிக்குள் நின்று தப்ப முடியாது.

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனியுங்கள். அவர்களின் நடவடிக்கைகளில் சந்தேகங்கள் ஏற்படுகின்ற போது அவர்களின் நடவடிக்கைகள் துல்லியமாக கண்காணிக்கப்பட்டு அவர்கள் பிழையான வழிகளில் செல்வது கவனிக்கப்பட்டால் அதற்கான ஏற்ற பரிகாரங்கள் தேடப்படல் வேண்டும்.

எனவே வருமுன் காப்பதே சிறந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## மந்திரிமனை...

வெளியே யாருக்கும் தெரியாத நிலையில், சடலம துர்நாற்றம் வீசியதை அடுத்து கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது

சடலத்தை பார்வையிட்ட பொலிஸார், பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(செ-9)

## விக்னேஸ்வரன்...

கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் மத்தியிலும் நாட்டினுடையதும் நன்மதிப்பை பெற்ற முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனை அரசியலுக்கு அழைத்து வந்துவிட்டு அவருடன் முரண்படுவதோ அவரைப்பற்றி அவதூறாக பேசுவதோ அவர் மீது தேவையற்ற விதத்தில் விமர்சனங்களை முன்வைப்பதோ ஏற்றதொன்றல்ல.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம். அவர் நீதியரசராக இருந்தபொழுது எந்த வழியில் பயணித்தாரோ அதே வழியில்தான இன்றும் பயணித்து கொண்டிருக்கிறார். அவருடைய செயற்பாடுகளில் அதிருப்தி இருந்தால் அது அவருடைய பதவியை மனதில் வைத்து கொண்டு அவருடன் சுமுகமாக பேசி தீர்க்க வேண்டுமே தவிர அதை விடுத்து அவருடன முரண்படுவது உகந்த செயற்பாடு அல்ல.

சிறந்ததொரு மனிதனிடம் பொறுப்பை கொடுத்துவிட்டு அதை திரும்பவும் பறிப்பதற்கு முழு மூச்சுடன் செயற்படுவதை ஒருபொழுதும ஏற்க முடியாது. அவ்வாறு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எத்தருணத்திலும் இடம கொடுக்க முடியாது. அவ்வாறான செயற்பாட்டை தடுப்பதற்கு என்னால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் செய்துகொண்டிருப்பேன்.

திட்டமிட்டசதிதான் என்னையும் விடுதலைப் புலிகளையும் பிரித்து வைத்ததே தவிர என்னுடன் துவேச மனப்பாங்குடன் பிரபாகரன பழகவில்லை. என்னை விடுதலைப் புலிகளிடம் இருந்து வேற்றுமைப்படுத்தியவர் தற்போது மிகப் பெரியபதவியில் இருக்கின்றார். என்னைப்பற்றி 10 ஆண்டுகளுக்கு மேலாக தவறான கருத்தை பரப்பி வந்துள்ளார். அதே தொழிலாக இதைசெய்துவந்தார். என்னால் ஆகக் கூடுதலான நன்மை அடைந்தவர் அவர்தான்.

விடுதலைப்புலிகளுக்கு அறிவுரை ஆலோசனை வழங்கியுள்ளேன்.

அன்பாக பழகியவர்களின் உயிரிழப்பை மட்டும் என்னால் தாங்க முடியவில்லை. அதற்கு மட்டும் கண்டனம் தெரிவிப்பேன்.

அவர்களுக்கு பல வழிகளில் உதவுவதற்குநான் தயாராக இருந்தபோதும் அவர்கள் என்னை பாவிக்கவில்லை.

சில தவறான முடிவுகளை பிரபாகரன செய்யாவிட்டாலும் அவருடன் கூட இருந்தசிலர் அவரை தூண்டிவிட்டனர். ஊடகங்களும் இந்த உடைவுக்கு காரணமாக இருந்துள்ளார்கள் என ஆனந்த சங்கரி தனது நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார். (செ-9)


## முல்லைத்தீவு மாவட்ட கிழக்கு ஒருங்கிணைந்த பண்ணையாளர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம்

வருடாந்தப் பொதுக்கூட்டம்

முல்லை மாவட்ட ஒருங்கிணைந்த பண்ணையாளர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் (08/12/2015) செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத் தலைவர் திரு.த.சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் 14-ம் கட்டை ஒட்டுசுட்டானில் உள்ள எமது சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே 03/06/2015 வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டதற்கு அமைய அவ் அங்கத்தவர்கள் அனைவரும் பொதுச் சபைக் கூட்டத்துக்கு சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அத்துடன் எமது சங்கத்தில் யுத்தத்தின் பின் முகவரி பதிவு செய்யப்படாத அங்கத்தவர்களான சூ.அன்ரனி, செ.இராசலிங்கம், வே.சந்திரதாஸ், வே.சிவரூபன், மு.யசோதரன், கா.செந்தில்நாதன், செ.நிசாந்தரூபன் எனும் அங்கத்தவர்களையும் வருகை தருமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

*தகவல் :*
செயலாளர்
ச.மணிவண்ணன்

(சி-2850)


## செந்தூரனின் கடிதத்தை பிரதி எடுத்தவர் கைது

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி புகையிரதத்தில் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்ட பாடசாலை மாணவன் செந்தூரனினால் எழுதப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கடிதத்தினை பிரதிகள் எடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் குடும்பஸ்தர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நபர் ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்தே, கடிதத்தினை பிரதி எடுத்தவர் என்ற சநதேகத்தில் பாலேந்திரன் பிரசாத் என்ற குடும்பஸ்தரை நேற்று செவ்வாய்க்கிழமை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்தரம் பயிலும் மாணவன ராஜேஸ்வரன் செந்தூரன் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி கடிதம் ஒன்றினை எழுதி வைத்து விட்டு புகையிரதத்தில் பாய்ந்து உயிரை மாய்த்து கொண்டார்.

அந்த மாணவனின் உயிரிழப்பு குறித்து கோப்பாய் பொலிஸார் மற்றும் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் தீவிர விசாரணை மேற கொண்டு வருகின்றார்கள். விசாரணையின் முதற்கட்டமாக, செந்தூரன் உயிரிழந்து சில மணி நேரங்களின் பின்னர் அவரது புத்தக பையில் இருந்த அப்பியாச கொப்பியில் எழுதப்பட்டிருந்த கடிதத்தினை,

குறித்த குடும்பஸ்தர் எடுத்து அருகில் இருந்த போட்டோ பிரதி அச்சிடும் கடையில் கொடுத்து பிரதிகள் எடுத்து அங்கிருந்தவருக்கு வழங்கியுள்ளார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் தற்போது, கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விசாரணையின் பின்னர் குறித்த குடும்பஸ்தரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையினை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

குறித்த மாணவனின் கடிதம் போட்டோ பிரதி எடுக்கப்பட்டதன் பின்பே ஊடகங்களிடம் அம்மாணவனின் கடிதம் கிடைக்கப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

**Raveens EMC - Karaveddy**

Grade 6,7, & 8 admission available for English Medium Students only with conditions.

(C-2830)

P. Easwaranathan
Director 021-226-3321

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனத்துக்கு பின்வரும் பணிநிலைகளுக்கு ஆள் தேவை.

1. Designer (Expert in - Adobe Premier & Photoshop, CorelDRAW)
2. Direct Sales Person (நேரடி விற்பனையாளர் )

(C-2830)

தொடர்புகளுக்கு:
0775385494

**GROUP CLASSES - SCIENCE**

By : Mr.RAGUMAR
Gr : 6 - 11
(English / Tamil Medium)
077 605 9650

(2611)

## உலக எயிட்ஸ்...

றையதினம் யாழ் நகர்ப் புகுதியில் நடை பெற்றது.

சிறைச்சாலை அதிகாரிகளின் மேற் பார்வையில் நடை பெற்ற இந்த விழிப்புணர்வு பேரணியில் சிறைக் கைதிகள் பலர் எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப் புணர்வு சுலோகங் களை ஏந்தியவாறு யாழ் நகரில் உள்ள வீதிகளில் சென்ற னர்.

இப் பேரணி யாழ் சிறைச் சாலையில் இருந்து ஆரம்பித்து யாழ் நகர்ப்பகுதியை சுற்றி மீண்டும் சிறைச் சாலையை சென் றடைந்தது. (செ-9)

**புதிய கல்வியாண்டு - 2016**

**தரமான கல்வியுடன் ஆரம்பமாகின்றது!**

30 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய கல்வியாண்டில் மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.

நிகரற்ற சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின்கீழ்
முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில்

தமிழ்மொழி மூல வகுப்புக்கள்
தரம் 6 முதல் O/L வரை

English Medium Classes
Gr. 6 - O/L

**வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு**

வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு
வெற்றித்தேர்வு வளவாளர்களுடன்
யாழ். முன்னணி ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில்

**தரம் I முதல் தரம் 5 வரை**

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

**02.12.2015**
**புதன்கிழமை**
**பி.ப 4.00 மணி**

**அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

**சயன்ஸ் அக்கடமி**

நல்லூர் - அரியாலை.

**அன்பொளி கல்வியகம்**

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மைதான வீதி, யாழ்ப்பாணம்

**2016 இல் தரம் 2 , 3 , 4**

மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

அனுமதிகளை 30.11.2015 திங்கட்கிழமையில் இருந்து 05.12.2015 வெள்ளிக்கிழமை வரை பி.ப 3.00 மணி தொடக்கம் பி.ப 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே
ஊட்டிடுவோம். இயக்குநர்

(C-2829)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**ஜீவக வாத தைலம்**
Jeewaka Vata Thailaya

முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.


25ml-150ரூபா 50ml-280ரூபா 100ml-450ரூபா

Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara'Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567

(C-2839)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2015ஆம் ஆண்டு நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவை (S.L.A.S) போட்டிப் பரீட்சையில் தேசிய ரீதியில் முதல்நிலையில் தெரிவுசெய்யப்பட்டு தற்பொழுது யாழ்ப்பாண மாநகர சபை பிரதி ஆணையாளராக 01.12.2015 முதல் கடமை ஏற்றிருக்கும் எமது அன்பு நண்பன்

## திரு.அருளானந்தம் சீராளன்

அவர்களையும் (முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் - முல்லைத்தீவு)

இவருடன் மேற்படி பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு வட மாகாண பொது நிர்வாக அமைச்சின் உதவிச் செயலாளராக பதவி ஏற்றிருக்கும் நண்பன்

### திரு.பாலன் முகுந்தன்

அவர்களையும் (முன்னாள் பொதுச்சபை ஆணைக்குழு நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்) பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் : தூபி நண்பர்கள்**
**இமையாணன் , உடுப்பிட்டி.**

(2622)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.